Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் -15 | வெள்ளி-45 | 07-14-சனவரி-2005







## மறுவாழ்வுக்கான உதவிகள் எப்போது...?





# வெற்றுஆரவாரம்

என்றைக்காவது ஒரு நாளைக்கு .
நாம் சொல்ல வேண்டியவற்றை
மெதுமெதுவாக நாம் சொன்னால்
எங்களுடைய குரலை
சிரிக்காமல் எவர் கேட்பார்கள்?
இந்தப் பிச்சைக்காரர்களின்
சோகமாய் முறையிடும் குரலை
உண்மையிலேயே
சிரிக்காமல் யார் கேட்பார்கள்?

துன்பங்கள் தொடங்கிய நாட்களிலிருந்து
அதிகரித்துக் கொண்டிருக்கும்
எங்கள் மன வேதனைபற்றி
கடூரமாக நாங்கள் அலறினால்
எமது பெரிய வாய்களை
எந்தக் கண்கள் பார்க்கும்?
பெரிய பிள்ளைகளின் சிரிப்புக்களால்
உருவாக்கம் பெறும் எந்தக் கண்கள்
எமது பெரியவாய்களைப் பார்க்கும்?

எமது கூக்குரல்களை
எந்த இதயம் செவிமடுக்கும்?
முறையிடும் எங்கள் தொண்டைகளின்
கறுப்பான ஆழத்தில்
புற்றுப்போல் வளர்கின்ற
ஏளனத்துக்குரிய எம் கோபத்தை
எந்த இதயம் செவிமடுக்கும்?

எங்கள் இறந்தவர்கள்
தங்களுள் இறந்தோருடன் வருகையில்
அருவருப்பான அவர்கள் குரல்களால்
எங்களுடன் பேசுகையில்
எமது காதுகள் செவிடாயிருந்தன.
அவர்களுடைய கூக்குரல்களுக்கு
அவர்களுடைய வெறியார்ந்த வேண்டுதல்களுக்கு
எமது காதுகள் செவிடாயிருந்தன

காற்றிலும் நீரிலும்
தங்கள் குறிகளை வரைந்த
அவர்கள் செய்திருப்பவற்றில்
எதையுமே காணமுடியாத
குருடுகளான...ஊமைகளான....
பெறுமதியற்ற இந்த மைந்தருக்கென
இந்தப் பூமியில்
தங்கள் குரல்களை விட்டுப் போயினர்
காற்றிலும் நீரிலும்
தங்கள் குறிகளை வரைந்துள்ளனர்.
எம்மில் இறந்தோரை
நாம் புரிந்துகொள்ளாததால்
அவர்களுடைய குரல்களை
ஒருபோதுமே கேட்காததால்
மென்மையாய் மென்மையாய்
நாம் அழும்போது
எங்கள் மனவேதனை பற்றி
கடூரமாய் நாங்கள் அலறும்போது
எமது கூக்குரல்களை
எந்த இதயம் கேட்கும்?
விம்மியழும் எம் இதயவொலிகளை
எந்தக் காது கேட்கும்?



ஆங்கிலத்தில்: கொபி ஆவூண்
தமிழில் வின்சென்ற் புளோறன்ஸ்

# காரசாரம்

"எரியிற வீட்டில புடுங்கிறது லாபம்" உலகையே குலுக்கிவிட்ட சுனாமி பேரலைகளின் பின் ஓயாத அலைகளாக மக்களைத் தாக்கிவரும் துயரம் அளவு கடந்தது. விலங்குகளைக்கூடக் கலங்கவைத்த இந்தப் பேரலைகளைத் தமது சுயலாபத்துக்காகப் பயன்படுத்திய, படுத்தப் போகின்ற விலங்குகளிலும் கொடியர் இந்தமண்ணில் வாழ்கின்றனர். அநேகமாக ஒரு மரணச்சடங்கு நடைபெறும் வீட்டில் திருடுவதற்கு யாரும் வரமாட்டார்கள் என்பது பொய். அங்கேயும் திருட்டு நடக்கிறது. பாக்கு வெட்டி முதல் தாலிக்கொடிவரை, மிதிவண்டி தோட்டத்துப்பாகல் எனத் திருட்டுப் போன வரலாறுண்டு.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டு அடிபட்ட தமிழர்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காடையர்களிடமிருந்து காப்பாற்றி வழியனுப்பிவைத்த சிங்கள மக்களும் உண்டு .இதோ சிங்களக்காடையர் வாறாங்கள் ஓடுங்கோ ஓடுங்கோ எண்டு கத்தி ஊர்ச்சனம் பதறியோட வீடுகளைக் கொள்ளையடித்தவர்களும் உண்டு.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து நாலில் பெறுமதிமிக்க சொத்துக்கள் வருடக்கணக்காக வளர்க்கப்பட்ட வளர்ந்த பெரு மரங்கள் கட்டடங்கள் அனைத்தும் ஓரிரவில் வீசிய பெரும் புயலில் அழிந்து போக ஊரே பெரும் 'ஹோ' வென்ற வெளியாகிவிட்டது. மயிலிட்டி காங்கேசன்துறைபோன்ற இடங்களில் கடல் புகுந்தது. அன்றும் இடிபாடுகளிடையே மக்களைத்தேடி ஒரு கும்பலும், நகைகள் பொருட்கள் பணம் என இன்னுமொரு குழுவும் அலைந்தது.

இதேபோன்று ஆயிரத்துத் தொளாயிரத்து இம்பத்தொன்பதில் வவுனியா மூன்று முறிப்பின் அருகே யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயில் தடம் புரட்டப்பட்டு மக்கள் ரத்த வெள்ளத்தில் மிதக்க கொள்ளையர்கள் அவர்களது நகைகளைச் சூறையாடினர். ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்து ஏழிலும், ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து மூன்றிலும் இந்தக் கொள்ளைகளில் பாதுகாப்புப் படையினரும் பங்குபற்றி, பொருட்கள், நகைகள், கதவுகள், யன்னல்கள், ஓடுகள், கூரைத்தகடுகள் எனத் தூக்கக் கூடியளவு பொருட்களெல்லாம் திருடப்பட்டன. அவலங்களில் குளிர்காயும் அற்பர்கள் இன்னும் வாழ்கிறார்கள்.

சிறுதுளிநேரத்தில் ஊரையே புரட்டித்தள்ளிவிடுகின்ற அவலங்கள் சட்டம் ஒழுங்கு ஆட்சி எல்லாவற்றையுமே அசைத்து அடித்துப் போட்டு விடுகின்றன. விளைவு, தோட்டுக்காகக் காதறுபட்ட பிணங்கள், வளையலுக்காக கை வெட்டுண்டு கிடந்த பிணங்கள் அநேகம் மீட்டு வரப்போனவர்கள் இவ்வாறு அறுபட்ட பிணங்களைக் கண்டு அதிர்ச்சியடைவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சிறுவர்கள் கடத்தப்பட்டுள்ளனர். என்ற செய்தி அதிர்ச்சி தருவதாக அமைகிறது. வளர்ப்பதற்காகவோ, துஷ்பிரயோகங்களுக்காகவோ, சிறுகாயங்களுடன் வந்து வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட, அகதிகளாகத் தங்கவைத்திருக்கப்பட்ட சிறுவர்கள் இலங்கையடங்கிலும் கடத்தப்பட்டுள்ளார்கள். இதற்காகவே காத்திருந்தவர்கள் யார்? இவர்களின் தேவை என்ன? இந்தக்குழந்தைகள் என்னவானார்கள்? விடைதெரிய வேண்டிய கேள்விகள் இவை.

நீண்டு செல்லும் அரசியல் தந்திரிகள், சுனாமியின் வருகையையிட்டு தமது நிலையைப்பலப் படுத்திக்கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். போட்டி போட்டுக்கொண்டு பாதிப்படையாத மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிய பொருட்களை மடக்கி இடையில் பறித்துக்கொண்ட துரோகிகள் பல இடங்களில் இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இவ்வாறு திரட்டிய பணத்தில் குடித்துக் கும்மாளமிட்டவர்கள் இருந்தார்கள்.

எப்படி இவர்களால் இப்படி நடக்கமுடிகிறது. இது தவறு என்பது அல்லல்பட்டு வந்த மக்களின் நிலையையும் இவர்கள் நேரில் பார்த்திருப்பார்களானால்... கல்லும் கரையும்படி அவர்கள் கதறுவதைக் கண்ட போது உணரமுடியவில்லையா? ஆச்சரியம். மனிதனின் ஆன்மபலம் தவறான திசைக்குள் போய்விட்டது. நான், எனது என்ற ஆணவம், டார்வினின் கூர்ப்பு விதிகளின் பின் பலத்துடன் இணைந்துவிட்டது.

## சமூகக் களைகளை வேரோடு பிடுங்க வேண்டும்

"நல்லவன் வாழ்வான் என்பதல்ல.
வாழ்பவனே நல்லவன்.
வாய்மையே வெல்லும் என்பதல்ல
வெல்லுவதே வாய்மை."

மேன்மேலும் தன்னலத்தில் தனிநிறைவில் கூடிச்செல்வதும், மிகுந்து செல்வதும், அலட்டிககொள்ளாமலே அனைத்தையும் தனக்குச் சாதகம் ஆக்குதலுமே கடவுள் நிலை என்ற டார்வினின் விதியில் குறிப்பாக 'வலுத்தது வாழும்' என்ற தன் அராஜக ஆட்சிக்குப் பாதுகாப்பாகக் கொண்ட வாக்கியத்தை ஹிட்லர் கொண்டிருந்ததுபோல, ருவாண்டாவில் துட்சியினரும், சேர்பியரும், ஆப்கானிஸ்தானில் இருந்து ஈராக்வரை அமெரிக்கா கொண்டிருந்த நிலைப்பாட்டையும் அது யூகோஸ்லோவிய வியட்நாமிய மக்கள் மீது புரிந்தகொடூரத்தையும் கூட விஞ்சிவிட்டதான சுனாமி, மக்களின் மனங்களைக் கூடவா மாற்றி விட்டது. இன, மத அரசியல் மொழி வேறுபாடுகளைக் கடந்து மக்கள் மக்களுக்காக உருகும், உதவிக்கரம் நீட்டும் இவ்வேளையில் கொள்ளையில் ஈடுபடும் இம் மாக்களுக்கு ஒன்று சொல்கிறார் வள்ளுவர். பிறரை அழவைத்து நாம் கொண்ட சொத்து நம்மை அழவைத்துவிட்டுப் போய் விடும் என்பது உண்மை.

இக் கொடியவர்களை மிக இலகுவில் கண்டுபிடிக்கலாம். அதற்கும் மக்கள் உதவியே தேவை. எனக்குத்தெரிந்த ஓரிடத்திலும் பயிர் செய்யாத ஒரு குடும்பம், எழுபத்தேழாம் ஆண்டுக்கலவரம் அடங்கிய பின் அடுத்த மாதமளவில் பாரஊர்தியில் உழுந்து, செத்தல் மிளகாய் போன்ற விளைபொருட்களை ஏற்றிச் சென்றனர். இன்னல் வருமுன் இருந்த வீடுகூட வேய முடியாத நிலையிலிருந்த சிலர் கலவரம் முடிந்தபின் கூரைத்தகடுகளால் வீடுவேய்ந்து கதவு யன்னல்கள் எல்லாம் வைத்துக் கட்டியிருந்தார்கள். திடீர்ப் பணப் புழக்கம், நகைப்புழக்கம் அயலை உசுப்பிவிட்டதால் அகப்பட்ட கொள்ளையர் அநேகம். அயலில் உள்ள மக்கள் விழிப்புணர்வுடன் இருந்தால் இவர்கள் அகப்படுவார்கள் என்ன செய்வது? 'நமக்கென்ன?' என்ற போக்கு ஆபத்தைத்தரும்.

காணாமற்போனவர்கள், இறந்து போனவர்களல்ல, கடத்தப் பட்ட, நன்நோக்குடன் கொண்டு செல்லப்பட்ட சிறுவர்களும் அடக்கம். இவர்களைக் கூட, அயலவர் கண்டுகொள்ளலாம். தகவல் தரலாம். இதன் மூலம் பிள்ளைகளை உயிருடன் பறிகொடுத்த பெற்றாருக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். அதை நீக்கலாம்.

இன்னும் முழுமையாக நிவாரணங்களைப் பெற்று மீண்டும் தமக்கென ஒரு வாழ்விடங்களைப் பெற்று மீண்டும் இவர்கள் இயல்பு வாழ்க்கைக்குப் போகவேண்டும். தொழிலைப் பொறுத்தவரை கடலிலேயே வாழும் வாழ்ந்த மீனவர்கள் உயிரைத்துச்சமாகக் கருதியே மக்களின் தேவைகளை நிறைவேற்றிவந்தனர். இதனால் அவர்கள் சிறிலங்கா கடற்படையாலும். கடற்புயலாலும் கூட ஆபத்தை எதிர்நோக்கினர். ஆயினும் கரையில் மனைவி மக்கள் சுகமாக வாழ வேண்டும் என்ற ஈக லட்சியமே அவர்களுடையதாக இருந்தது. இன்று கடலின் மடியில் அவர்கள் போகும் போதும் கரையிலுள்ள குடும்பங்கள் என்னவாகுமோ என்ற புதிய கவலை அவர்களைச் சூழ்ந்து விட்டது. 'கிபிர், மிக்'கெனப் பல அதிரடித் தாக்குதலைக்கூட சமாளித்து வாழ்ந்த மக்கள் அலைகளுக்கு அஞ்சும்நிலை வந்துவிட்டது. இந்த அவலங்கள் தொடரா வண்ணம் அவர்களுக்கு கடற்கரைக் கப்பாலான, நிறைவான வாழிடங்களை அமைக்க, இலங்கையரசு நடவடிக்கை எடுக்கிறது என்ற செய்தி இந்த மக்களைவிடக் கொள்ளையர்களுக்கே அதிக மகிழ்ச்சி தருவதாக உள்ளது. மண்ணெண்ணெய் நிவாரண முத்திரை 43/73 சதம் என்றிருந்தபோது எந்தப் பங்கீட்டுக் கடையிலும் எழுபத்து மூன்று சதத்துக்கு பொருட்கள் போடுவதில்லை. ஆயிரம் கூப்பன்கள் கொண்ட கடைக்கு ஒவ்வொரு பங்கீட்டிலும் 730.00 ரூபாய்கள் வரும். இது ஒரு சின்னக் கணக்கு, யுத்த அனர்த்தத்தில் இறந்த ஒருவருக்கு மரணவிசாரணை அதிகாரி ரூபா500/= பெற்றபின்பே ஒப்பமிடுதல நடந்தது. அதுவும் இராணுவக் கட்டுப்பாட்டினுள் நிவாரணம் பெற்றவர்கள். தலைக்கு ஐயாயிரம் முதல் பத்தாயிரம் வரை கொடுத்துள்ளனர் என்பது நிரூபிக்கப்படாத உண்மைகள். இனி அனர்த்தத்தில் உயிருக்குயிரான உறவுகளை இழந்த அப்பாவிமக்கள், நடைமுறைகளை அறியாத மக்கள், இப்போதே உயிருடனும் பிள்ளைகளைப் பறிகொடுத்த மக்கள், யார் யாருக்கெல்லாம் தாரைவார்க்கப் போகிறார்களோ? சொந்தப் பிணங்களைத்தேடி ஓடிச் சென்ற உறவினரைத் திருட வந்த (கோஷ்டி) குழு அடிக்கத் துரத்திய சம்பவம்கூட நடந்துள்ளது. இன்னும் கூட மனிதாபிமான உணர்வற்ற சவங்கள் உயிர்வாழ்கின்றன. அயலவர்கள் எச்சரிக்கையாக இருந்தால் கட்டாயம் இவர்கள் சட்டத்தின் கையில் மாட்டுவார்கள். புதிய பணப்புழக்கங்கள், நகைப்புழக்கங்களை ஆராய்ந்து பாருங்கள். சமூகக்களைகளை வேரோடு பிடுங்க அதுவே வழி. மக்கள் துணையின்றி சட்டம் என்ன செய்யும்.

மாயா

# சுனாமி அரசியல்

நிலாந்தன்

'சுனாமி 2004' கொண்டு வந்திருக்கும் சவால்கள் மற்றும் அது ஏற்படுத்தக்கூடிய புதிய திருப்பங்கள் போன்றவற்றைக் கருதிக் கூறுமிடத்து சுனாமி 2004 என்பது ஒரு காலப் பிரிகோடு எனலாம்.

தமிழர்களின் ஆதி வரலாறும் இவ்வாறு கடற்கோள்களின் அடிப்படையில் பிரித்துக் கூறப்படுவதுண்டு.

தமிழர்களின் நவீன அரசியல் வரலாற்றில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்திற்கு முன், பின் என்று பிரிப்பதுபோல ரிவிரசவுக்கு முன் ரிவிர சவுக்குப்பின் ஜெயசிக்குறுவுக்கு முன் ஜெயசிக்குறுவுக்குப்பின் என்று பிரிப்பதுபோல இனி சுனாமி 2004 இற்கு முன், பின் என்றும் பிரிக்க வேண்டியிருக்கும்.

குறிப்பாக நவீன தமிழ் அறிவியல் மற்றும் அரசியல் போன்றவற்றில் சுனாமி கொண்டுவந்திருக்கும் சவால்கள் மற்றும் திருப்பங்கள் நிர்ணயகரமானவை போலத் தோன்றுகின்றன.

முதலாவதாக, தமிழ் அறிவியலில் சுனாமி என்னென்ன புதிய சவால்களை கொண்டு வந்திருக்கிறது என்று பார்ப்போம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமே நவீன தமிழ் அறிவியல் மீது முதலாவது பெரிய சவால்களைக் கொண்டுவந்தது. அது பாடப்புத்தகங்களுக்குள் அடங்க மறுத்ததோடு முற்றிலும் புதிய ஓர் அனுபவமாகவும் காணப்படுகிறது. எல்லாவற்றையும் விட முக்கியமாக விடுதலைப் போராட்டம் தமிழ் அறிவியலை அதிகமதிகம் செயல்பூர்வமானதாக; சமூகபிரக்ஞை உடையதாக; எனவே புரட்சிகரமானதாக மாறவேண்டிய தேவைகளைக் கொண்டுவந்தது. செயலுக்குப் போகும் ஒரு அறிவியலையே தமிழீழ விடுதலைப்போராட்டம் கோரி நிற்கிறது.



சுனாமி 2004 உம் இப்படித்தான் அது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அடுத்தபடியாக தமிழ் அறிவியலின் மீது புதிய நிர்ப்பந்தங்களை கொண்டு வந்திருக்கிறது. இது உயிர்களும் சொத்துக்களும் சம்பந்தப்படும் ஒரு விவகாரம். எனவே இப்பொழுது உடனடியாகத்தேவைப்படுவது தற்காப்புப் பொறிமுறை ஒன்றுக்குப் போகும் ஓர் அறிவியலே.

சில மாதங்களுக்கு முன்பு சேது சமுத்திர விவகாரம் சூடுபிடித்த போது அதுதொடர்பான வாதப்பிரதிவாதங்களில் துறைசார் தகைமையுடைய அநேகமானவர்கள் விலகி நின்றதோடு, தற்காப்பு உணர்வுடன் கூடிய ஒரு வித மௌனத்தைக் கடைப்பிடித்ததை இங்கே சுட்டிக் காட்டலாம். இது விசயத்தில் தமிழ் பகுதிகளில் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள் தமக்குரிய கூட்டு அறிவியல் பங்களிப்பை போதியளவு செய்யவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு.

இதுபோலவே சுனாமி தாக்கியதைத் தொடர்ந்து உடனடுத்து வந்து நாட்களில் உள்ளூர் பத்திரிகைகளில் துறைசார் தகைமையுடையோர் தமக்குரிய அறிவியல் கடமையை செய்த வேகமும் அளவும் போதாது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

இதில் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை திரு அன்ரனி நோபேர்ட் போன்ற சிலரே விதிவிலக்கு. இருவருடைய கட்டுரைகளும் அன்ரனி நோபேர்ட்டின் பேட்டியும் முறையே உதயன், தினக்குரல், வீரகேசரி பத்திரிகைகளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளிவந்திருந்தன. ஆனால், அதேசமயம் கொழும்பில் அங்குள்ள துறைசார் அறிஞர்கள் நிபுணர்கள் போன்றோர் இது



தொடர்பாக உடனடியாகவும் பெருமளவிலும் எழுதிவருவதைக் காணலாம்.

சுனாமி பேரழிவு என்பது இந்தப் பிராந்தியத்தில் உள்ள துறைசார் நிபுணர்கள் அறிஞர்களுக்கு முற்றிலும் புதிய ஒரு அனுபவமாக இருப்பதாக ஈழநாதம் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. ஜெயராஜ் கூறுகிறார். சுனாமி பற்றிய எச்சரிக்கைகள் கிடைத்தபோதிலும்கூட இந்திய அமைச்சர் கபில்சிங் அதைக் குறித்து அசட்டையாகவும் மந்தமாகவும் இருந்ததிற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

உண்மை. இது, இந்தப் பிராந்தியத்தின் நவீன வரலாற்றில் முற்றிலும் புதிய ஓர் அனுபவமே. கடற்கோள்களை ஐதீகங்கள் என்ற முற்கற்பிதத்தோடு அலட்சியம் செய்ததிற்குக்கொடுத்த விலை இது. ஆனால், இது விசயத்தில் அனுபவஸ்தர்களாய் உள்ள நாடுகள் இது பற்றிய அனுபவமற்ற நாடுகளை ஏன் எச்சரிக்கவில்லை?

இதை அறிவியல் மந்தத்தனம் என்பதா? அல்லது இந்தப் பிராந்தியத்தில் பூகம்பம் நிகழாது அல்லது பூகம்பத்தின் விளைவுகள் இந்தப்பிராந்தியத்தைத் தாக்காது என்ற முற்கற்பிதம் அறிவைக் குருடாக்கியதா? அல்லது புலிகளின்குரல் வானொலியில் செய்தி வீச்சு நிகழ்ச்சியில் திரு. தவபாலன் விமர்சித்தது போல இதை மேற்கின் பொறுப்பற்றதனம் என்பதா?

எதுவோ இனி ஒரு சுனாமி தமிழர்களைத் தாக்காதிருக்குமாறு பார்த்துக்கொள்ளும் பொறுப்பு இப்பொழுது தமிழர்களுக்கும் வந்துவிட்டது. இந்தச் சவாலை தமிழ் அறிவியல் எதிர்கொள்ளவேண்டிய வேளை இது. இப்பொழுது தமிழர்களுக்குத் தேவை செயலுக்குபோகும் ஓர் அறிவே. இது முதலாவது.

இரண்டாவதாக சுனாமி 2004, தமிழ் அரசியலில் கொண்டு வரக்கூடிய திருப்பங்கள் பற்றியது.

நாடு சமாதானத்திலிருந்து மெல்ல விலகிச்சென்றுகொண்டிருந்த ஒருதருணத்தில் சுனாமி தாக்கியது. இதனால் ஏற்கனவே நடைமுறையிலிருந்து வந்த அரசியல் நிகழ்ச்சித்திட்டங்கள் குழப்பப்பட்டு விட்டன. இப்பொழுது மனிதாபிமானப் பிரச்சினைகளே நிகழ்ச்சி நிரலின் முதல் வரிசைக்கு வந்துவிட்டன. மனிதாபிமானப் பிரச்சினை என்று வரும்போது அது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்பதல்ல. அதிலும் ஒரு அரசியல் இருக்கும். உதாரணமாக சுனாமிப்பேரழிவை ஒரு சாட்டாக வைத்துக்கொண்டு வெளிநாடுகள் இலங்கைத்தீவினுள் துருப்புக்களை இறக்குவது என்பது சுனாமி அரசியலின் பாற்பட்டதே.

எனவே, இப்பொழுது உள்ள பிரச்சினை மனிதாபிமானப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான அரசியல் எப்படி இருக்கப்போகிறது என்பதே. முக்கியமாக, உதவிகளை நிர்வகிப்பதிலும் விநியோகிப்பதிலும் குறிப்பாக புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் புலிகளின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒரு களயதார்த்தம் உண்டு. இது விசயத்தில் உதவி வழங்கும் நாடுகள் எப்படி நடந்துகொள்ளப்போகின்றன என்பது சமாதானத்தின் அடுத்த கட்டத்திற்குரிய எதிர்பாராத ஒரு தொடக்கமாக அமையக்கூடும்.

எப்படியென்றால்- பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் விசயத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் புலிகளின் மேலாண்மையை ஒப்புக்கொள்வது என்பது சிலசமயம் பின்னாளில் ஒரு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் புனர்வாழ்வு புனர்நிர்மாணப்பணிகளில் புலிகளின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு வளர்ச்சிக்குக் கொண்டு போய் விடக்கூடும்.

இது தவிர்க்க முடியாததும் கூட. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ந்தும் நிவாரணம் வழங்கிக் கொண்டிருப்பதை விடவும் அவர்களை சொந்தக்கால்களில் நிமிர்ந்தெழவைக்கும் விதத்தில் இனி அடுத்த கட்ட உதவிகள் அமைய வேண்டி இருக்கிறது. அதாவது தூர்ந்து போயுள்ள மீன்பிடித் துறையின் அடிக்கட்டுமானங்கள் மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதைச் செய்யும்போது சுனாமி தற்காப்பு ஏற்பாடுகள் யாவும் கவனத்தில் கொள்ளப்படவும் வேண்டும். இப்படிச் செய்யும்போது பல கிராமங்களையும் பட்டினங்களையும் சில நூறு மீற்றர்களுக்காவது நகர்த்தவேண்டியிருக்கும். அதாவது மீளக்கட்டுமானம் எனப்படுவது சுனாமி தற்காப்புக் கட்டுமானமாகவும் அமையவேண்டியிருக்கிறது. எனவே முற்றாகத் தூர்ந்து போயுள்ள ஒரு வாழ்வை; ஒரு துறைக்குரிய அடிக்கட்டுமானத்தை; எல்லாவற்றையும்விட ஒரு சனத்திரளின் உளவியலை மீளக்கட்டியெழுப்புவதென்றால் அதற்குப் பெருமளவு நிதியும் ஏனைய துறைசார் ஆளணி வளங்களும் தேவை. இப்படி ஒரு இயற்கை அனர்த்தத்தை கையாள்வதற்குரிய துறைசார் நிபுணத்துவம் எதுவும் இதற்கு முன்பு தமிழர்களுக்குப் பெருமெடுப்பில் தேவையாக இருக்கவில்லை. இத்தகைய துறைசார் நிபுணத்துவம் இனித்தான் துரிதகதியில் வளர்த்தெடுக்கப்படவேண்டியும் இருக்கிறது.

இந்நிலையில் தேவைகளையும் உதவிகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு மையக் கட்டமைப்பு அவசியம். அது புலிகளிடம் உள் நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஏற்கனவே உண்டு. அது யுத்த தேவைகளையொட்டி உருவாக்கப்பட்டபடைத் துறைச் சிவில் கட்டமைப்பாகவும் காணப்படுகிறது என்பதனாலேயே அது அதிகம் வினைத்திறன் உடையதாகவும் மக்கள் மயப்பட்டதாகவும் காணப்படுகிறது. சுனாமி 2004 இன் மீட்புப்பணிகளை ஒப்பிடுமிடத்து இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளைவிடவும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் மீட்புப் பணிகள் விரைவாக நடப்பதற்கு இதுவே காரணம்.

எனவே அந்த நிர்வாக கட்டமைப்புக்கு ஊடாக புனரமைப்பு புனர்நிர்மாணப்பணிகளைச் செய்வது தான் நடைமுறைச் சாத்தியமாய் இருக்கும். மேலும், இதில் ஏற்கனவே இருந்துவரும் ஒரு நடைமுறையையும் கவனத்தில் எடுக்கவேண்டும். அதாவது- புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் முழு அளவிலும் படையினரின் பிடியிலுள்ள தமிழ் பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவிலும் அரச நிர்வாகம் எனப்படுவது புலிகளின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு அனுசரித்துப் போகும் ஒன்றாகவே காணப்படுகிறது. இந்த நடைமுறையை ஏதோ ஒரு விதத்தில் உத்தியோக பூர்வமானதாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தங்களை சுனாமி 2004 இன் பின்னான நிலைமைகள் கொண்டு வந்திருக்கின்றன.



தேவைகள் பெரியவை மட்டுமல்ல மிக அவசரமானவையும் கூட. எனவே இதிலுள்ள மனிதாபிமானப் பிரச்சினைகளுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கும் இடையில் ஏதோ ஒரு சமநிலையைக் காண வேண்டியிருக்கிறது. அதையும் உடனடியாகச்செய்யவேண்டியிருக்கிறது. அப்படி ஒரு சமநிலையைக் காண்பது என்பது புலிகளின் மேலாண்மையை ஏதோ ஒரு விகிதமளவுக்கு ஏற்றுக்கொண்டால்தான் உண்டு.

எனவே ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் சில அம்சங்களையாவது உடனடியாகவும் நடைமுறைச் சாத்தியமான விதங்களிலும் அணுகவேண்டிய ஒரு அவசரம் கலந்த நிர்ப்பந்தத்தை சுனாமி கொண்டு வந்திருக்கிறது.

முன்பு ரோக்கியோவில் வாக்களிக்கப்பட்ட நிதிசமாதானத்துடன் பிரிக்கப்படவியலாதபடி பிணைக்கப்பட்டிருந்தது. எனவே சமாதான முயற்சிகளில் ஒரு முன்னேற்றம் உண்டாகி ஏதாவது இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு என்று ஒன்று உருவாகும் போதே அந்த நிதி விடுவிக்கப்படலாம் எனும் ஒரு நிலை. ஆனால், இப்பொழுது அப்படியல்ல. சுனாமியின் பெயரால் வரும் நிதி உதவிகளும் ஏனைய உதவிகளும் வேறுஎதனோடும் பிணைக்கப்பட்டிருக்கவில்லை. மாறாக அவை மக்களின் உடனடித்தேவைகளோடு; ஒரு பேரழிவின் காயங்களை சுகப்படுத்துவதோடு தொடர்புடையவைகளாய் இருக்கின்றன. எனவே இது விசயத்தில் விரைந்து செயற்பட வேண்டிய ஒரு கட்டாயம் உதவி வழங்கும் நாடுகளுக்கு உண்டு.

மேலும், இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு ஒன்றுக்கு பெரும்பாலான மேற்கு நாடுகள் கொள்கையளவில் ஆதரவாகக் காணப்படுகின்றன. இப்பொழுது இந்தக் கொள்கையை நடைமுறையில் நிரூபித்துக் காட்டவேண்டிய ஒரு தருணம் வந்திருக்கிறது.

அண்மையில் உதவிகள் தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருந்த கருத்துக்கள் அமெரிக்காவின் வழமையான உத்தியோக பூர்வ நிலைப்பாட்டிலிருந்து சிறிது விலகியிருப்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கும் உதவி போகுமா? என்ற தொனிப்படகேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமெரிக்கத் தூதுவர் இது அரசியல் பிரச்சினை அல்ல மனிதாபிமானப்பிரச்சினை என்ற தொனிப்பட கூறியிருந்தார். (ஆனால் மட்டக்களப்பில் வைத்து இந்தியத் தூதுவர் இதற்கு மாறான கருத்துக்களை தெரிவித்திருந்ததை இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.)

எனவே சுனாமி கொண்டு வந்திருக்கும் மனிதாபிமானத் தேவைகளினடியாகப் புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பை ஏதோ ஒரு விகிதத்திற்காவது அங்கீகரிக்கவேண்டிய ஒருஅவசரத்தேவை உதவி வழங்கும் நாடுகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் ஏனைய பன்னாட்டு நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

உதவி வழங்கும் நாடுகள் இதை எப்படிக் கையாளப்போகின்றன என்பதில்தான். பாதிக்கப்பட்ட மக்களின் விரைந்த மீட்சி மட்டுமல்ல சமாதான முயற்சிகளின் அடுத்த கட்டமும் தங்கியிருக்கிறது.

# அவ நம்பிக்கையைத் தரும் அரசின் நடவடிக்கை

> உலக நாடுகள் வழங்கும் உதவிகள் அனை வருக்கும் சரியாகப் பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும். ஆனால், நடப்புக்கள் அந்த நம்பிக்கையை இழக்கத் தான் செய்கின்றன. வெளிநாட்டு மருத்துவநிபுணர்கள் வடக்கிற்குச் செல்வது பாதுகாப்பற்றதெனக் கூறித் தடுக் கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உள்ளூரில் சமநிலை பேணுவதாகக் கூறிக் கொண்டு வெளிநாடுகளில் பாதிப்புத் தென்னிலங்கைக்கே அதிகம் என்று கூறப்படுகின்றது.

பரணி

இயற்கையின் சீற்றத்திற்கு இனம் கிடையாது, மொழி கிடையாது, மதம் கிடையாது. அனைவரும் இதனால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்தப் பேரழிவிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும் என்று சிறிலங்காவின் சனாதிபதி கூறியுள்ளார். இத்துடன் நிறுத்தியிருந்தால் அவரது கூற்றை வரவேற்றிருக்கத்தான் வேண்டும். ஆனால், அவர் அதற்கும் மேலால் போய் ஒருநாடு, ஒரு தேசியம் என்று உணர்வுடன் நாட்டைக்கட்டியெழுப்பப் பாடுபடவேண்டும் என்று கூறியுள்ளார். இங்கேதான் அவரது உள்நோக்கம் தெளிவாகத் தெரிகின்றது.

ஒரு நாடு, ஒருதேசியம் என்று அவர் எதைக் குறிக்கின்றார். இலங்கைத் தீவை சிங்கள பௌத்தநாடாகக் கருதிக்கொண்டு ஆட்சி நடத்தும் பொழுது ஒரு நாடு என்பதன் பொருள் என்ன? ஒரு தேசியம் என்றால் தமிழ்த் தேசியம், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை, தமிழர் தாயகம் என்ற தமிழ் மக்களின் நிலைப்பாட்டைக் கைவிட்டு சனாதிபதி விரும்பும் ஒரே தேசியத்தைத் தமிழ் மக்கள் ஏற்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதுதானே அதன் அர்த்தமாக உள்ளது. மாவீரர் நாள் உரையில் தமிழீழத்தேசியத்தலைவர் சிங்கள நாட்டுக் கட்சிகளிடம் தமிழர்களின் தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகம் பற்றிய உங்கள் கொள்கைகள் என்ன? உங்கள் நிலைப்பாட்டை வெளியிடுங்கள் என்று கேட்டிருந்தார். அதற்குரிய பதிலை இதுவரை எந்தக் கட்சியும் வெளியிடவில்லை. இந்நிலையில் ஒரே தேசியமாக இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்வோம் என்று கூறுவது தமிழர் தேசியத்தை சனாதிபதி நிராகரிக்கின்றார் என்று தானே பொருள் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

சுனாமியின் அகோரப்பசி இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, இந்தியா, மாலைதீவுகள், இலங்கைத்தீவு என்று தென்கிழக்காசிய நாடுகள் இரையாகியமை அண்மைக்கால வரலாற்றில் இடம்பெறாத நிகழ்வாகும். இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகி, பல ஆயிரம் கோடி ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் அழிந்துள்ளன. இத்துடன் இந்த அலை ஆபிரிக்காவின் கிழக்குப்பகுதியான கென்யா, தான்சானியா, சோமாலியா ஆகிய நாடுகளையும் தாக்கிச் சேதம் விளைவித்துள்ளது. உல்லாசப் பயணிகளாகச் சுற்றுலா வந்த பல்லின மக்கள் உயிரிழந்துள்ளனர். எனவே உலகில் பல நாடுகளிலும் ஏதோ ஒரு வகை இழப்பு. இந்த 2004 டிசம்பர் 26 சுனாமியினால் ஏற்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். எனவேதான் தமிழீழத் தேசியத் தலைவர் தனது இரங்கலில் தமிழ் மக்களுக்கு மட்டும் அனுதாபம் தெரிவிக்காமல் முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்திருந்தார்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் தமிழ் பேசும் மக்களுக்கேற்பட்ட இழப்புக்கும், சிங்கள மக்களுக்கேற்பட்ட இழப்புக்குமிடையே வித்தியாசங்கள் உள. தமிழ்பேசும் மக்கள் இராணுவத்தின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுத் தமது உடைமைகளை இழந்து, மெதுவாகத் தமது பழைய நிலைக்கு வர முயன்று கொண்டிருந்தவர்கள். அதாவது சிறிலங்காவின் ஆமியால் பாதிக்கப்பட்டிருந்த மக்களை சுனாமி முற்றாக அழித்து விட்டது. இந்த வித்தியாசம்தான் வடக்கு, கிழக்கு மக்களுக்கும், தென்பகுதி மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வித்தியாசமாகும்.

ஆனால், சிங்கள, தமிழ். முஸ்லிம் மக்கள் எல்லாவற்றையும் மறந்து "மனிதம்" என்ற உணர்வுடன் உதவிகள் செய்கின்றனர். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குச் சிங்கள மக்கள் உணவு உடை என்பவைற்றைச் சுமந்து வந்து கொடுத்தகாட்சிகள் மனித உணர்வின் வெளிப்பாடுகளாகும். தென்னிலங்கையில் வெள்ளம் வந்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் நல்லுணர்வை பொருட்களாக எடுத்துச் சென்று வழங்கினார்கள். அந்த முதல் காலடி இன்று சிங்களமக்கள் தொடர்ந்தும் காலடிகளை வைக்க வழிசமைத்தது என்று கூறலாம்.

பிரித்தாளும் ஆட்சியால் தமிழ் பேசும் மக்கள் பிரித்திருந்தனர். ஒருவர் மேல் மற்றொருவர் சந்தேகம் கொள்ளப் பல சதிவேலைகள் நடந்தன. ஆனால், இந்த இயற்கையின் சீற்றம் முஸ்லிம்களையும், தமிழ்மக்களையும் கைகோர்த்து வாழ வைத்துள்ளது என்று நம்பக் கூடியவாறு எல்லாம் நடந்து வருகின்றன. துன்பமும், துயரமும் நிறைந்திருக்கும் இவ்வேளையில் மக்கள் எல்லா வேறுபாடுகளையும் மறந்திருக்கும் வேளையில் அரசியல்வாதிகள் ஆதாயம் தேடும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.

1954இன் பின்னர் அமைச்சர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டித் தமிழ்மக்கள் எதிர்ப்புக்காட்டி வந்தனர். அப்பொழுது 1957இல் பெரிய வெள்ள அழிவு வடக்குக் கிழக்குப் பகுதியைத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்தியது. அப்பொழுது பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா வெள்ள நிலைமைகளைப் பார்வையிட வரவிரும்பி அறிவித்தார். அப்பொழுது அவருக்குக்கறுப்புக் கொடி காட்டுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. பிரதமரும் பரிவாரங்கள் இல்லாமல் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்பொழுது தமிழ் சிறி போராட்டமும் நடந்து கொண்டிருந்த காலமும் கூட. வெள்ள அனர்த்தங்களைப் பார்வையிட வந்த பிரதமர் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காரிலேயே தனது பயணத்தை மேற்கொண்டார். இது அன்று நடந்தது. ஆனால் இப்பொழுது பிரதமர் பரிவாரங்கள் புடை சூழ யாழ்ப்பாணம் வந்து மக்களின் வெறுப்புக்கு ஆளாகிவிட்டார். இராணுவ அட்டூழியங்களினால் எல்லாவற்றையும் இழந்திருந்த மக்களை சுனாமி மேலும் துரத்தி அழித்த வேதனையில் மக்கள் இருந்தனர். இந்நிலையில் தமிழ் மக்களை உரிமை இல்லாமக்களாக்கும் ஜே.வி.பியினர் புடைசூழ பிரதமர் வந்ததால் மக்கள் கொதிப்படைந்தனர் எதையும் நாங்கள் இழக்கத் தயாராக உள்ளோம். எமது உரிமைகள் தான் எமக்கு மிக முக்கியம் என்று தமது உள்ளக் குமுறலை மக்கள் காட்டி நின்றனர். அதாவது ஒருதேசியம் என்று சனாதிபதி கூறியகூற்றுக்குத் தமிழ் மக்கள் அதற்கு முதலே பதிலளித்து விட்டனர் என்றுதான் இதைக் கருத வேண்டும்.

உலக நாடுகள் வழங்கும் உதவிகள் அனைவருக்கும் சரியாகப் பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும். ஆனால், நடப்புக்கள் அந்த நம்பிக்கையை இழக்கத்தான் செய்கின்றன. வெளிநாட்டு மருத்துவநிபுணர்கள் வடக்கிற்குச் செல்வது பாதுகாப்பற்றதெனக் கூறித் தடுக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. உள்ளூரில் சமநிலை பேணுவதாகக் கூறிக்கொண்டு வெளிநாடுகளில் பாதிப்புத் தென்னிலங்கைக்கே அதிகம் என்று கூறப்படுகின்றது. அதனால் பெரும் உதவிகளைத் தென்னிலங்கைக்கு அதிகமாகக் கொடுக்கும் திட்டங்களே இவை. அத்துடன் தமிழ் மக்களுக்கு என்று கொண்டு செல்லப்படும் நிவாரணப் பொருட்கள் இராணுவ, பொலிஸ் உதவியுடன் சிங்களப் பகுதிகளுக்குப்பலவந்தமாகக் கடத்தப்படுகின்றன. வழங்கப்படும் நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்படாத சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாறு செய்திகள் பல வந்து கொண்டிருக்கின்றன. எனவே உல்க நாடுகள் வழங்கும் உதவிகளுக்கு என்னநடக்கப் போகின்றது என்ற அச்சம் ஏற்படத்தான் செய்கின்றது.

இந்த நேரத்தில் அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின் பவல் கூறியது இங்கு நினைவு கொள்ளப்படவேண்டியதாகும். உலக நாடுகள் வழங்கும் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சொன்றடைய வேண்டும். எனவே உதவிகளை யுனிசெவ் போன்ற அமைப்புக்களூடாக வழங்கினால் அவ்வுதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையும். அத்துடன் உதவிகளை இவ்வகை உதவிகளைப் பணமாக அந் நிறுவனங்களிடம் வழங்கினால் அவர்கள் தேவையான பொருள்களை அவர்கள் வாங்கி உதவுவார்கள் என்று கொலின் பவல் கூறியுள்ளார். இவரது கூற்றில் பலஉண்மைகள் பொதிந்துள்ளமை தெரிகின்றது. உதவிப்பொருட்கள் சரியாகப் போக வேண்டும் என்ற அவரது கருத்து இங்குள்ள நிலைமைகளை அறிந்துள்ளதைக் காட்டுகின்றது.

எனவே உலகநாடுகள் தாங்கள் வழங்கும் உதவிகள் பாகுபாடின்றி உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சென்றடைகின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது தமிழர் நலன்சார்ந்த அமைப்புக்களின் கடமையாகும்.

---

## சந்தேக மணியத்தார்...

வணக்கம் வாங்கோ பெரியண்ண எப்பிடி இருக்கிறியள்.

வணக்கம் பெரியண்ண இப்பிடி ஒரு இடம்பார்த்துத் தாறன் இருங்கோ....

வணக்கம் பெரியண்ண நீங்கள் என்ன கொண்டுவந்தனீங்கள்....

டேய்....டேய்...மணியம் என்ன ஒரு புதுவிளையாட்டு விடுறாய். வார்த்தைக்கு வார்த்தை வேற வணக்கம், வணக்கம் எண்டு, வாய் கிழிக்கிறாய். பத்தாதுக்கு என்ன கொண்டு வந்தனீங்கள். எங்க எனக்கு இடம் ஒதுக்கிறது எண்டெல்லாம் உன்னுடைய பேச்சு ஒரு மாதிரியாக வேறு இருக்கு என்ன நடந்தது. சொல்லு?

ஓ....ஓ...நீங்கள் பெரியண்ணை என்ன....? நான் மணியண்ண என்ன....? எல்லாம் மறந்து போட்டு அலையடிச்சதில வந்தது ஒரு மறதி அலையடிச் சாப்பிறகு அடிக்கு படை இறக்க அலையில வந்தது. அடுத்த மறதி.

எல்லாம் அண்ண கொடுத்துக் கொடுத்து சில பேருக்கு கை சிவக்க அம்மையாருக்கு வாங்கி வாங்கி கை சிவக்குதாமல்லே. அது சரி மணியண்ண அதுக்கு இப்ப என்ன?

அதுதான் நான் ஒரு நிமிசம் தடுமாறிப் போனன். அதாவது சும்மா இப்ப உப்பவிடிதானே யார்யாருக்கோ எல்லாம் வணக்கம் சொல்றதிலயும், இடம் ஒதுக்கிறதிலயும் இருக்கிற எண்டாப்போல நானும் ஒருக்கால் அப்பிடி நடந்து பார்த்தன்.

மணியண்ண நாங்கள், நாங்களாகவே இருந்திட்டால் எந்தப்பயமும் இல்லை. எங்களுக்கு எந்த சுமையுமில்லை. யார் சுமை ஏத்தினமோ அவையள் ஒருகட்டத்துக்கு அப்பால சுமைய இறக்கத் படாதபாடு படுவினம். படட்டுமே.

இப்ப ஏன் மாணியண்ண உங்களுக்கு குழப்பம்.

அதில்ல பெரியண்ண அமெரிக்காவிலிருந்து, இந்தியாவிலிருந்து, பிரான்சிலிருந்து, பிலிப்பைசிலிருந்து, பிரிட்டனிலிருந்து எண்டு கப்பல், ஹெலிஹொப்டர், விமானங்கள் நவீன ஆயுதங்கள் எண்டு நின்றய வருது உவையல்லாம் எதுக்கண்ண மீட்பு பணிக்கு.

உப கரணங்கள் இல்லாமல் மீண்பு பணி சாத்தியமோ.... நீ என்ன கதைக்கிறாய்.

டேய் எங்களுக்கு இதில ஒரு சந்தேகமும் இல்ல. பயமும் இல்ல. கூப்பிடுறதும் அவையள்தான் சந்தேகப்படுவதும் அவையள்தான்.

என்னவோ இராணுவ ஆய்வாளர்கள் எண்டும், படைத்துறை ஆலோசகர்கள் எண்டும் அரசாங்கத்து ஆலோசகர்களாக அவையளுக்கு தானே இவையெல்லாம் செயற்பட்டவை. இப்ப இவைக்குத்தானே உந்த சந்தேகம் எல்லாம் வந்திருக்கு. இப்பிடியெண்டா 'பாட்டும் நானே... பாவமும் நானே...' எண்ட மாதிரியண்ண.

அது சரி எப்பிடியும் உங்களுக்கு உதுல ஒரு சந்தேகமும் இல்லையோ இருக்கு... இருக்கு....

என்ன சந்தேகம் மணியண்ண.....

உவை கொண்டுவந்த இந்த நிவாரணப் பொருட்களை மக்களுக்கு குடுத்துப் போட்டு இந்த நிவாரணப் பொருட்களைக் கொண்டு வந்த இந்த கப்பல்கள், ஹெலிகள், அதில இருக்கிற உபகரணங்கள் எல்லாத்தையும் திருப்பிக் கொண்டு போவினமோ? அல்லது அரசாங்கத்துக்கு நிவாரணமாக குடுத்திட்டு போவினமோ....

வேற...வேற.....இடங்களில எப்படி நடந்ததோ அதுதான் அநேகமாக இங்கேயும் நடக்கலாம்.

ஆனால், உபகரணங்கள் இல்ல மணியண்ண. மனிசர்ட்ட உறுதிதான் எதையும் தீர்மானிக்கும் எண்டுறது உங்களுக்கு தெரியாதோ.

அது சரி மணியண்ண இண்டைக்கு ஒண்டையும் மறுக்கேல்லயே.

ஓம் பெரியண்ண இப்ப என்னத்துக்கு இதில யோசிச்சுக் கொண்டு இருக்கிறன்...

எனக்குத் தெரியாது உங்ட வீட்டுக்காரரிட்ட கேளுங்கோ.... நான் போட்டு வாறன்.



# சுனாமி ஏற்படுத்தும் மனச் சூறாவளி

துறைமுக அலைகள் தென்னாசியப் பிராந்தியத்தைத் தாக்க முன்னதாக பளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென் தமிழீழ மக்க ருக்கு ஒரு தொகைப் பணம் கைய ளிக்கும் நிகழ்வு நடந்தது. அப்போது வானம் கருகலாக பெருமழையைச் சொரிந்துகொண்டிருந்தது. அங்கு நின்ற ஒருவர் மிக மோசமான விளைவு ஏற்படும் போல் காலநிலை உள்ளது என்று சொன்னார்.

மற்றைய தகவல் தென்னிலங்கையில் ஒரு மதகுருவால் கூறப்பட்டிருக்கின்றது; கிரகங்கள் சாதகமாக இல்லை; நாட்டில் பெரும் அழிவு ஏற்படக்கூடும் என்று நண்பர் ஒருவரிடம் அவர் சொன்னார்.

இதற்கு அடுத்து வந்த நாளில் தென்னாசியப் பிராந்தியத்தைத் தாக்கிய துறைமுக அலைகளால் மாபெரும் மனித அவலம் தாயகத்திலும் சிறிலங்காவிலும் உள்ள கரையோரப் பகுதிகளில் உருவானது.

இதனை வைத்துக்கொண்டு மேற்சொன்ன இருவரது கூற்றுக்களும் பற்றி என்ன முடிவுக்கு வருவது? இந்த இரு விடயங்களும் சாதாரணமாக ஐதீகம், நம்பிக்கை சார்ந்து குழப்பத்தை உண்டு பண்ணக் கூடும். மதகுருவால் கூறப்பட்ட விடயங்கள்



தொடர்பில் சர்ச்சைகள் இருக்கக்கூடு மாயினும் மற்றையவர் கூற்று ஓரளவு யதார்த்தமானதே.

ஏனெனில், இயற்கை மீது ஈடுபாடு, கூர்மையான அவதானம் உள்ள ஒருவரால் அசாதாரண நிலைமைகள் பற்றீ ஓரளவாயினும் தெரிந்து கொள்ளக்கூடுமாக இருக்கலாம். குறிப்பாக பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதி மக்களில் சிலராவது இது பற்றி முன்னர் பேசியிருக்கின்றனர். கடல் வற்றுப் பெருக்குக்கு உள்ளானது பற்றியும் அது ஏதொவொரு விபரீதத் துக்கானது என்று யோசித்தது பற்றியும் கூறுகின்றார்கள்.

தென்னிலங்கையில் தாக்குதலுக்கு உள்ளான பகுதியில் இருந்த சரணாலயங்கள் உட்பட எல்லா இடமும் விலங்குகள் உயிர் தப்பியிருக்கின்றன. இது அவற்றுக்கு இயற்கையின் மாறுதல் பற்றிய நுண்ணுணர்வின் காரணமாக ஏற்பட்ட எச்சரிக்கையாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

, எப்படி இருப்பினும் விஞ்ஞான பூர்வ விளக்கம் இன்றி இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே பலரதும் கருத்தாக இருக்கின்றது. ஆனால், அவற்றுக்கு ஊடாகத் தெரியவரும் ஒரு உண்மை விஞ்ஞானம் தோற்றுவிட்டது என்பதுதான். சாதாரண மனிதர் ஒருவர் முன் சொன்ன எதிர்வு கூறலை அதனால் கூறமுடியாமல் போய்விட்டது; விலங்குகள் தம்மைத் தற்காத்துக் கொண்டது போல மக்களால் தம்மைக் காத்துக்கொள்ள இயலவில்லை. இது விஞ்ஞானம் இயற்கையின் முன் மண்டியிட்டு விட்டது என்பதையே கூறுகின்றது.

ஏற்கனவே சுனாமி அவதான நிலையத்துக்கு இது தெரிந்திருந்தது என்றும் அது சரியானமுறையில் தென்னாசிய நாடுகளின் குடிமக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதன் பின்னால் உள்ள அரசியல், பொருளாதார உள் நோக்கங்கள் மனிதாபிமானத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டன என்று கண்டனம் செய்யப்படுகின்றன.

ஏதோவொரு காரணத்துக்காக விஞ்ஞானம் அல்லது அறிவியல் பாதுகாப்பை தரமுடியாது போன கட்டத்தில் சாதாரண மக்கள் மனம் சோர்ந்து போவதும் இலகுவில் தேற்றக்கூடிய, ஆற்றக் கூடிய சக்திகளின் வலையில் வீழ்ந்து போவதும் தவிர்க்க முடியாததே.

தென்னாசியா அடிப்படையில் மூடநம்பிக்கைகளும் மத சம்பிரதாயங்களும் மலிந்த பிராந்தியமாக உள்ள நிலையில், இது மிகப் பெரும் சவாலாகவும் இருக்கின்றது. அரச, அரச சார்பற்ற அமைப்புக்களால் பொருண்மை புலப்பாட்டுக்கு அப்பால் உடைந்து போன ஆத்மாவுக்கு ஒத்தடம் கொடுக்க இயலாத தருணத்தில் மதம் சார்ந்த எழுச்சிகளில் அவர்கள் வீழ்ந்து போகின்றார்கள்.

அதனைப் பயன்படுத்த இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கைத் தீவில் மதம் சார்ந்த சில அமைப்புக்கள் தேவ கோபத்தின் விளைவாகவே இப் பேரழிவு ஏற்பட்டிருக்கின்றது. பாவிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பிரார்த்தனைகளையும் செய்து வருகின்றன. இது இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவும் மக்களிடம் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றது. இதனை சு.ஞாலவன் கடந்த் வார வெள்ளிநாதத்தில் விமர்சித்து விஞ்ஞான பூர்வ விளக்கங்களையும் முன் வைத்திருந்தார்.

கொழும்பில் மத அமைப்பு ஒன்று இந்த நோக்கிலான தனது சுவரொட்டிப் பிரசாரங்களையும் மேற்கொண்டு பலரின் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. அதனை சுட்டிக் காட்டி சுவரொட்டிப் படத்துடன் செய்தி வெளியிட்ட தமிழ்ப் பத்திரிகைக் காரியாலயம் முற்றுகையிடப்பட்டுள்ளது. அம்மதக் குழுமத்தினரால் கூக்குரல்கள் எழுப்பப்பட்டதோடு பணிகளுக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று ஆலயங்களில் செய்யவேண்டிய வேள்விகள், அபிஷேகங்கள் இருக்கின்றன என்றும் அவற்றை நிலுவையில் வைத்திருப்பதனால்தான் இந்த அவலம் ஏற்பட்டதென்றும் சமூக மட்டத்தில் செல்வாக்குள்ளவர்கள் கூறத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தத் தேசிய அவலத்தைப் பயன்படுத்தி தத்தமது நிலைப்பாடுகளைத் தக்க வைத்துக்கொள்ள முயலும் தரப்பினர்களில் இவர்களும்

**ஞாபகன்**

ஒரு பகுதியினர். உயிரிழந்தும் காயமுற்றும் அந்தரித்துக்கொண்டிருந்த தருணத்தில் அதனை ஒரு பிழைப்பாக மாற்ற முயல்பவர்கள் எங்குமே இருக்கின்றார்கள் என்பதற்கு பல்வேறு உதாரணங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

சடலங்களில் இருந்த ஆபரணங்களை திருடியவர்களும் சடலங்களை மருத்துவ மனையில் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கு பல ஆயிரம் ரூபாய்களை வசூலித்தவர்களும் என்று தென்னிலங்கையில் பல அநாகரிகங்கள் நடந்துள்ளன.

அந்த நிலையில் சிறிலங்கா அரசு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவியளித்ததோ இல்லையோ தென்னிலங்கையின் மனிதாபிமானம் மிக்க சிங்களவர்கள் வண்டி வண்டியாக நிவாரணப் பொருட்களை வட பகுதிக்குக் கொண்டு வந்திருந்தார்கள்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மகத்தான பங்கை அது விடயத்தில் ஆற்றினார்கள்; ஆற்றுகின்றார்கள். உடனடி நிவாரணங்களையும் இனிமேல் எதிர்கொள்ள வேண்டிய வாழ்வின் சவால்களுக்கான உந்துதல்களையும் பொருளாதார ரீதியாக இத்தகைய வழிகள் மூலமாக பெற்றுவிட இயலும்.


ஆனால், இந்த பேரழிவின் பின்னால் உள்ள நீண்ட கால



வீழ்ச்சிகளை எப்படி ஈடுசெய்து கொள்வது என்பதுதான் மிகப் பெரும் சவாலாகும். இது இரண்டு பிரதான வடிவங்களில் உள்ளது.

ஒன்று மனம் சார்ந்தது. மற்றையது ஆற்றல் சார்ந்தது.

மனம் சார்ந்த மிகப்பெரிய உடைவை எஞ்சியிருக்கும் மனிதர்கள் எல்லோரிடமும் உருவாக்கியுள்ளது. ஒன்றாக வாழ்ந்த பெற்றோர், பிள்ளைகள், கணவன், மனைவி, சுற்றம் என பலரையும் இழந்து தனித்துப்போன தனி மரங்களாகவே பேரலை தாக்கிய பிரதேசத்தவர்கள்



எஞ்சியுள்ளனர்.

இது அப்பிரதேசத்தில் மீளக் குடியேறி வாழ்வதற்குரிய ஏது நிலையை விரைவில் ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கமுடியாது. தனித்துப்போன உணர்வுடன் உள்ள அவர்களை அந்த உணர்வில் இருந்து மீட்டெடுப்பது இடிபாடுகளை மீட்டெடுப்பதைவிடக் கடினமானதாகவே இருக்கும். இது இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு மிகப்பெரியதடையாக முன்னிற்கலாம்.

மற்றைய சவால் ஆற்றல் சார்ந்த பலரை இழந்துவிட்டமையாகும். குறிப்பாக கடல் தொழிலில் தேர்ச்சியும் பாரம்பரிய அனுபவம் மிக்க இரண்டு தலைமுறைகள் இழக்கப்பட்டுவிட்டன. இறந்தவர்களில் அதிகமானோர் பெண்களும் குழந்தைகளுமே என்றாலும் தொழில் முறையில் இவர்கள் புறக்கணிக்கக் கூடிய வளங்களாக இருந்ததில்லை.

குறிப்பாக கடல்படு திரவியங்கள் கடலில் இருந்து கரைக்கு வந்த பின்னரான அதன் அதிகமான பொறுப்பை பெண்களே சுமந்து கொள்கிறார்கள். இதனோடு தொழில் உபகரண இழப்பும் சேர்ந்து கனமான சவாலை எம்முன் நிறுத்தப்போகின்றது.

இவற்றை நாம் எவ்வகையில் ஈடு செய்து முன்னகர்வது என்பதே சிந்தனைக்குரியது. இதில் ஏற்படும் தளர்வு அவலத்தைப் பயன்படுத்தி தத்தமது நிலைப்பாடுகளைத் தக்க வைத்துக் கொள்ள முயலும் தரப்பினர்களுக்கே வாய்ப்பாக அமைந்துவிடும்.

இதை நாம் வெற்றி கொள்வது தமிழின விடுதலைப் போராட்டத்தின் முன்னெடுப்புக்குக் கொடுக்கப்படும் உந்துதலாகவும் இருக்கும். இந்த மாபெரும் இழப்பினூடு எமக்கு வீறு தரக்கூடிய செய்தியும் ஒன்று உள்ளது என்பதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்துக்கும் எதிராகப் ;பின்னப்பட்ட இராணுவ முற்றுகைகள் இந்தப் பேரலைகளினோடு செயலிழந்துபோய் விட்டிருக்கின்றன. குறிப்பாக சில வல்லாதிக்க சக்திகளுக்கு இந்தப் பேரலைகளின் தாக்குதல் இராணுவ ரீதியில் பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கின்றது.

ஒரு இயற்கை ஆழ்கடல் துறைமுகத்தின் இராணுவ-பொருளாதார முக்கியத்துவம் ஆட்டம் கண்டு. இயற்கை அனர்த்த ஆபத்து எதுவும் எதிர் கொள்ளாத இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருந்த அதனை மையப் படுத்தியே தமிழர்களுக்கு எதிரான கடல் முற்றுகைகள் திட்டமிடப் பட்டன.

தமிழர் தாயகத்தில் உள்ள இயற்கை துறைமுகத்தை உலகின் பல்வேறு அரச, இராணுவ தரப்புக் களுக்கு குத்தகை பேசியது சிறிலங்கா. அதனூடாக கிடைத்த அரசியல், இராணுவ, பொருளாதார சலுகைகள் எமக்கு எதிராகவே சமாதான காலத்திலும் பயன்பட்டன. சிறிலங்காவில் ஆட்சிபீடமேறிய இனவாத ஆளும் வர்க்கங்கள் அனைத்துமே அதில் பங்கெடுத்தன என்பதை மறந்துவிட முடியாது. அந்த கேந்திர முக்கியத்துவம் இப்போது ஆட்டம் கண்டுள்ளது. அதனால், இலங்கை இனப்பிரச்சினையில் பக்கச் சார்பாக தலையிட்ட வல்லரசுகளின் எதிர்கால நாட்டம் கேள்விக்குள்ளாகியுள்ளது.

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 07 . 01 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com


## மக்களின் விருப்பத்திற்கு மாறாக!...

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா படைத்தரப்பினரிடம், கையளித்ததையடுத்து தமிழர் தாயகத்தில் மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளது.

படைத்தரப்பினர் நிவாரணப்பணிகளை தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதையடுத்து ஏற்கெனவே ஒரு ஒழுங்கின் கீழ் செயற்பட்டுக்கொண்டிருந்த பல மக்கள் நலன்புரி நிலையங்களில் பல்வேறு குழப்பங்களை படையினர் தோற்றுவித்துள்ளனர்.

ஏற்கெனவே கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற மாவட்டங்களிற்கென கொண்டுவரப்பட்ட நிவாரணப்பொருட்களை பாதிப்படைந்த மக்களுக்கு கிடைக்கவிடாது படைத்தரப்பினரின் முகாம்களில் இறக்கி வருகின்ற தகவல்கள் வெளியாகிவருகின்றன.

இதனால் பாதிப்படைந்த மக்களுக்கு கிடைக்கவேண்டிய நிவாரணப்பொருட்கள் மக்களைச் சென்றடையவில்லையென்ற கடுமையான அதிருப்தியை மக்கள் வெளிப்படுத்தியுள்ளதோடு, பல இடங்களில் படைத்தரப்பினரோடு மக்கள் முரண்பட்டும் வருகின்றனர்.

இந்த நிலையில் இச்செயற்பாடானது தமிழ் மக்களை திட்டமிட்டே அரசு பழிவாங்க முயல்வதையே காட்டுகின்றது.

நாட்டில் பாதிப்புற்ற மக்களின் விருப்புக்கு மாறாக அரசு படைத்தரப்பை திணிக்கமுயல்வதானது அந்த மக்களை அடக்கி ஆள முனையும் சர்வாதிகாரப் போக்கையே காட்டுகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு முன்னர் மிகவும் நெருக்கடி நிலையிலிருந்த சமாதான முயற்சியை ஆழிப்பேரலை அனர்த்தத்திற்கு பின்னர் புலிகள் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு மக்களின் மனிதாபிமான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட்டுவரும் நிலையில் அரசு தனது இராணுவப் போக்குடன் கூடிய அணுகுமுறைக்கே முன்னுரிமை அளித்துவருகின்றது.

இந்நிலைமையானது தமிழ் மக்களுக்கு அத்தியாவசியத் தேவையாக எழுந்துள்ள மனிதாபிமானப் பிரச்சினைகள் புறந்தள்ளப் படக்கூடிய ஒரு அபாய நிலையையே தோற்றுவித்துள்ளது.

தாயகத்தில் பாதிப்படைந்துள்ள தமிழ் மக்களின் துயரம் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்படைந்ததால் ஏற்பட்ட துயரத்தோடு மேலும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.

ஏனெனில் படைத்தரப்பின் கட்டுப்பாட்டின் கீழ் இச்செயற்பாடு இல்லாதபோதே மனித நேயத்துக்கு அப்பால் நலன்புரிநிலையங்களுக்குச் சென்ற படைச் சிப்பாய்கள் பாலியல் ரீதியிலான நடவடிக்கைகளிலும் ஈடுபட முயன்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது பல்வேறு உள்நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கருதவேண்டியுள்ளது.

மேலும் ஆழிப்பேரலை பேரனர்த்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு படைத்தரப்பினரின் கீழ் நிவாரண நடவடிக்கை என்பது எந்தளவு தூரம் நடைமுறைச் சாத்தியப்பாடாக அமையப்போகிறது.

அத்தோடு இதே மக்களுக்கு இந்தப் படையினர்தான் பல ஆண்டுகளாக கொடிய போரில் பாரிய மனித மற்றும் உடமை அழிவுகளை ஏற்படுத்தினார்கள்.

நிவாரணப்பணிகளை மேற்கொள்ள முயலும் இதே படையினர்தான் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள பெண்களில் பலரின் கணவன் மாரையும், பிள்ளைகளையும் கொன்றவர்கள். இப்போது ஆழிப்பேர லையால் மேலும் இழப்புக்களை சந்தித்துநிற்கும் நிலையில் படைத்தரப்பினரிடமிருந்தே தமது நிவாரண உதவிகளை பெற வேண்டியுள்ளதென்ற நிலையானது இந்த மக்களை மேலும் உளவியல் ரீதியாக அவர்களை கடுமையான உளப்பாதிப்புக் குள்ளாக்கும்.

நிவாரணப் பணிகளோடு சேர்த்து இந்த மக்களுக்கு பெருமெடுப்பில் உளரீதியான மீட்சிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பல உளவியலாளர்கள் சுட்டிக்காட்டிவரும் நிலையில், அரசின் இந்த நடவடிக்கையானது மக்களை மேலும் உளரீதியான பாதிப்புக்குள்ளாக்கும் என்பது மட்டும் நிச்சயம்,

இந்த நிலையில் இது தொடர்பான விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டிய பாரிய பொறுப்பு சமூக அமைப்புக்களிடம் நிறையவே உண்டு.

## தமிழ் மக்களின் இடரை அரசியலாக்க முயலும் அரசு

இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக சொல்லொன்னா துன்ப துயரங்களுக்கு மத்தியில் போராடி கடந்த இரண்டு வருடங்களாக கிடைத்த யுத்த இடைநிறுத்தத்தின் பின் தமது அன்றாட வாழ்வின் சிறு மாற்றத்தை ஏற்படுத்தி வந்த மக்களின் வாழ்வு கடந்த மாத இறுதியில் ஏற்பட்ட ஆழிப் பேரலையின் அனர்த்தத்தால் தூக்கியெறியப் பட்டுள்ளது.

இதுவரை காலமும் இடம்பெற்ற போரினால் பொருளாதாரத் தடை மீன்பிடித்தடை என தமிழ் மக்களை எந்த வழிகளைக் கைக்கொண்டு சிதைக்க முடியுமோ அவ்வனைத்தையும் கைக்கொண்ட சிறிலங்கா அரசாங்கமும் சிங்களப் பேரினவாத சக்திகளும் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது இழுத்தடித்து வருகின்றது தெரிந்ததே.

இதில் மிக முக்கியமாக தமிழ் மக்களின் அபிலாசைகளை, உரிமைகளை தமிழ் மக்களுக்கு வழங்குவதில் இனவாத கட்சியான ஜே.வி.பியினரே கடும் எதிர்ப்பையும் பிரசாரங்களையும் மேற்கொண்டு தமிழருக்கான அடிப்படை உரிமைகளையோ, அவருக்கான அபிலாசைகளையோ வழங்கக்கூடாது என்பதில் உறுதியாக நிற்கின்றார்கள்.

தமிழ் மக்களின் கிராமங்கள் அழிந்ததை அறிந்த ஹெல உறுமய உள்ளிட்ட சில பேரினவாத கட்சிகள் கொழும்பில் மகிழ்ச்சி கொண்டாட்டம் கொண்டாடியதும் அதன் பின் பாதிக்கப்பட்ட தமிழ் கிராமங்களுக்கென கொண்டு செல்லப்படும் நிவாரணப் பொருட்களின் வாகனங்களைத் திசைத் திருப்பி தமிழ் மக்களுக்கு சென்றடையாமல் தடுப்பதையும் அதன் பின்பு பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றான மணற்காட்டுப் பகுதியைப் பார்வையிட்ட சிறிலங்கா அரசின் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யூ குணசேகர தென் பகுதி அவலங்களையே அங்கு நின்று விபரித்து விட்டு சென்றுள்ளார்.

ஏன் அப்பகுதி அவலங்களும் அங்கு குவிக்கப்பட்டிருந்த மனித உடல்களும் அவரின் பார்வைக்கு எட்டவில்லை. இச் செயற்பாடுகளும் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன.

இந்நிலையில் தான் கடந்த வாரம் பிரதமர் மகிந்தராஜ பக்ஷ,ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச உள்ளிட்ட குழுவொன்று, சுனாமி பேரலையினால் தமது உறவுகளை உடமைகளை இழந்து உடுத்திருத்திருந்த உடைகளுடனே உயிரிற்கு போராடி பாதிக்கப்பட்டு வந்த மக்களுக்கு ஐந்து நாட்களாகியும் அரசாங்கத்தின் எதுவித அடிப்படைவசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்ட மக்களை பார்வையிட சென்றனர்.



தமிழ் மக்களுக்கு ஜே.வி.பி என்றாலே அதாவது சுனாமி அலையைவிட மிக மோசமான ஆபத்தை ஏற்படுத்துபவர்கள் என்று கருதுகிறார்கள். இந்நிலையில்தான் அவர்களுக்கு எதிராக ஆவேச கோசமெழுப்பி தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து திருப்பி அனுப்பியுள்ளனர்.

அவ்வேளையில் தமிழ் மக்கள் சரியானதொரு தருணத்தில் கிழந்தெழுந்திருக்கிறார்கள். ஏனெனில் தென்னிலங்கையிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் பேரினவாத அரசியல் கட்சிகள் தமிழர் துன்பத்தில் விழும் போதெல்லாம் அதனூடாக தமது அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு, அதன் பயனாக அரசியலில் லாபம் தேடி தமது கட்சிகளை வலுவான நிலையில் ஸ்திரப்படுத்திக் கொள்ளவே முனைகின்றனரே யொளிய, தமிழ் மக்களுக்கான அபிலாசைகளை விட்டுக்கொடுத்து அவர்களுக்கான தனித்துவமான அங்கீகாரத்தை வழங்க எந்தவொரு கட்சியும் முன்வருவதாக இல்லை.

ஆகவே துன்பத்தில் துவண்டு தோய்ந்து போயிருந்தாலும் தமிழ் மக்கள் ஒரு போதும் தமது உரிமைகளை வென்றெடுக்க தன் மானத்தை விட்டுக்கொடுக்காதவர்கள் தமிழர் என்பதை ஜே.வி.பி. யினருக்கு தெளிவாகவே புரியவைத்துள்ளனர்.

அந்த ஆழிப்பேரலையின் தாக்கம் தமிழ் மக்கள் மனதில் எப்படி பதிந்து இருக்கிறதோ அதே போன்றே ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் வீரவன்சவின் அரசியல் வரலாற்றில் யாழ் விஜயம் ஒரு கரை படித்த வெட்கக்கேடான நாளாகவே இருக்கும்.

இதன் பின்னணியாகவே, மக்கள் எதிர்ப்புக்காட்டியதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாகவே கடந்த ஞாயிறன்று யாழ் குடத்தனை நலன்புரி நிலைய தொண்டர்களை தாக்கியதோடு, அவ் நிலையத்தையும் தீயிட்டு அட்டகாசம் புரிந்துள்ளனர் சிறிலங்கா படையினர்.

ஆகவே மனித பிணங்களுக்கிடையிலும் பிணவாடைகளுக்கிடையிலும் அரசியல் வாதிகள் அரசியல் லாபம் தேடுவதை நிறுத்தி, அரசியல் தந்திரங்களையும் முகமூடி போட்டு முகங்களையும் போலி அனுதாப கண்ணீர்வடிப்புக்களை நிறுத்திவிட்டு, தமிழ் மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு இன, மத, மொழி என்று பாகுபாடின்றி பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வித்திடுவதே மேன்மையானது.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கும் விடுதலைப்புலிகள் தலைமையிலானதமிழ் மக்களின் மனநிலையை புரிந்துகொண்டு தமிழ் மக்களுக்கானவொரு இடைக்கால அரசொன்றை நிறுவுவதற்கும் ஜே.வி.பியே விட்டுக்கொடுக்காத மன நிலையில் முட்டுக்கட்டையாகவுள்ளது என்பதை தமிழ் மக்கள் நன்கறிவர்.

இதே போன்றே தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் பேரனர்த்தம் காரணமாக தமது உறவு உடமைகளை இழந்து நிர்கதியற்ற நிலையில் இருக்கும் வடக்கு-கிழக்கு தமிழ்மக்களுக்கான நிவாரணப் பணிகளை வழங்குவதிலும் அரசு பல பாரபட்சங்களை காட்டி வருகிறது.

இந்த நிலையில் அரசின் இந்த போக்கானது நிலைமை குறுகிய கால அடிப்படையில் நிலைமையை கட்டுக்குள் வைத்திருந்தாலும் நீண்டகால அடிப்படையில் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தவே செய்யும்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்டிருக்கும் நிலையை ஒரு நீண்டகால அடிப்படையில் பயன் மிகு காலமாக மாற்றிக்கொள்ள அரசு தயாராக இல்லாததையே காட்டுகிறது.

இந்த நிலையில் துயரத்திலிருக்கும் தமிழ் மக்களை பிரதான முதலீடாகக் கொண்டே அரசின் தற்போதைய நிவாரண உதவியில் அரசியல் நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

அத்தோடு தமிழர் பிரதேசங்களுக்கு சனாதிபதி மற்றும் பிரதமர் அமைச்சர்களின் விஜயங்களும் அமைந்துள்ளன.

இந்த அரசின் சூழ்ச்சியை தமிழ்மக்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளனர்.

இதனையே ஜே.வி.பி யினருக்கு யாழில் தமிழ் மக்கள் தெளிவாக்கியுள்ளனர்.




க.ஜெயசீலன்

9/11 ஐப் போலவே 12/26 உம் வரலாற்று புகழ்பெற்ற திகதியாக மாறிவிட்டிருக்கிறது அன்றைக்கு ஆசிய நாடுகள் பலவற்றிலும் மனித அவலங்களை சுனாமி அரங்கேற்றியது. சிறிலங்காவின் தென் பகுதிகளும் தமிழீழத்தின் கிழக்குக் கரையும் அதற்குத் தப்பவில்லை. 30000உறுதிப்படுத்தப்பட்ட சாவுகள், காணாமல் போனவர்களின் கணக்கையும் சேர்த்து 60000 ஆக அதிகரிக்கும் ஏது நிலை காணப்படுகிறது "பொருண்மிய சுனாமி" அடிக்கத்தொடங்கியிருக்கிறது.

இந்த மனித பொருண்மிய அவலங்களை வெளிப்படுத்த வேண்டிய தென்னிலங்கை ஊடகங்கள் 26.12.2004 இல் இருந்து 04.01.2005வரையான பத்து நாட்களும் நடந்து கொண்ட முறை நாகரிக சமூகத்தினர் வெட்கித்தலைகுனிய கொண்டன. 29.12.2004 க்கும் பின்பு ஆயுதப் படைகளின் சேத விபரங்கள் வெளிவரவில்லை.இந்தப் பின்னணியில் புலிகள் பற்றிய செய்திகளை எப்படியான கோணத்தில் இந்தத் தென்னிலங்கைப் போரினவாத ஆங்கில இதழ்கள் கையாண்டன என்று பார்ப்போம்.

02.01.2005 ஞாயிறு சண்டேலீடரில் பிறட்றிக்கா ஜான்ஸ் எழுதிய கட்டுரையின் தலைப்பு. "புலிகள் பிரதேசங்கள் துடைத்தழிப்பு" என்பதாக அமைந்ததோடு முல்லைத்தீவில் இருந்த புலிகளின் முக்கிய முகாம் ஒன்று சுனாமியால் தகர்க்கப்பட்டது; அவர்களது நிலத்தடிக் காப்பரண்களும் கருவி கல நிலையங்களும் தகர்க்கப்பட்டிருக்கின்றன; என்று கூறியிருந்தார். இதே கட்டுரையில் 5அதிகாரிகள் மற்றும் 71 வீரர்கள் முப்படை / பொலிஸ் போல் "கேணல்" என்று குறிப்பிடாமல் மேற்கோள் குறி இல்லாமல் குறிப்பிட்டிருந்தது கொஞ்சம் வித்தியா சமாக இருந்தது.

இதே கட்டுரையில் புலிகளின் கடற்புலிப் பிரிவு (கிட்டத்தட்ட முழுமையாக) அழிக்கப்பட்டுவிட்டது என்றும் 100க்கு மேற்பட்ட சண்டைக் கலங்கள் மூழ்கிவிட்டன அல்லது பாரிய சேதத்திற்கு உள்ளாகிவிட்டன என்றும் கரையோரமாக இருந்த புலிகளின் தொலைத்தொடர்பு நிலையங்கள் கடற்புலித்தளங்கள், ரேடர் நிலையங்கள் ஆட்டிலறிகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன என்றும் ஒருபத்தியில் கூறியிருந்தார்.

பின்பு ஒரு பந்தியில் சாலைத் தளம் ஒப்பீட்டளவில் குறைந்த சேதம் அடைந்தது என்றுகூறுகிறார்.

இன்னும் சில பந்திகள் கடந்ததும் முழுமையாக அழிக்கப்படாத தங்கள் படகுகளை தேட 'பெரும் எண்ணிக்கையிலான தங்கள் உறுப்பினர்களை கடற்புலிகள் ஈடுபடுத்தினர் என்று கூறுகிறார். "கிட்டத்தட்ட முழுமையாக" அழிந்துவிட்ட கடற்புலிகளின் பிரிவில் இருந்து பெரும்

"புலிகளை சுனாமி நொருக்கியதோடு போர் அச்சுறுத்தல் தணிகிறது" என்ற தலைப்பில் அவர் கட்டுரை வரைந்திருந்தார் அக்கட்டுரையிலே;

ஐலண்ட் இப்படிக் கூறியது 'புலிகளின் வள்ளங்களில் பெரும் பகுதியை சுனாமி அடித்துச் சென்றது'

ஞாயிறு கடல் பயங்கரம் பாது




## Changing focus of state media

TURES

Sunday Island January 2, 2005 - Page 13

## sunami deals a crippling blow to LTTE

# வெறும் வாயை மெல்லும் சிங்கள, ஆங்கில ஊடகங்கள்

காப்புப்படையினரதும் சிறப்பாக கடற்படையினரதும் புலிகளுடைய வளங்களுக்கும் குறிப்பிடத்தக்களவு சேதம் விளைவித்துள்ளது என்றும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் பலவற்றைத் தாக்கியழித்த சுனாமி புலிகளை மட்டும் தப்பவிட்டிருக்காது என்றும் அவர்களுடைய வளங்களில் அநேகமானவை கிழக்குக் கரையிலேயே இருந்தன; அவர்களுடைய நடவடிக்கை ரீதியான கலங்கள் சுனாமிக்குத் தாக்குப் பிடித்திருக்கமுடியாது அவற்றுள் அரைவாசியையாவது இழந்திருப்பார்கள் எனவும் படைஅதிகாரிகள் தெரிவித்தனர் என செய்தி வெளியிட்டிருக்கும் இதே ஐலண்ட் பத்திரிகை புலிகளின் ஆட்டிலறி வான் பிரிவு தரைவழிப் படைகளுக்கு [illegible] ஏற்படவில்லை என்று கூறி தன்னைத் தானே மறுதலித்துக் கொண்டுள்ளது.

வின்சென்ற் புளோறன்ஸ்

வேண்டிய விதத்திலேயே அமைந்தது.

வடக்குக் கிழக்கின் பொது மக்களது சேத விபரங்களை பெருமளவில் இருட்டடிப்புச் செய்த இந்த ஊடகங்கள் தென்னிலங்கை சேதங்களையும் 28ஆம் திகதி வரை பெரிதாக வெளியிடவில்லை. கொழும்பிலிருந்து 1500 பேருடன் புறப்பட்ட புகையிரதப் பயணிகளில் கிட்டத்தட்ட அனைவருமே பலியாகியதைக் கூட வெளியிடாத இந்த ஊடகங்கள் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டதாக கூறப்படும் சேதங்களை மட்டும் தங்கள் தகவல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி 29ஆம் திகதியிலிருந்து வெளியிடத்தொடங்கின. இராணுவத்தின் இழப்புக்களை வெளியிட்ட அதே கையோடு புலிகளின் சேதங்கள் என்று அவை கூற விரும்பியவற்றை அல்லது ஆட்சிப் பீடத்தினர் "கேட்க விரும்பிய" வற்றை அவை வெளியிட்டன.

இதற்கு அடியெடுத்து கொடுத்தவர் வேறுயாருமல்ல சந்திரிகாதான். புலிகளின் வளங்கள் பெரும்பாலும் சுனாமி கொண்டு போய் விட்டது. இனி அவர்கள் போருக்கு வரமாட்டார்கள் என்று கூறியவர் அவர்தான்.

அதையும் விட 28.12.2004 அரசு ஊடகங்களின் தலைவர்களுக்கென நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் கூட்டத்தில் இந்துசமுத்திரப் பிராந்தியம் முழுவதுமே சுனாமியினால் பாதிக்கப்பட்டதாகக் காட்டும் விதத்தில் செய்திகளை வெளியிடும் படியும் சிறிலங்காவைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் இழப்புக்களை பூதாகாரமாக்கி காட்டும் படியும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. (ஆதாரம் சண்டேலீடர் 02.01.2005 Pot Shots - பக் 25)

அரச ஊடகங்கள் மட்டுமல்லாது ஏனைய தென்னிலங்கைப் பத்திரிகைகளும் இதையே வேத வாக்காக கொண்டுவிட்டதுபோல் நடந்து

* புலிகளின் படைய இயந்திரம் சுனாமியால் மோசமாக சேதமாகியிருக்கிறது.
* கடற்புலிகளின் பிரதானமுகாமான சாலை மிக மோசமான சேதத்திற்கு உள்ளாகி இருக்கிறது.




தரப்பில் பலியானதாகவும் எழுதியிருந்தார்.

02.01.2005 சண்டே ஐலண்டின் பாதுகாப்பு செய்தியாளர் ஒருபடி மேலே போய் முடமாக்கும் வகையிலான அடியை சுனாமி புலிகளுக்கு வழங்கியது என்று தலைப்பிட்டு கட்டுரை வரைந்திருந்தார். 200க்கும் மேற்பட்ட புலிகள் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகவும் பிரமாண்டமான அளவில் புலிகளின் படைக்கலங்கள் அழிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட அவர், தலைவர் பிரபாகரனையும் விட்டுவைக்கவில்லை. அவரை வெளியில் எங்கும் காணவில்லை என்றும் அவர் சுனாமிக்கு பலியானாரா என்பது பற்றி உறுதியான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை என்றும் (ஏக்கத்துடன்)குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் புலிகளின் முக்கிய தளபதிகள் அனைவரும் மீட்புப் பணியில் நின்றதாக கூறியிருந்தார். முதல் தடவையாக எமது தளபதிகளின் கேணல் நிலையை வழமை எண்ணிக்கையிலான உறுப்பினர் மீண்டதன் மர்மத்தை அந்த செய்தியாளரிடம் தான் கேட்கவேண்டும்.

02.01.2005 சண்டே ரைம்ஸ் பத்திரிகை சுனாமியின் போது பிரபாகரனும் சூசையும் கொல்லப்பட்டதாக கூறிவிட்டு அதை தாமே மறுப்பது போல் வதந்திகளை முறியடிக்கும் விதத்திலே பிரபாகரன் சுனாமியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து தமிழில் ஒப்பமிட்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார் என்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு பேட்டியளிக்க சூசை அனுமதிக்கப்பட்டடிருக்கிறார் என்றும் எழுதியிருக்கிறது. "தமிழில் ஒப்பமிட்டு" என்பதை தடித்த எழுத்துகளில் போட்டு ஏதோ அப்படி ஒப்பமிடுவது மகாபாவம் என்று காட்ட முனைந்திருக்கின்றனர்.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தது போல் அமைந்தது இக்பால் அத்தாஷின் 02.01.2005 சண்டே ரைம்ஸ் கட்டுரையாகும்.

அவரது தலைப்பு இன்னும் சுவையானது;

* கரையோரம் இருந்த முகாங்கள் சிறு பிரிவுகள் இவ்வாறே சேதப்பட்டுள்ளன.
* திங்கள் (27.12.2004) அளவிலே புலிகளின் சண்டையிடும் உறுப்பினர்கள் 2100 பேர் கொல்லப்பட்டு விட்டார்கள் என சண்டே ரைம்ஸ்சுக்கு அறியக் கிடைத்தது.
* யாழ் / நாகர்கோவில் பகுதிகளில் 250க்கு மேல் புலிகள் பலியாகியதாக கூறப்படுகிறது.
* முல்லை / சாலை /நாயாறு அயற் பகுதிகளில் 1400 க்கு மேற்பட்ட புலிகள் பலியாகினர்.
* சம்பூர் / கூனித்தீவு / கொக்குத்தொடுவாயில் அதிகளவில் பலி.
* வெருகல் / கதிரவெளி / வாகரை அயற்பகுதிகளில் 150 புலிகள் பலியானார்கள் என்று கூறப்படுகிறது.
* இத்தொகைகள் அதிகரிக்கலாம் என தகவல் வட்டாரங்கள் கூறுகின்றன என்று அத்தாஷ் கூறியிருக்கிறார்.

இதேபோன்று 29.12.2004

இந்தச் "செய்தியாளர்"களுக்கும் "ஆய்வாளர்"களுக்கும் பொதுவான ஒரு விடயமாக அவர்களுக்கு உண்மையான கள நிலைமைகள் தெரியாது என்பது இருக்கிறது. முன்பு 'லங்கா புவத்' இருந்தது. அதுகோயபல்சுக்கு பெரியண்ணா முறை. புலிகளின் தாக்குதலில் அல்லது இராணுவத்தின் நடவடிக்கையில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டால் (!இராணுவத்திற்கு 10 புலிகள் என்ற கணக்கில்) 100 புலிகள் கொல்லப்பட்டார்கள் என்று லங்காபுவத் கூறிவிடும். ஆகாச புளுகர்களுக்கு லங்காபுவத் என்று தமிழ் மக்கள் பெயர் வைக்கும் அளவிற்கு லங்காபுவத் 'நம்பகத் தன்மை' யின் குறியீடாக இருந்தது.

லங்காபுவத்தையே தோற்கடிக்கும் அளவிற்கு தங்கள் மன விகாரங்களையும் படை அதிகாரிகள் 'தகவல் வட்டாரங்கள்' என்ற பெயரில் அனாமதேயமாகத்தரும் ஊடகக் குறிப்புக்களையும் வெளியிட்டு பொச்சம் தீர்த்துக்கொள்ளும் இந்த பத்திரிகைகள் ஒரு போதும் திருந்தப் போவதில்லை. சுனாமி வரப் போகும் தகவலை தருவதற்கு முழுமுயற்சி எடுக்காமல் இப்போது நிவாரண உதவிகளுடன் இத்தீவில் கால் வைக்க முயலும் மாகானுபாவர்களை கண்டிக்க வக்கில்லாமல் ஆதாரமற்றசெய்திகளை வெளியிடுவதோடு பலசந்தர்ப்பங்களில் அவற்றோடு முரண்படும் செய்திகளையும் தாங்களே வெளியிடும் இவர்களைக் கண்டு பரிதாபப்படுவதை தவிர எமக்கு வேறு வழியில்லை

# எதிர்பார்ப்பதில் பயனில்லை

2004 ஆம் ஆண்டின் இறுதி மாதம் [illegible] பகுதிகளை பெரும் பாடாய்ப் படுத்தி யிருக்கிறது. தொடர்ச்சியான மழை அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு என்பதுடன் சூறாவளி [illegible] கொந் தளிப்புக் குறித்து [illegible] எச்சரிக்கைகள் [illegible] கப்போவதான எச்சரிக்கையை வழங்கி [illegible] முடியும் என்றும். ஆனால், அசட்டை செய்யப்பட்டு விட்டதென்ற குற்றச்சாட்டு பல தரப்புக்கள் மீதும் சுமத்தப்படுவது உண்மையே. ஆனால் இதைவிட கொடூரமான செயல்கள் இப்பொழுது அதிகாரவர்க்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதும்



மத்தியில் ஒரு [illegible] வித்திருந்தது. சூற[illegible] முன்னுக்குப் பின் முரண[illegible] வேறு அமைப்புகள் நிபுண[illegible] வெவ்வேறு கருத்துக்களையும் தெரிவித்து வந்தபோதும் [illegible] குறித்த அச்சமும் [illegible] உணர்வும் மக்கள் மத[illegible] மாதம் முழுவதும் [illegible] செய்தது. ஆனால், இன்று வாழ்கின்ற தலைமுறை அனுபவித்திராத ஒரு பேரழிவு அனர்த்தத்தை எவருமே ஊகித்தறியவில்லை.

இது குறித்த முன் அனுப வமோ முன் எச்சரிக்கையோ அற்ற நிலையே இப்பேரழிவுக்கும் காரண மாக அமைந்தது.

இவ்வாறான பேரலை தாக் [illegible] மேற்கொள்ளப்படப் [illegible] சந்தேகத்துக்கு இடமற்ற விடயங்கள்.

அதாவது பேரழிவைச் சந்தித்து அதிலிருந்து உள உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு நிற்கின்ற மக்களுக்கு ஆட்சியாளர் மேற் கொண்டுவரும் நடவடிக்கைகள் பெரும் விரக்தியை ஏற்படுத்தக்கூடி யவை.

இந்த அனர்த்தம் காவு கொண்டவர்களில் 40 வீதமானவர்கள் சிறார்கள். இதனால் பெரிதும் பாதிக் கப்பட்டவர்களும் சிறார்கள்தான். ஏனெனில் பெற்றோரையும் உற் றோரையும் நொடிப்பொழுதில் இழந் தது மட்டுமல்லாது, இந்தப் [illegible] லைவ நேரில் பார்த்ததால் இந்தப் பிஞ்சு மனங்களில் ஏற்பட்டுள்ள காயம் எத்தகையது என்பதை மக்களால் சனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறும் அரசியல் வாதிகளுக்கும் புரியவில்லை. மக்களின் வரிப்பணத்தில் ஊதியம் பெற்றுக்கொண்டு அவர்களின் துன்பத்தில் குளிர்காய நினைக்கும் அதிகாரவர்க்கத்திலுள்ள சிலருக்கும் தெரியவில்லை.

இந்த கடற்பேரலையால் ஏற்பட்ட கோர விளைவைக் கண்டு தமக்கு நேரடிப்பாதிப்பு ஏற்படாத சாதாரண பொதுமக்கள் துடித்த அளவிற்கு மக்கள் பிரதிநிதிகள் எனக்கூறும் ஆட்சியாளரும் அவர் களின் அடிவருடிகளாகச் செயற்படும் அதிகாரவர்க்கமும் துடிக்காதது மட்டு மல்ல வெந்த புண்ணில் வேல்பாச் சுவதுபோன்று செயற்பட்டுவரு வதுபெரும் சாபக்கேடுதான்.

அரசியல் ரீதியாக எவ் வளவு வேறுபாடாக இருந்தாலும் எவ்வாறுதான் இன, மத, மொழி ரீதியாக மாறுபட்டவர்களாக இருந் தாலும் இந்தப் பேரழிவைக் கண்டு, அதில் பாதிக்கப்பட்டோருக்கு உதவ சர்வதேச ரீதியாக மக்கள் முன் நிற் பதை பல்வேறு செய்திகளும் வெளிப் படுத்துகின்றன.

இவ்வழிவு குறித்த செய்தியானது சம்பந்தமற்ற நாடுகளின் மக்களின் புத்தாண்டுக் கொண்டாட்டங்களைக் கூட பிரார்த்தனை நிகழ்வுகளாக மாற்றி அமைத்திருக்கிறது. மனிதாபி மானத்தை வெளிப்படுத்தும் செயற் பாடுகளே இந்தப் பேரழிவு ஏற்பட்ட நாள் முதல் வெளிப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்த மக்கள் மீது சிறிலங்கா ஆட்சியாளர்கள் சிறிதளவு கூட கருணை கொண்டதாகத் தெரிய வில்லை. மனிதாபிமானம் கொண்ட சிங்களப் பொதுமக்கள் இந்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு தம்மால் ஆன உதவிக்கரம் நீட்டியிருக்கையில் பழுதடைந்த அரி சியை "நாட்டைக்காக்கும்" கூட்டம் மக்களுக்கு வழங்கியிருக்கிறது. மக்களின் மனோ நிலையைப்புரிந்து கொள்ளாமல் அவர்களை விரட்டி யடித்து அவர்கள் தஞ்சம் புகுந்திருந்த பாடசாலையை எரியூட்டியிருக்கிறது.

"தேசப்பற்றுள்ள" கூட்ட மொன்று வழிப்பறியில் இறங்கி இதிலும் தனது பேரினவாதப் போக்கை வெளிப்படுத்தியிருக்கிறது. சரி "தேசப்பற்று" என்று வாய் கிழியக் கத்தும் இவர்கள் இவ்வாறு பறித்த வற்றை பாதிக்கப்பட்ட சிங்கள மக் களுக்கு வழங்கியிருந்தாலாவது ஓரளவு இவர்களை மன்னிக்கலாம். ஆனால், 150 லொறி பொருட்கள் எங்கு என்றே தெரிய வில்லை இவர்களுக்கு அதிகாரி களும் துணைபோயிருக்கிறார்கள்.

எப்பொழுது பாதிக்கப்படா தவர்களுக்கு இப் பொருட்கள்போய்ச் சேர்கிறதோ அப்பொழுதே ஆட்சி யாளர்களும் ஊழல் புரியும் அதிகார வர்க்கத்தினரும் என்ன செய்யப் போகிறார்கள் என்பது வெளிப் படுகிறது.

இவ்வாறான மனித நேயம் சற்றுமே இல்லாதவர்கள் இனவாதம் பேசுவதும் சுயநலத்துக்காகவே. மக்களுக்காக கண்ணீர் விடுவதும் சுயநலத்துக்காகவே. இவர்கள் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக் களுக்கும் ஏன் மனித குலத்துக்கே எதிரானவர்கள்.

பொது நிறுவனங்கள் வழங்கிய உதவிப் பொருட்களைக் கூட இவர்கள் கையாடி வருகையில் சர்வதேசமும் வழங்கும் பாரிய உதவி மீது இவர்கள் எத்தகைய ஊழல் களைப் புரிவார்கள் என்பதை இப் பொழுதே கூறிவிடமுடியும்.

அதேவேளை இப்பேர னர்த்தம் ஏற்பட்டு ஒருவாரம் ஆன நிலையில் கூட இந்த மக்களுக்கு உதவவோ அவர்களின் அவலத்தைப் பார்க்கவோ உணரவோ முடியாத வர்களிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது.

**வேலவன்**

---

# நேர்நோக்கு

சுனாமி ஆழிப்பேரலை [illegible] தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை[illegible] மீட்புப்பணிகள் நிவாரணப்பணிகள் [illegible] புறம் நடைபெற்று வருகின்றன. சுனாமி பேரனர்த்தத்தினால் இதுவரையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 29744 பேர் வரை உயர்ந்துள்ளது. இவ்வறி வித்தலை கடந்த 02ஆம் திகதி உத்தி யோகபூர்வமாக இலங்கை அறிவித் துள்ளது. மேலும் 5240 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர். இவற்றைவிட 16655பேர் வரையில் காயமடைந்துள்ளனர்.

# இழப்புகளை ஈடுசெய்ய எல்லோரும் உழைக்க வேண்டும்

8லட்சத்து ஐயாயிரத்து 978 பேர் சொந்த வாழ்விடங்களை விட்டு விட்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். இவ்வாறு உயிரிழந்துள்ள வர்களில் தமிழர் தாயகத்தில் மட்டும் 18807 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதில் அம்பாறையில் 13128 பேரும், மட்டக்களப்பில் 2254பேரும் வடமராட்சி யில் 780 இற்கு அதிகமானோரும், முல்லைத்தீவில் 1687 பேரும் திருமலை யில் 958பேரும் உயிரிழந்துள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. 10824 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர். ஒருலட்சத்து 79 ஆயிரத்து 308பேர் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். (இந்த புள்ளிவிபரங்கள் இக்கட்டுரை எழுதப்படும்வரை) இவ்வாறு அவலங்களையும் அழிவுகளையும் தாங்கி சொந்த வாழ்விடங்களைவிட்டு இடம் பெயர்ந்து உறவுகளை இழந்து உடமை களையும் இழந்து முகவரி அற்றவர்களாக வாழ்ந்து வரும் மக்களை துன்புறுத்தி வேடிக்கை பார்க்கும் கூட்டமும், இவர் களுடைய சொத்துக்களை சூறையாடும் கூட்டமும் ஈவிரக்கமற்ற செயற்பாடுகளை செய்த வண்ணமுள்ளன.

அந்த அடிப்படையில் கடந்த முதலாம் திகதி சுனாமி கடற்கொந் தளிப்பால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த குடத்தனை மத்தி நலன்புரி நிலையத்திற்குள் புகுந்த சிறிலங்கா படையினர் பொதுமக்கள் இருவரும் அங்கு கடமையில் இருந்த அரச சார்பற்ற நிறுவனப்பிரதிநிதி ஒருவரும் தாக்கப் பட்டனர். குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலைநலன்புரி நிலையத்திற்குச் சென்ற இரவு வேளை படையினர் அங்கு மிலேச்சத்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டனர். இது ஒருபுறமிருக்க கடந்த சனிக்கிழமை நடுக்குடத்தனை நலன்புரி நிலையத்தினை சீருடையினர் எதிர்த்து அட்டகாசம் செய்தனர். நடுக்குடத்தனை அமெரிக்க மிஷன் பாடசாலையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள் தங்கியிருந்த கொட்டகை ஒன்றை சீருடையினர் எரித்து அழித்திருக்கின்றனர். அங்கிருந்த பொதுமக்கள் சிலர் தாக்கப் பட்டுள்ளனர். அந்த நலன்புரிநிலையத் திற்கு பொறுப்பாக இருந்த ஒருவரும் தாக்கப்பட்டுள்ளார். இதன் முக்கியகாரணம் இங்கு தங்கிருந்த மக்களுக்கான உணவு வழங்க படையினர் முற்பட்ட வேளை அதனை மக்கள் எதிர்த்தமை காரணம் எனத் தெரியவருகின்றது. இதனை மக்கள் எதிர்த்தமைக்கான காரணம் கடந்த 29 ஆம் நாள், சிறிலங்காப் படையினர் நலன்புரிநிலையம் ஒன்றிற்குச் சென்று அங்கு தங்கியிருந்த மக்களுக்கு 1500 இறாத்தல் பழுதடைந்த பாண், பாவனைக்கு உதவாத அரிசி என்பவற்றை விநி யோகித்தனர். இதனால் இவ்வாறு நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தொற்று நோய்களுக்கு ஆளாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்படக்கூடும் . என்பதற் காகவே இவ்வாறு மக்கள் எதிர்ப்புத் தெரி வித்தனர்.

இது ஒரு புறம் இருக்க எங் களுடைய உறவுகளாக எங்களுக்குள் வளர்ந்தவர்கள் இவ்வாறு இயற்கை அனர்த்தத்தினால் உயிரிழந்துள்ளனர். உடமைகளை இழந்துள்ளனர். ஒரு சிலர் குறிப்பாக இதில் பாதிக்கப்படாதவர்கள் என்றே கூறவேண்டும். கிளிநொச்சி நகரின் சந்தைப்பகுதியில் சிறுவியாபாரம் செய்யும் முஸ்லிம் வியாபாரிகள் இரண்டு லட்சம் ரூபாவிற்கும் அதிகமான புதிய உடுபுடவைகளை உடனடியாக பாதிக் கப்பட்ட மக்களுக்கு இலவசமாக வழங் கினர். ஆனால், சிலர் பொருட்களை பதுக்கி வைத்துவிட்டு வியாபார நிலையங்களையும் மூடிவிட்டு தலைமறை வாகி திரிந்தனர் இச்சம்பவம் யாழ்ப்பாணத் திலும் நிகழ்ந்துள்ளது.

இவ்வாறு இவை ஒருபுறம் அழி வுக்குட்பட்ட பகுதிகளில் சென்று மீட்புப் பணிகளைச் செய்து இறந்த உறவுகளின் உடல்களை உடமைகளை மீட்பதற்குப் பெரும் சிரமப்பட்டு தன்னார்வ உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் பணியாளர் களும், களத்திலே நின்று களமாடி வந்த போராளிகளும் இந்த மீட்புப் பணிகளை செய்ய வேடிக்கை பார்ப்பதற்கும், திருட் டுக்கும் என ஒரு சமூகம் சென்றிருந்தும் அதனுடைய செயற்பாடுகளை முன் னெடுத்ததும் சகலரும் அறிந்தது. இது ஒருபுறம் அழிவுக்குள்ளான பகுதிகளில் உறவினர்கள் எவரும் இல்லாதபோதும் அந்த இடம் பற்றித் தெரியாதவர்களும் மீட்புப்பணிக்குச் செல்லாமலும் திருட் டுக்காக சென்ற வர்களும் இந்தத் தடுப்புப் பிரிவின ரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.



இழப்பு என் பது எல்லோருக் கும் ஏற்படும் ஒரு நிகழ்வுதான். அந்த இழப்பு ஏற்படும் போதுதான் அதனு டைய தாக்கம் புரியும். அவ்வாறு இவ் அனர்த்தத்தினால் தம் உறவுகளையும் உடமைகளையும், இழந்து முகவரி அற்றவர்களாக வாழத் துடிக்கும் இந்த எமது உடன் பிறப்புக் களின் எஞ்சிய உடமைகளைச் சூறையாடு வது. அல்லது அவர்களுக்கு உதவாமை போன்ற செயற்பாடுகளைத் தவிர்த்து ஒற்று மையாக இழந்த எமது உறவுகளின் இழப் புக்களை ஈடுசெய்ய வேண்டும் என்பதில் நாம் எல்லோரும் உறுதியாக இருக்க வேண்டும்.

**சு. பாஸ்கரன்**

# சுனாமி அரசியல் அதிர்வுகள் பல வினாக்களை எழுப்பியுள்ளது

ஐங்கரன்



சுனாமியின் தாக்குதலால் பாரிய அழிவுகளைச் சந்தித்த நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையின் வரலாற்றில் இப்படியான ஒரு பேரழிவைச் சந்தித்ததில்லை. மனித சமுதாயத்துக்கே ஏற்பட்ட பாரியஇழப்பாக இது அமைந்திருந்தது. சுனாமியின் பாதிப்பினைக் கண்டு உலகம் பெரியளவில் அதிர்ச்சிய டைந்துள்ளது. இயற்கையின் அனர்த்தத்தைக்கண்டு மனிதன் அதிர்ந்து போன செயலில் ஒன்றாக சுனாமி மாறிவிட்டது. மனிதசமூகம் தோற்றுப் போனதா அல்லது இன்னோர் சமூகத்தின் அசட்டுத்தனத்தால் தோற்கப்பட்டதா என்பதே மீதமுள்ள கேள்வியாகும். இப்படியெல்லாம் விவாதங்கள் நிகழும்போது இலங்கை அரசியலில் சுனாமியால் ஏற்பட்ட அரசியல் அதிர்வு வேறுவிதமான வினாக்களையும் விவா தங்களையும் வெளிக் கொண்டுவருகிறது.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுனாமி அரசியல் வலைக்குள் சிக்கியுள்ளாரா அல்லது இலங்கையை சிக்கவைத்துக் விட்டாரா என்ற விவாதம் சூடுபிடித்துள்ளது. யதார்த்தத்திலும் அத்தகைய விவாதத்திற்கு நிலையான காரணங்கள் உண்டு. உதவி வழங்கும் நாடுகள் பெரியளவில் உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிவருகின்றது. பாரியளவிலான நிதி உதவிகளும், பொருட்கள் மற்றும்சேவைகள் உதவிகளும்இலங்கை அரசாங்கத்திற்குக்கிடைத்துள்ளன. இலங்கை அரசாங்கம் முன்வைத்த உதவிகளையும் கடந்துசில நாடுகள் செயற்படத்தொடங்கியுள்ளன. அநேக நாடுகள்இராணுவத்தை இலங்கையில் தரையிறக்கியுள்ளன. ஆனால், அத்தகைய உதவிகளின் அவசியம் உடனடித் தேவையைக் கொண்டதாக அமைந்திருந்தது. உடனடித்தேவையின் காலம் முடிந்த பின்பும் சில நாடுகள் உதவிப் பொருட்களை இராணுவத்தினூடாகக் கையாளமுனைவது ஆபத்தான அரசியல் நகர்வாகவே கருதவேண்டியுள்ளது. இவ்வகையான உதவிகளுடன் நுழையும் இராணுவம் சில நாடுகளின் நீண்ட பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிவையாக அமைந்தி ருக்கின்றன. அந்த வகையிலான பாதிப்புக்கள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே இந்தியாவின் கரிசனையாக உள்ளது. ஆனால், இந்தியாவும் அமெரிக்கா போன்று இராணுவத்தின் உதவியையே முதன்மைப்படுத்தி செயற்பட்டது. ஆனால், அது உடனடித்தேவையாக அமைந்ததென்று கூறிக்கொண்டது. அதில் நியாயத்தன்மையும் உண்மை என்பதை யாரும்மறுக்க முடியாது. ஆனால், தமிழ்நாட்டிலோ ஏனையஇந்தியாவின் பகுதிகளிலோ பாதிப்புக்களை நிவர்த்திசெய்யத் தவறிய இந்தியா இலங்கையில் அதிக கவனமும் அக்கறையும் கொண்டிருப்பதற்கான காரணம் தனது ஆதிக்கத்தை மீறி எந்த அரசும் செயற்பட்டுவிடக் கூடாது எனக் கருதியதேயாகும்.

ஆனால், அமெரிக்க உதவிகளுக்கப்பால் இலங்கையில் தனது பிரசன்னத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்ற முடிவினை சரியாகவும் சாதுரியமாகவும் அமுல்படுத்தியிருந்தது. இதற்கு இலங்கை சனாதிபதியும் ஒரு பிரதான காரணியாக செயற்பட்டார் என்றே கூறலாம். அமெரிக்க சனாதிபதிக்கு நேரடியாக சுனாமியின் தாக்கத்தை தெரிவித்த அவர் அதனூடாக அமெரிக்காவிடமிருந்து உதவிகளை எதிர்பார்ப் பதாகவும் தொலைபேசி உரையாடலில் தெரியப்படுத்தியதாக செய்திகள் வெளியாகின. அவற்றுக்குப் புறம்பாக சனாதிபதி எதனை அமெரிக்க சனாதிபதியோடு கலந்துரையாடினார் என்பது இருவருக்குமே வெளிச்சம். ஆனால், சீனாவிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என அமெரிக்கா இலங்கை அரசுக்குத் தெரியப் படுத்தியதும், சனாதிபதி ஈரானுக்கு விஜயம் செய்ததும், இந்தியாவுடன் கூட்டாகக் கடற்படைப்பயிற்சியை மேற்கொண்டதும் அமெரிக்க சந்திரிகா உறவில் அதிகம் முரண்பாட்டைக் கொண்டதாக இருந்தது, அத்தகைய நெருக்கடியைச் சனாதிபதி செய்யத் தவறினால் வேறு ஏதாவது விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என இலங்கை இராஜதந்திரிகள் கருதியிருந்தனர். அதற்கான வாய்ப்பும் அதிகமாக இருந்தது. ஆனால், அமெரிக்காவின் உதவியை நாடுவதிலும் சிநேக உறவை வளர்ப்பதிலும் இலங்கை சனாதிபதிக்கு அதிக அக்கறையும் அவாவும் தென்பட்டிருந்தன. அதனை சுனாமி அலை தீர்த்து வைத்ததாகக் கூட கருத வாய்புண்டு. ஆனால், அத்தகைய உறவில் பாதிப்புகள் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாத சனாதிபதியும் அவரது ஆதரவுக்கட்சிகளும் செயற்படுவதே அதிகமான சந்தேகங்களை ஏற்படுத்தி யுள்ளன. ஜே.வி.பி சிங்கள உறுமய என்பன வழமையான பாணிகளைக் கைவிட்டு தனித்துவமான போக்குகளுடன் செயற்படுவதனைக் காணமுடிகிறது.

சனாதிபதியின் எதிரிகளை கட்டுப்பாட்டு நிலைக்குக்கொண்டுவருவதுடன் அமெரிக்காவுடனான உறவு சர்வதேச மட்டத்தில் முதன்மையானது எனவும் கருதியிருந்தார். அந்த வகையில் கணிசமான அடிப்படை உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் பெற்றதுடன் அமெரிக்காவின் பிரசன்னத்தையும் சாத்தியப்படுத்திவிட்டார். இதனால் இந்தியாவுடனான பகைமையைச் சந்திக்க வேண்டிய நிலைக்குள் இலங்கையின் தற்போதைய சூழல் மாறியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்காவின் பிரசன்னத்தை எதிர்பார்க்காத நாடாகவே விளங்கியது. எவ்வளவுக்கு இலங்கை விடயத்தில் தலையிட்டாலும் இப்படியான செயற்பாட்டை அமெரிக்கா மேற்கொள்ளுமென இந்தியா கருதவில்லை. எனவே இவ்வகையான நெருக்கடி என்பது இந்தியாவின் கொள்கைக்கு ஏமாற்றமாக அமைந்திருப்பதுடன் இலங்கை சனாதிபதி கருதுவதுபோல் அமெரிக்க சார்பு இந்தியாவைப் பாதிக்காது என்பதைவிட அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தி யுள்ளது. இதனால் உருவாகியிருக்கும் அரசியல் தனித்துவமான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாகவே உள்ளது. இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியாவும், அமெரிக்காவும் சமதூரத்தில் அளவீடு செய்யவேண்டிய சக்திகளாகவே விளங்கு கின்றன. இத்தகைய நிலையில் இரண்டு அரசுகளையும் சமதூரத்தில் வைத்துக்கொள்வதே இலங்கையரசின் தற்போதையகொள்கைக்கு வாய்ப்பானது. அதனை செய்யத்தவறியுள்ள இலங்கை அரசு அதிகமான பாதிப்பினை நேரடியாகவோ, மறை முகமாகவோ எதிர்கொள்ள வேண்டியதாக உள்ளது. இத்தகைய சூழலைக் கையாண்டு தமிழர் தரப்பினை நிரந்தரமாகக் கட்டுப் படுத்துவதோ அல்லது நெருக்கடி மிக்க அரசியல் சூழலை உருவாக்குவதோ இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை விமர்சித்த தற்போதைய அரசாங்கம் அதே கொள்கையை பின்பற்ற ஆரப்பித்துள்ளதையே இது காட்டுகின்றது. இதனால் ஏற்படப்போகும் விளைவுகளை நேரடியாக தமிழர் தரப்பிற்குத் திருப்பிவிட முயலும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டுவருகிறது.

சில சந்தர்ப்பங்களில் எல்லா நாடுகளின் இராணுவத்தைப் போன்று அமெரிக்க இராணுவமும் இலங்கையைவிட்டு வெளியேறலாம். அதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. ஆனால், அவர்கள் மேற்கொள்ளப்போகும் ஆய்வுகளோ, அவதா னிப்புக்களோ, கண்காணிப் புக்களோ இலங்கையை மட்டுமல்ல தென்னா சியாவையும் கடந்து இந்து சமுத்திரத்தை இலக்கு வைத்ததாகவே அமையும். ஆனால் அமெரிக்காவின் கவனம் இலங்கையில் அதிகரிக்க மேலும் ஒரு ஊக்கமாகவே இந்த விடயம் அமையும்.



எனவே சுனாமி அரசியல் அதிகபாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாகவே அமைந்துள்ளது. இது தமிழருக்கானது மட்டுமன்றி இலங்கைக்கும் இலங்கையில் அதிககவனம். எடுக்கும் இந்தியா, சீனாவையும் நோக்கிய விரலசைவாகவே கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இதனை பரிசீலிப்பதே தெளிவான முடிவைத்தரக் கூடியதாக அமையும்.

# புலனாய்வும் புலனாய்வு வல்லுனர்களும்

**ச.சங்கரன்**

> **உளவாளிகள் தாம் சார்ந்த தேசத்தவரால் காவியத்தில் புகழப்படுகின்றனர். கௌரவிக்கப்படுகின்றனர். ஆனால், எதிர் தேசங்களினால் கொடூரமானவர்களாகவும் கொலை காரர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். உளவாளிகள் தம்பணியில் வென்றால் அத் தேசங்களுக்கு இலாபம் கிடைக்கின்றது. தோற்றால் அத் தேசங்களுக்கு அவமானம் ஏற்படுகின்றது. உளவுவேலை என்பது இராணுவம் சம்பந்தப்பட்ட தகவல்கள் மட்டுமல்ல. அது அரசியல் பொருளாதார அணு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, கைத்தொழில் வளங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இவைபற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்காகவே உளவாளிகள் உலகெங்கிலும் அலைந்து திரிகின்றனர்.**

புலனாய்வுச் சரித்திர வரலாறு உன்னுடையது என்னுடையது என்ற போட்டி நிலை தோன்றிய போதே புலனாய்வு நுட்பங்கள் விருத்தியடைய ஆரம்பித்தன.

உளவு வேலை சுவாரஷ்யமற்ற சலிப்பான சிரமமான வேலை தான். இதற்கு மனக்கட்டுப் பாடும் விடாமுயற்சியும் சுயுஆர்வ மும், விவேகமும், ஞானமும் தேவை. இதற்குப் பொறுமையும் அதிக பயிற்சியும் புத்திக் கூர்மை யும் தேவை. தன்னார்வச்செயற் பாட்டாளர்களினாலேயே உளவு வேலையில் வெற்றிபெறமுடியும்.

புலனாய்வு உபாயங்கள் முன்னொருகாலத்தில் கற்பனைக் கதையாக வந்தவை. நவீன உல கில் அதுவே நியாயமாகிவிட் டது. இன்று புலனாய்வு உபா யங்கள் திகிலூட்டும் வீரசாகசங் களாக வளர்ந்துவிட்டது.

இது கற்பனைக் கட்டுக் கதையா? அல்லது நியாயமான உண்மையான சம்பவமா? என விரலை வாயில் வைக்குமள வுக்கு புலனாய்வு வேலை நுட்பம் விருத்தியடைந்துவிட்டது.

உளவுக்கலை மனிதவளப் புலனாய்விலிருந்து விலகிச் சென்று இலத்திரனியல்தொழில் நுட்ப மயப்படுத்தப்பட்டு தரையி லிருந்து ஆகாயத்தை நோக்கிச் சென்றுவிட்டது. ஆனால்,தமிழ் மக்களினால் மனிதவளப்புல னாய்விலிருந்து முன்நகர முடி யவில்லை. ஆனால், நவீனபுல னாய்வு. உலகம் அணுப் புலனாய் வுக்குமுன்னேறிவிட்டது.

1ஆம் 2ஆம் உலக மகா யுத்தங்களுடன் புலனாய்வுக் கலை நவீனதொழில் நுட்பமயப் படுத்தப்பட்டு பரிணாம வளர்ச்சி யடைந்து உளவுக்கலை பற்றிய விடங்களை அறிவதாயின் உள வுத்துறையெனும் தடாகத்தில் மூழ்கவேண்டும். வேவுபார்ப் பதற்குச் செலவளிக்கப்படும் நேரம் ஒருபோதும் வீண்போகாது. இதுதனிமனித வாழ்க்கையாக வும் இருக்கலாம். தேசக்கடமை யாகவும் இருக்கலாம்.

புலனாய்வு என்றால் ஒரு நாடு தனக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலிலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்ளவும் அல் லது போட்டி நாடுகளுக்கு மறை முக அச்சுறுத்தலைக் கொடுக் கவும் மேற்கொள்ளப்படும் செயல் கள் புலனாய்வு எனப்படும்.

உளவுக்கலை மூன்று வகைப் படும். மூலோபாயப்புலனாய்வு, தந்திரோபாயப் புலனாய்வு, முறி யடிப்புப்புலனாய்வு என்பன வாகும். மூலோபாயப் புலனாய்வு என்பது ஒரு நாடு தனது நீண்ட காலப் போக்கில் வெளிவிவ காரக் கொள்கையினை அல்லது உள்நாட்டுக் கொள்கையினை வகுப்பதற்காக பாதுகாப்புக் கட் டமைப்புக்களை உருவாக்கு வதற்கு மேற்கொள்ளப்படும் புல னாய்வு செயற்பாடுகள். இவை அரசியல் ராஜதந்திர விவகாரங் களுடனும் பொருளாதாரக் கொள் கைகளுடனும் சம்பந்தப்பட்ட வையாகும். இது எதிரி நாட்டுக் குள் தனது ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் செலுத்த லாகும். எதிரி நாடுகளுக்குள் ஊடுருவலையும் அதனை அச் சுறுத்துவதனையும் குறிக்கும்.

முறியடிப்புப்புலனாய்வு என்பது ஒரு நாட்டுக்கு எதிர்நாட்டு உள வாளிகள் ஊடுருவி சதிவேலை களிலும் நாசகார வேலைகளி லும் தகவல் சேகரிப்பதிலும் ஈடு படுவதை தடுத்தலினையும் எதிரி களின் பொய்ப்பிரசாரத்தையும் தடுத்தலை முறியடித்தல் புல னாய்வு எனப்படும்.

புலனாய்வு நடவடிக்கை என்பது இராணுவமயப்படுத் தப்பட்ட தாக்குதல் சம்பவங் களாகும். உளவறிதல் என்பது அனைத்துத் தகவல் சேகரித் தலையும் குறிக்கும்.

வேவுபார்த்தல் என்பது புலனாய்வு நடவடிக்கை அதாவது தாக்குதலுக்கான தகவல் சேகரிப் பதாகும். ஊடுருவல் என்பது எதிரி தேச இயந்திரத்துக்குள் இரகசியமாக உட்புகுந்து மறைப் புடன் நிலையெடுத்து இருத்தல் ஆகும். எதிரியால் தாம் எதிரி என்று இனம் காணாமலும் சந்தே கம் ஏற்படாமலும் சுதந்திரமாக செயற்படுதல் ஆகும். இது முற்று முழுதாக இராணுவமயப்படுத் தப்பட்டது.

உளவுக்கலையில் உளவுப்பணி என்பது ஒரு விநோ தமான தந்திரமான வேலை ஆகும், ஆபத்து நிறைந்தது. ஆனால், விளையாட்டுப் போன்றது. ஆனால், கத்தி விளிம்பில் நடப் பது போன்றது. நுணுக்கங்களும், தந்திரங்களும், அதியுச்ச இரக சியங்களையுமுடையது. இது சாதுரியத்துடன் துணிச்சலான இரகசியமாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆகும்.

அதியுச்ச இரகசியமையங் களுக்குள் இரும்புத் திரைகளை ஊடறுத்து அந்தரங்க இரகசிய வட்டத்துக்குள் ஊடுருவி நாகரி கமான அணுகுமுறையால் தக வல் சேகரிக்கப்படுகின்றது. இதுவே ஊடுருவல் ஆகும்.

உளவாளிகள் பற்றியும் உளவறிதல் பற்றியும் ஒவ்வொரு மனிதனும் காத்திருக்கவேண் டியது அவசியம். ஏனெனில் ஒவ்வொருமனிதனின் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் உளவுக்கலை பயன்படும். தேவையானதும் ஆகும்.

உளவு முறியடித்தல் என்ற இருளடைந்த உலகத்திலே எது உண்மை, எது பொய், எது சரி, எது பிழை, எது தேவை, எது தேவையற்றது, என்னசெய்ய வேண்டும்,என்னசெய்யத் தேவை என்பதனை கண்டுபிடிப்பதே உளவுக்கலை ஆகும்.

எதிர்பாராத ஆச்சரியமும் திகைப்புக்கொண்ட உளவாளி களின் வாழ்க்கை வேடிக்கையா கவும் வியப்பாகவுமே இருக்கும். உளவுாளிகள் உயர்ந்த இலட் சியத்திற்காகச் செயற்படும் இயல் பான தேசபக்தர்கள். ஆனால், பிடிபடும்போது தூக்கில்தான் போடுகின்றார்கள். உளவாளிகள் வெற்றிபெற்றால் வெகுமதிகள் மதிப்பிட முடியாதவை. மாறாக தோல்விகண்டால் உயிர்ப்பலி கொடுக்கவேண்டியதாகும்.

உளவு விற்பன்னர்களின் உள் ளம் கையில்தான் இன்றைய உலகம் உள்ளது. பெரிய படை யணியாலேயே செய்து முடிக்க முடியாத சாதனையை ஒரு உள வாளி தனித்துச்சென்றுசெய்து முடிக்கின்றான்.

உளவாளிகள் தாம் சார்ந்த தேசத்தவரால் காவியத்தில் புக ழப்படுகின்றனர். கௌரவிக்கப் படுகின்றனர். ஆனால் ,எதிர் தேசங்களினால் கொடூரமானவர் களாகவும் கொலைகாரர்களாக வும் சித்தரிக்கப்படுகின்றனர். உளவாளிகள் தம்பணியில் வென் றால் அத் தேசங்களுக்கு இலா பம் கிடைக்கின்றது. தோற்றால் அத் தேசங்களுக்கு அவமானம் ஏற்படுகின்றது. உளவுவேலை என்பது இராணுவம் சம்பந்தப்பட்ட தகவல்கள் மட்டுமல்ல அது அரசியல் பொருளாதார அணு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, தொழில்நுட்ப கண்டுபிடிப்பு, கைத்தொழில் வளங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இவைபற்றிய தகவல்களைச் சேகரிப்பதற் காகவே உளவாளிகள் உல கெங்கிலும் அலைந்து திரிகின் றனர்.

உளவு பார்ப்பது என்பது பண்பான உலகத்தில் பண்பான மனிதனின் இரகசிய அவயங் களை இரகசியமா அறியமுயல் வது ஒழுக்கக்கேடானது; முறை கேடானது. ஆனால், இது அப்படி யான உலகம் அல்ல. சர்வாதி காரமானவர்கள் தன்னிச்சையாக எடுக்கும் முடிவுகளினால் சீரழியும் உலகமாகும்.

உலகப்பிரசித்தி பெற்ற உளவாளிகளின் புலனாய்வு சம்பந்தமான தந்திரங்களும் உத்திகளும் மறைமுக நடவடிக் கைகளும் ஊடுருவல்களும் முறியடிப்புக்களும் நம்பமுடியா ததாகவே இருக்கும். இவை கற்பனைக் கதை போன்றதே. ஆனால், உண்மையானது ஆகும்.

நவீன புலனாய்வு நடவடிக் கைகள் யதார்த்தத்திற்கு முர ணானதாகவே தோற்றமளிக்கும். ஆனால், யதார்த்தமானவையா கும். உளவாளிகளின் நடவடிக் கைகள் அவ்வாறு திகைப்பூட்டும் வகையில் அமையும்.

சரித்திரபிரசித்தி பெற்ற உளவாளிகள் மாறுவேடம் அணி யும் கலையில் பிரசித்தி பெற்ற விற்பன்னர்களாகத் திகழ்ந்தனர். மனிதப்பலவீனங்களை தமக்குச் சாதகமாகப்பயன்படுத்துகின் றனர். பொய்க்கு இலக்கணமாக பல புனைகதைகளை சாமர்த் தியமாக நிஜமாக்குவார்கள்.

உளவுக்கலை என்பது ஒரு வெறிபிடித்த தொழில். புத்து ணர்ச்சியுடன் செயற்படும் உள வாளிகள் எவரும் சிறிதளவும் சந்தேகப்படாதவாறு தங்களை மறைத்துக்கொள்கின்றனர்.

மொழி, கலை,கலா சாரம், பண்பாடு, மதம், சமூகப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப தங் களை தயார்செய்கின்றார்கள்.

உளவாளிகள் தங்களின் உண்மை முகங்களை மறைத்து போலியான முகமூடிகளை அணி ந்து கொள்கின்றனர். இவர்கள் திட்டமிட்டு உளவு நலன் கருதி, நட்பை வளர்க்க முயல்வார்கள். உளவியல் ரீதியாக தமக்குத் தேவையானவர்களை கவர முயல்வார்கள்.

உளவாளிகள் உரு மறைப்புச் செய்வதற்கு கையா ளும் முக்கிய தந்திரங்கள் இன் றைய உலகின் பெண் உள வாளிகள் பாலியல் கவர்ச்சியால் உளவு நடவடிக்கையிலீடுபடு கின்றனர்.

ஊடகவியலாளர்களாகவும், அரசியல் ராஜதந்திரங்களாக வும் அரசசார்பற்ற நிறுவ னங்களாகவும் சமயத் தலைவர் களாகவும் வியாபாரிகளாகவும் உளவாளிகள் முக்கியவேடங் களை தரிக்கின்றார்கள்.

அதேவேளை உளவா ளிகள் உளவு வேலைக்காகவும் தனது நாட்டிற்காகவும் தனது தனிப்பட்ட வாழ்க்கையினையே அர்ப்பணிக்கின்றார்கள். உளவா ளிகள் மன உணர்வுகள் எப்போ தும் தேசியபாதுகாப்பு விவகார மாகவே இருக்கும். உளவாளிகள் எப்போதும் மாறுவேடத்தில் தமது எதிரிகளுடனேயே கூடியிருந்து கும்மாளமடித்து தகவல்களை கறக்கின்றனர். தம் தேசத்திற் காய் தம் இயல்பான கொள் கைக்கு முரணானவர்களாகத் தோற்றமளிக்கின்றார்கள்.

உளவாளிகள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியி லும் ஆபத்துக்காத்திருக்கும். உளவாளிகள் எப்போதும் விழிப்பு நிலையிலேயே இருப்பார்கள். இருக்கவேண்டும். தவறினால் உயிர் போய்விடும்.

எதிரிகளின் கோட்டை களுக்குள் உலாவரும் உளவாளி கள் எதிரி தேசங்களின் இயக் கத்தை சீர்குலைப்பதுடன் தம் தேசத்தின் பாதுகாப்புக்காக உழைக்கின்றனர். அதற்காக உயிரையும் கொடுக்கத் சித்தமா யிருக்கின்றார்கள். தம் தேசத் துக்கு பாதுகாப்புக் கவசங்களா கவும் எதிரி தேசத்திற்கு சிம்ம சொற்பனமாகவும் உளவாளி களின் வாழ்வியல் தொடர்கின்றன.

இன்றைய தேசங்கள் ஒவ் வொன்றினது பாதுகாப்பும் அழி வும் அவ்வவ்நாடுகளின் உளவா ளிகளின் கையில்தான் உள்ளது. உளவு நிறுவனங்களின் பலமும் பலவீனமும்தான் தேசங்களின் பலமும் பலவீனமுமாக உள் ளது. வளம் பொருந்திய படைக் கட்டுமானம் இல்லாவிட்டாலும் வளம் கொண்ட உளவுக்கலை யில் தேர்ச்சிபெற்ற உளவாளி கள் இருந்தால் தேசம் பாது காக்கப்படும்.

உளவுக்கலை பற்றி அறிந்து கொள்வதும் அதிலீடுபடு வதும் நாட்டுப்பற்றுள்ள ஒவ்வொரு மனிதர்களினதும் தலையாய கடமையாகும்.



அம்மா நான் இயக்கத்திற்குப் போகப்போறன் அம்மா நான் இயக்கத்திற்குப் போகப்போறன்,என தினம் நச்சரிக்கும் அந்தச் சின்னவளின் கோரிக்கையை அந்தக் குடும்பத்தினர் அடிக்கடி கேட்டு அலுத்தே போய்விட்டனர்.

# படைமுகாம் தடை உடைத்த எங்கள் புலிமகள்

**க.மிரேசு**



வீதியால் போகிறவர் களும்,உறவினர்களும் அவளது நச்சரிப்பை இடையிடையே கேலிசெய்வ துண்டு.

பொன்னம்மாக்கோய் இயக்கத்திற்குப் போறவ போயிட்டாளா என கேட்கும் போதே!

தாய் பதில் சொல்லும் முன்பே,முந்திக்கொள்வாள் பவாணி. நான் போறேனோ,இல்லியோ என்று பாருங்கோ என்பாள்.

மேலும் அவளது உறவுக்காரர் அவளை மேலும்,மேலும் சீண்டிவிடுவதற்காக.

புள்ளோய் முயல் பிடிக்கிற நாயை முகத்தில தெரியாதோ என்று. கோபப்பட்டுக்கொண்டே ஓடிவிடுவாள்.

இப்படியாகத்தான் அந்தச் சிறுமியின் தாயக நேசிப்புத் தொடங்கியது. சிறுவயதாக இருந்தாலும் போராட்டம்,. விடுதலை, போராளிகள், எமது இயக்கம் என்பனவற்றை நிறையவே தெரிந்து வைத்திருந்தாள்.

எதற்கெடுத்தாலும் அதாவது அவளது தாயோ,தகப்பனோ சும்மா பேசினாலும் உடனே இயக்கத்திற்குப் போயிருவன் என்றே சொல்லிய அந்தச்சின்னவள் உண்மை யிலேயே போராட்டத்தை நேசித்தாள். தனது சகோதரர்கள் இரண்டு பேர் போராளியாக இருந்தது நன்கு தெரிந்தும் இவள் போராடவே துடித்தாள்.

சதா அவளது வாய் உச்சரித்த இயக்கத்தை விரைவிலேயே வந்து தெரிந்துகொண்டாள். இயக்கத்தில் இணைந்த பிறகுதான் தனக்கு சந்தோசமாக இருப்பதாகக் கூறி தனது சக புதுத் தோழிகளுக்கும் பெரியதொரு விரிவுரையை வழங்கினாள் என்பதை அவளோடு இருந்த போராளிகள் நினைவுகூர்ந்து நெஞ்சம் உருகக் கண்ணீர் விடுகின்றனர்.

வீரவேங்கை லெப்.காந்தி. சிறிதும் இந்தப் பெயருக்குப் பொருத்தமில்லாதவள். எப்போதுமே துடிதுடித்தவள்.எதையுமே செய்யத் துணிந்தவள்.வேகம் என்பதை தனதாக்கிக்கொண்டவள். எனவே இவளுக்கு " காந்தி" என்ற பெயர் எப்படிப்பொருந்தும்.

புலிப்படைக்குச் சிறு வயதிலேயே துடிதுடிப்புடன் வந்தவளுக்கு குட்டிப்புலி அல்லது புலிக்குட்டி என்று பெயர் வைத்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

கொக்கட்டிச் சோலையை பிறப்பிடமாகக் கொண்டவள். சீவரெத்தினம்,பொன்னம்மா தம்பதியினருக்குக் கடைசி மகளாக பிறந்தாள். சிறு வயதில் தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொண்ட லெப்:காந்தி இயக்கத்தில் இணைந்த நாளிலிருந்து வீரச்சாவடையும் நாள்வரை திறமையாகவும் தாயக விடுதலைப் போராட்டத்தில் விசுவாசமாகவும் இருந்து செயறப்பட்டாள்.

மட்டக்களப்பு மகளிர் 16ஆவது பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய லெப்:காந்தி, அரசியல்துறையில் செயறப்பட்டாள்.போராளிகள் கட்டளைகளுக்கு இணைவாக நடக்கவேண்டும் என்பதற்காகவே நான் அரசியல்துறையில் இருக்கிறேன். இல்லாவிட்டால் நான் சண்டை அணிக்கு ஓடிவிடுவேன். என சக தோழிகளிடம் அடிக்கடி கூறியிருக்கிறாள்.

சிறுவயது என்றாலும் அரசியல்துறையில் செயறபடும்போது தனக்குத் தரப்படுகின்றவேலைகளை வேகமாகவும்,நேர்த்தியாகவும் செய்து முடிப்பதில் எப்போதுமே செயல்மிக்க வல்லவளாய் இருந்திருக்கிறாள். வயதிற்கே ஏற்ற சுறுசுறுப்பும்,சுட்டித்தனமும் அவளிடம் இருந்ததை பொறுப்பாளர்களும் தளபதிகளும்அவதானித்து அவளுக்கு அடிக்கடி ஏனைய வேலைகளையும் கொடுத்து அவளது வேகமான செயற்பாட்டைக்கண்டு வியந்துவிட்டனர் என்று அவளோடு கூட இருந்த போராளிகள் சொல்லி மெச்சுவதுண்டு.

லெப்:காந்தி கல்வி கற்றது குறைவு என்றாலும் அவள் சிந்தித்து, அவதானித்து ஒவ்வொரு வேலையும் செய்யும் பொழுது அவளுக்கேயுரிய அறிவு வெளிப்படுவதையும் எதையும் ஒருமுறை சொல்லிக்கொடுத்தால் செய்திடும் வல்லமையை மெச்சிடுவதைத் தவிர வேறு ஏதும் சொல்லமுடியாது.

அரசியல்துறையில் தனது கடமையைச் செய்துகொண்டிருந்த லெப்:காந்தி நான் சண்டைக்குப் போகப்போறன் சண்டைக்குப் போகப்போறன் என்று அடம்பிடித்து ஒருவாறு சண்டைக்கு அனுமதி எடுத்துவிட்டாள்.

அந்த சிறு வீராங் கனையின் அதிர்ஷ்டமோ என்னவோ அவள் எதிர்பார்த்தது போலவே தடையணியில் சேர்க்கப் பட்டாள். எதிரியின் முகாம் அழிப்பு ஒன்றுக்கான திட்டம் தீட்டப்பட்டது. பயிற்சிகள் ஆரம்பித்துவிட்டன. சண் டைக்கான ஒத்திகை பயிற்சி எப்படிக் கடுமையாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே அந்தக் கடுமையான பயிற்சியிலும் லெப்:காந்தி திறமையாக செயறபட்டு தனது கடமைகளைச் செய்தாள்.

லெப்:காந்தி சண்டைக்குப் போகும் முன் வன்னிப் போர்க்களத்தில் நின்ற தனது அக்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவிட்டே சென்றாள்.

அக்கா எங்களது வீட்டில் அண்ணாவும்,நீயும் போராளியாக இருந்தாலும் நானும் போராட்டத்தில் இணைந்துவிட்டது உனக்கு வியப்பாகவும், கவலையாகவும் இருக்கும். ஆனால்,நான் எப்போதோ சென்றுவிட்டேன். சிலவேளை இந்தக் கடிதம் கிடைத்ததும்தான் நான் போராட்டத்தில் இருப்பது தெரியும். நான் எப்போதோ இயக்கத்திற்குப் போவது என்று முடிவெடுத்துவிட்டேன்.

அக்கா ஒரு வீட்டிற்கு ஒரு போராளி இருக்கவேண்டும் என்று எல்லோரும் சொல்வ துண்டு.ஆனால்,அது இதுவரை எவராலும் செய்யப்படவில்லை.

சிங்கள ஆமி வரும்போது ஒரு வீட்டில் ஒருவரை சுடவில்லைத்தானே எனவே எல்லோரும் போராடினால்தான் மிக விரைவில் எங்களது தாய் நாட்டை பெற்றெடுக்க வேண்டும் என்பதே எல்லோரதும் ஆசை. எனவே நான் போராட வந்ததில் மிகுந்த சந்தோசப்படுகிறேன். சிலவேளை நான் வீரச்சாவடைந்துவிட்டால் நீ கவலைப்படாமல் எனது நினைவோடிருந்து இறுதிவரை போராடவேண்டும். அண்ணாவிடமும் இதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.

என்று கடிதம் எழுதிவிட்டே களம் விரைந்தாள்.2001 ஆம் ஆண்டு மாரிகாலத்துப் பெரும் மழை பொழியத்தொடங்கியது. கார்த்திகை மாதத்து மாவீரர் தின மகிமையை மனதில் கொண்டு குளிர் நிறைந்த கும்மிருட்டில் அணிகள் நகரத்தொடங்கின.

39ஆம் கொலனி அது ஒரு எல்லைக்கிராமம்,சிங்கள இனவெறியர்களால் எமது மக்கள் துரத்தியடிக்கப்பட்ட கறல் படிந்த இடம். அதற்குப் பக்கத்தில் உள்ள வைக் எழுவை முகாம் தகர்க்க வேண்டுமென போராளிகள் முன்னேறிக்கொண்டிருந்தனர்.

2001.11.11 அன்று நடுநிசியில் பகைவனை காவுகொள்ள படையணிகள் ஊர்ந்துகொண்டிருந்தன. தடையணிகள் தடையை உடைத்துவிட்டனர். தடையணியில் லெப்:காந்தியும் இருந்தாள்.

டோப்பிற்றோ வெடித்த வுடன் எதிரி உசாராகிவிட் டான். எங்களது அணியும் ஒவ்வொரு தடையாக உடைத்து உள்நுழைந்த போது எதிரியும் தாக்குதலை உச்சப்படுத்தியிருந்தான். எதிரியின் கடும் எதிர்ப்பிற் குள்ளும் தடையணிகள் துணிவுடன் தடையை உடைத்து உள்நுழைந்தன.

ஆனால், லெப்:காந்தி எதிரியின் ரவை ஒன்று பட்டு தனது உயிரை தமிழீழ தாய் மண்ணிற்காய் அர்ப்பணித்தாள். அவளது வீரச்சாவின் சாட்சியாக எதிரியின் முகாமை போராளிகள் வெற்றிகொண்டனர். தமிழீழ தேசத்தின் சுதந்திரக் காற்றுடன் லெப்:காந்தியின் மூச்சும் உயிருடனேயே கலந்திருந்தது. ●



# சிந்திப்போம் சில நிமிடங்கள்...

*வஞ்சகம் தெரியா*
*வளர் தளிர்கள்;*
*கண்ட மாத்திரத்தே - இதயம்*
*கனியச்செய்பவை ;*
*உத்தரவின்றியே உரிமையுடன்*
*உறவு கொண்டாடும்;*
*மீண்டும் மீண்டும்*
*காண்கையில்*
*விரியும் விழிகளுக்குள்*
*வேர்கள் அறியா உறவின்*
*அர்த்தங்கள் போதிக்கும் !*



I

அலைகளைக் கிழித்துச்சென்ற படகின் ஓரத்தில் கன்னம் வைத்து, கைகளை வெளியால் விட்டவாறே, ஓடியோடி வந்து விழும் அலைகளைக் கைகளால் அள்ளி முகத்தை நனைத்து, வயது மறந்து தண்ணீருக்குள் கை அலம்பி விளையாடி மகிழ்ந்த பொழுது, மாதங்கள் கடந்தும் இன்னும் நெஞ்சிலே அப்படியே இருக்கின்றது. ஆனால், கடந்த 26 ஆம் திகதி அலைகள் தமது அசிங்கமான முகங்களைக் காட்டி வந்து, எம் கரைகளில் கோரக்கூத்தாடி விட்டுச்சென்று விட்டிருந்தன. இயற்கை அழகினை மனம் பறிகொடுத்து இனிமேலும் ரசித்துக் கொள்ளமுடியாதவாறு....

அந்தப் பாடசாலை இடம் பெயர்ந்து வந்த உறவுகளால் நிரம்பியிருந்தது. இன்றோ நாளையோ புது வரவாக பூமிக்கு வருவதற்காய் தாயின் வயிற்றுள்ளிருந்து துடிக்கும் சிசுவிலிருந்து, பேச்சு மாறி புலன்கள் களைப்படைந்து முதுமை மிஞ்சிய



அப்பு வரை அனைத்துத் தரப்பினரும் அங்கே இருந்தனர். எல்லா வேதனைகளைத் தாண்டியும் அவர்களுக்கு மத்தியில் கூடவே இருக்கும்போது மனத்திற்கு ஓரளவு ஆறுதலாயிருந்தது. உள்ளுக்குள் இருப்பதைக் காட்டிக்கொள்ளாமல், ஒவ்வொருவரையும் பார்த்து முகமன் புன்னகைகளைப் பதிலுக்கு உதிர்க்கும்போது, இதுவரை காலமும் இயல்பாகவே எங்கள் சமூகத்தில் இருந்து வந்திருந்த வழக்காறுகளும், கருத்துக்களும் தங்கள் அர்த்தம் இழந்து, ஆத்திரத்தை உண்டு பண்ணின. அலைகள் ஏற்படுத்திய அனர்த்தததைத் தவிர்த்து, மற்றைய எதையும் பற்றி அவர்களுடன் கதைத்துக் கொள்ள மனம் விரும்பியது.'நீங்கள் எல்லாரும் பக்கத்துப்பக்கத்து வீடுகளா? கேட்டேன். 'நாங்கள் எல்லாருமே ஒரு வீடு தான். உங்கா உதுதான் !', என்று ஒரு சிறுவன் பக்கத்தில் தாங்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடத்தைக் காட்டினான். 'இல்லை ஊரிலை உங்கட வீடுகளெல்லாம் பக்கத்துப்பக்கத்திலேயோ எண்டு கேட்டனான்'. 'ஓம் . .பக்கத்திலதான். ஆனா இப்ப ஒண்டுமே இல்லை. அப்பிடியே துடைச்சள்ளிக்கொண்டு போட்டிது. என்ன மாதிரி அது வந்திச்சு !',

தனக்குள்ளேயே வியந்தவாறு அப்படியே மௌனமானான் அவன். 'அதை விடுங்கோ ! எத்தனையாம் வகுப்பு நீங்களெல்லாம் ?'. 'பள்ளிக்கூடம் தரைமட்டம். அத்திவாரம் தான் மிஞ்சியிருக்கும். எங்கட வகுப்பிலை படிச்சவையில கூட அரைவாசிப் பேருக்கு மேல சரி', இன்னுமொரு பக்கத்திலிருந்து வந்த குரல் கண்ணீரோடு மௌனமானது. நான் எதைக் கதைக்க முற்பட்டாலும், நான் தவிர்க்க நினைக்கும் 'அலைகளின் அனர்த்தங்கள்' மட்டுமே அவர்களின் எண்ணத்தில் நிறைந்துகிடந்தன. 'மாமா ! உங்கட மணிக்கூடு ஓடேல்லை', என் கையைக்காட்டி 8-9 வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தி கூறினாள். 'ஓம் ! மணிக்கூடு ஓடியோடிக் களைச்சுப்போட்டிது போல. திருத்தோணும் எண்டால் கடையெல்லாம் பூட்டிக்கிடக்கடா !'. 'எங்கட அப்பாக்கு மணிக்கூடுகள் திருத்தத்தெரியும்', பெருமையாகச் சொன்னாள். 'அப்ப எனக்கு அலுவல் சுகமாய்ப்போச்சு. நீங்கள் உங்கட அப்பாவிட்டை சொல்லி, திருத்தித் தாறீங்களா ?'. 'அவர் இப்ப வீட்டை போட்டார். ஏதாவது வீட்டுச்சாமான் மிஞ்சிக்கிடக்கோ எண்டு பார்த்து எடுத்துக்கொண்டுவர. வந்தாப்பிறகெண்டால் நான் சொல்லி திருத்தித் தாறன். அம்மா வேண்டாம் வேண்டாமெண்டு சொல்லச்சொல்ல அப்பா போட்டார். இனியும் அலை வருமே ?'. 'ஆனால் தகப்பன் தண்ணியில நிக்கிற நேரம்தான் திருத்தும்', பக்கத்திலிருந்த அவளுக்கு அயலில் வசித்துவந்த பெரியவர் ஒருவர் சொல்லிவிட்டு ஒரு நமட்டுச்சிரிப்பு சிரித்தார். 'ஈ. . எங்கட அப்பா ஒண்டும் குடிக்கிறேல்லை !', சுயகௌரவம் காரணமாக உண்மையொன்றை மறைக்க முயல்வதை அவளின் முகம் அப்பட்டமாகவே காட்டியது. நேரம் போகாதவர்களின் அபத்தமான வம்பளப்புப் போல சிலருக்குத் தெரிந்தாலும், மனதைப் புண்படுத்தாத வகையில், வேறொரு திசையில் கதையை வளர்த்தெடுப்பது உசிதமாகப்பட்டது. 'பொறுங்கோ ! பொறுங்கோ ! உங்கட அப்பாவின்ர பேர் என்னம்மா ? '. அவள் சொன்னாள்.'அட எங்கட.. அண்ணையின்ர மகளா நீங்கள் ! என்னோட தானே உங்கட அப்பா சேர்ந்து தண்ணி அடிக்கிறவர். என்னமாதிரி அந்த ஆள் போத்தில்களைக் காலிபண்ணும் !'. 'உங்களுக்கு அப்பாவைத் தெரியுமோ ? அவர் எப்பிடி இருப்பார் எண்டு சொல்லுங்கோ பார்ப்போம் !'.

'முள்ளிவாய்க்கால்ல அந்த நேர்ரோட்டால இருந்து பிரியிற ஒழுங்கையில மூலையாக் கிடக்கிற கள்ளுத்தவறணை தானே. நான் முகம் கழுவிறதே அங்கதான் !'. 'அப்பா எப்பிடி இருப்பாரெண்டு நீங்கள் இன்னும் சொல்லேல்லை'. 'ஓ. . . உங்கட அப்பா.. எங்கட... அண்ணை அவர் நல்ல வடிவான ஆள். உதவி செய்யிற மனம். சும்மா சுப்பர் வடிவு அவர். ஏன் உங்கட அப்பா வடிவெண்டு நான் சொல்லிறது சரியெல்லே ?'. தன்னுடைய தகப்பனை அழகானவன் என்று புகழ்ந்ததனால் ஏற்பட்ட பெருமை முகத்தில் தெரிய, 'ஓ. . நீங்கள் சொல்லிறது சரிதான். உங்களுக்கு அப்பாவைப் பழக்கம் போலத்தான் கிடக்கு! அப்ப நீங்களும் குடிக்கிறனீங்களோ மாமா ?'. 'அதென்ன நீங்களும் ? அப்ப உங்கட அப்பா... வும் குடிக்கிறவர் தானே ?'. 'ஈ ...', முகத்தில் அசடு வழியச் சிரித்தாள். சொல்லப்பட்டது பொய் என்றாலும் மதுப்பழக்கத்தினை பரவலாக எங்கும் இருக்கும் வழமையான ஒன்றாக சிறுவர்களுக்குக் காட்டுவது ஆரோக்கியமில்லை என்று நினைத்தவனாக, 'உங்களுக்கு ஒரு உண்மை சொல்லட்டா ? நான் 2-3 தரம் அதால போய் வந்திருக்கிறனே தவிர எனக்கு முள்ளிவாய்க்காலும் தெரியாது. உங்கட அப்பாவையும் தெரியாது. கள்ளுத்தவறணையையும் தெரியாது'. 'ஆ... ஊ.. ' தன்னைச் சுத்திவிட்டார்களே என்பதை ஒத்துக்கொள்ள முடியாமல், தன் வட்ட விழிகளில் குட்டிக்கோபம் பறக்க, 'அப்பா வரட்டும். உங்கட மணிக்கூட்டுக்குள்ளை தண்ணி விட்டுத்தாறன்'. 'அவர் வரமுதல் நான் இந்த இடத்தை விட்டு மாறிடுவன்'. 'ஆனா மாமா ! அப்பா இனிமேல் குடிக்கமாட்டார். எங்கட பள்ளிக்கூடமே தரைமட்டம் எண்டால், அவற்றை கள்ளுக்கடை எப்பையோ முடிஞ்சிருக்கும். அந்தக் கள் எல்லாத்தையும் அலைதான் குடிச்சிட்டிது போல. அதுதான் உப்பிடி ஆடுது. என்ன மாதிரி சுருண்டு சுருண்டு வந்திச்சிது. எங்கட வீடு, படகு, வலை எல்லாம் அடிச்சுக்கொண்டு போட்டிது ...', நிலத்தைக் குனிந்து பார்த்தவாறே

**சு.ஞாலவன்**

மௌனமானாள். மீண்டும் தொடங்கிய இடத்துக்கே கதை வந்துவிட்டிருந்தது. மனச்சாட்சிக்கு முரணாக இருந்தாலும் அந்த நேரத்தில் வேறு வழி தெரியாமல், கதைப்போக்கை வெட்டுவதற்காய், என்னில் மூன்றிலொரு பங்காய் இருந்த அவளை, 'ஏய் குண்டம்மா ! உங்கட அப்பா ஒரு சாப்பாட்டு ராமர். நீங்களும் அப்பிடித்தான் இருப்பீங்கள். உங்கட குடும்பமே ஒரு குண்டர் படை', வாயில் வந்த பொய்களை எல்லாம் அடுக்கினேன். 'மாமா ! நான் குண்டெண்டு நீ..ங்கள் சொல்லிறியள். அஃ. கஃ.ஹா . . ஹா ...', அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். அப்போதைக்கு எல்லாவற்றையும் ஈடுசெய்வதாக அது இருந்தது. அதற்கு மேல் மனம் எதையும் எதிர்பார்க்கவில்லை.

II

அனைவரிடமும் தாழ்மையானதொரு வேண்டுகோள். வேதனையில் வாடுபவர்களுக்கு அதை அடிக்கடி கோடிட்டுக்காட்டும் பின்வரும் சொற்களை தமிழ்மொழியின் பேச்சுவழக்கிலிருந்து முழுமையாகவே தவிர்த்து விடவும் அநாதை, பறிகொடுத்தவள் அல்லது பறிகொடுத்தவன், பலி கொடுத்தவர், தலைவிதி, விதவை மற்றும் காயங்களினால் ஏற்பட்ட ஊனங்களைச் சுட்டும் அடையாளங்கள். இதை இவ்விடத்திலே சொல்லவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கின்றது. அனர்த்தத்தை வெறும் செய்தியாக மட்டும், செய்திநேரங்களில் வாசித்துக்கொள்வதுடன் தத்துவ வியாக்கியானங்கள் என்று நினைத்துக் கொண்டு, பிணங்களை வைத்து விளம்பரம் தேடும் வகையிலான 'தேவனின் கோபம்' பற்றிய விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுவதுடன், 'மனிதன் நினைப்பதுண்டு, வாழ்வு நிலைக்குமென்று ! இறைவன் நினைப்பதுண்டு, பாவம் மனிதனென்று . . . அழுது லாபமென்ன ? அவன் ஆட்சி நடக்கின்றது', என்பது போன்ற தங்கள் தத்துவ மூட்டைகளை 'ஆற்றுப்படுத்தல்' என்று நினைத்துக்கொண்டு அபத்திக் கிறார்கள். எங்கள் பகுதியிலே புலிகளின் குரல் சிறப்பான வகையிலே மக்களின் வேதனையை உணர்ந்தவர்களாகவும், அதேநேரத்தில் அந்த வேதனை தற்காலிகமானதே என்று நம்பிக்கை ஊட்டும் வகையிலும் இயங்கினார்கள். இயங்குகிறார்கள். இருந்தும் அதன் வீச்செல்லைக்கு அப்பாலே வேறு சிலவற்றினால் நம் சகோதரர்களிடையில் கொட்டப்பட்ட குப்பைகள் மனதிலே வலியை உண்டுபண்ணுகின்றது. பாடலுக்கு ஒன்றும் அப்படி தட்டுப்பாடில்லை . 'மனமே மனமே நீ மாறிவிடு ! மலையோ அது பனியோ நீ மோதிவிடு !' என்று பலதுமே உள்ளது. இது இவ்வாறு கிடக்க இன்னுமொரு முக்திபெற்றவர் முழங்குகையில், 'தனிமனிதனின் குற்றங்களே இதற்கெல்லாம் காரணம். ஒவ்வொருவனும் ராவணனாகவும், துரியோதனனாகவும் மாறிவிட்டதால் கடவுள் தன்னை இயற்கையினூடாக உணர்த்தியுள்ளார் (ஆகா . . என்ன அருமையான உணர்த்தல் !). என்னதான் அறிவியல் வளர்ச்சியடைந்தாலும், இயற்கையின் சக்திக்கு முன்னால் அது அற்பமானதே ! இறைவன் இயற்கையைக் கட்டியாள்கிறான். அவனே இயற்கையாகவும் உள்ளான். தன் ஆற்றலினை மனிதன் உணர்ந்துகொள்வதற்காகவே இது நிகழ்ந்தேறியிருக்கிறது'. பிரார்த்தனை(?) என்ற



பெயரில் இது பிதற்றப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவில் இடம்பெற்ற நிகழ்வினிலே. சொற்பொழிந்தவர் : அகிலா வைத்தியநாதன், 01.ஜனவரி அன்று. இவருக்குக் கிடைத்துள்ள பட்டம் : ''அருள்மொழி அரசி''. சமய பேதங்களைத் தாண்டி அனைவரையும் தேசியங்கள் கடந்து தாக்கிய அவலத்தைப் பற்றிய இவர்களின் ஆராய்ச்சியைப் பாருங்கள் ! இறைவன் பற்றிய நம்பிக்கை ஆன்மீகத்தில் அடிப்படை கொண்டது. ஆன்ம ஈகம் என்றால் இதயத்தை, ஜீவனைத் தானம் கொடுப்பது. அதாவது மற்றவர்களை





நேசிப்பது. மற்றவர்களின் கண்ணீரைக் கண்டு மனம் இரங்குவது மனிதம். வெறுமனே பரிதாபம் பார்ப்பதோடு ஓய்ந்து விடாமல், தகுந்த வகையில் மற்றவர்களுடைய வேதனையினைப் போக்குவதற்காய் தன்னலம் கருதாது உழைப்பது ஆன்ம ஈகம். இளகிய இதயத்தில் இறைவனுக்கு இடமுண்டு. அப்படியான இதயத்தின் உழைப்பினால் எட்டப்படும் சிரித்த முகங்களில் இறையைக் காணலாம். அதைவிடுத்து கடவுளாக உருவகிக்கப்பட்டவர்களை தலையிலே நாம் தூக்கி வைத்து ஆடியது இன்னும் போதாது. ஆகையால் தான் தன் ஆற்றலை இயற்கையின் . சீற்றமாய் வெளிப்படுத்தியுள்ளான் என இந்த அறிவிலிகள் வாதிடுவது வேதனைக்குரியது. குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படலாம் ! ஆனால், அப்பாவி மக்கள் உயிரினை அதிலும் பிஞ்சுக்குழந்தைகளின் பலியெடுப்பை "நியாயமான தண்டனை" என யாரும் கூறத்தலைப்படுவாராகில், அந்த நீதிபதிக்கு நாம் அளித்துவரும் சலுகைகளையே கேள்விக்குள்ளாக்கி, உண்மை அறியவேண்டிய கடப்பாடு நமக்குண்டல்லவா !

ஓடிப்பிடித்து
ஒளித்து விளையாடி
பாடியாடி மகிழ்ந்திருந்த- நம்
பாலகரை
தேடி இழுத்து
தெருவழியில் அடுக்கி
ஊதிப்பெருத்து
உப்பிப்போயிருந்த அவரை
அடையாளம் காண்பதற்காய்
அன்பான உறவுகள் முன்னாலே
. .
யாழையும், குழலையும்
இன்னும் இருக்கக்கூடிய-
உலகின்
இனிமை அனைத்தையும்
உங்கள் சேய்மொழியாலே
வென்றவரே !
வெட்டும் உங்கள் விழிகளின்
துருதுருப்பு எங்கே ? ?
தேடுகிறோம் . . .

இயற்கை மற்றும் பிரபஞ்ச விசாலம் எல்லையற்றது. இருந்தும் அதற்கு முன் மனிதன் அற்பமானவன் என வாதிட்டு வாளாதிருப்போமா அல்லது அதனைப் புரிந்து தெளிந்துகொள்ள தலைப்படுவோமா ? சந்திரனில் இன்



# பேரலைகளுக்குப் பின்னர் நாம்

னும் ஒளவையார் தோசை சுட்டுக் கொண்டிருக்கிறாரென்று எவராவது நம்பிக்கை கொண்டிருப்பாரேயானால், அவரது சராசரி சாப்பாடு மற்றும் தாம்பத்திய வழக்கங்களில் எந்தவித பாதிப்பையும் அந்த நம்பிக்கை உண்டுபண்ணி விடப்போவதில்லைத் தான் ! அதற்காகவே தோசையை நியாயப்படுத்தி, மற்றவர்கள் வேறு



அதை நம்பவேண்டுமென்று எதிர்பார்க்கலாமா ? ?

திருமதி கோவலன் (கண்ணகி) மேல் எந்தவிதமான தனிப்பட்ட கோபமும் இல்லாவிடிலும், மானிடம் சந்தித்த மிகப்பெரிய அவலத்தினை பழைய இலக்கியங்கள், புராண-இதிகாசச்செய்திகள் கொண்டு தற்போது பலரும் நியாயப்படுத்த முனைந்து வரும் நிலை காரணமாக, ஒருசில கருதுகோள் வழக்குகளைப் பற்றி ஐயம்கொள்ளவேண்டியுள்ளது. தன்னை மறந்தது மட்டுமன்றி பன்னிரண்டு வயது மாதவியைப்பொருள் கொடுத்துப்பெற்றுக்காமம் நுகரத் தலைப்பட்ட கோவலனை, எதுவுமே கேட்காமல் மகிழ்வோடு ஏற்றுக் கொண்ட கண்ணகியின் தன்னலம் விமர்சிக்கப்படவில்லை. மாறாக தண்டனை கிடைக்க வேண்டிய இடத்தில் கிடைக்காமல், வேறொரு அபாண்டமான திருட்டுக்குற்றச்சாட்டில் கோவலன் தண்டிக்கப்படும் போது மட்டும், தன்னொருத்தியின் வாழ்வைப் பறித்ததற்காய் மதுரையையே அழிக்கத்துணிந்த இடத்தில், கண்ணகியின் வரட்டுத்தனமான தான் என்ற மமதையை 'உயர் கற்பின் திறன்' என எவ்வாறு போற்ற முடியும்? (உண்மையிலேயே மதுரை எரிந்ததற்கு வரலாறு ஆகாயக்கற்களின் மோதுகையைக் காரணம் காட்டினாலும், காப்பியம் கற்பின் சினம் என்றுதானே சொந்தம் கொண்டாடுகிறது). தான் இழைத்த தவறினை உணர்ந்த தருணத்திலேயே பாண்டிய மன்னன் உயிர் துறக்கத் துணிந்தான். கோப்பெருந்தேவியும் கூடவே உயிர் நீத்தாள். இது போதாமல் தன் ஒற்றைத்தாலிக்காய் ஊரை அழிப்பது தான் கண்ணகியின் கற்பிற்குப் பெருமை எனில், அவள் களங்கமான வளாகவே இருந்து ஊரைக்காப்பது தான் தக்க மானிடமாக இருந்திருக்கும். வார்த்தைக்கு வார்த்தை புராணங்களையே மேற்கோள் காட்டி

தலைவிதிக்கும், தன்னம்பிக்கை இழப்புக்கும் காரணமாக இருக்கும் 'அருள்மொழிகள்' மதுரையை வேண்டாம் ! ஒற்றை விறகுக் கட்டையைத் தானும் எரித்துக்காட்டி நிரூபித்துவிட்டு, அதற்குப் பின்னர் அவையேறட்டும். இனிய உறவுகளே ! இயற்கை அழித்து விட்டுப் போனதோடு, எல்லாம் முடிந்து விட

வில்லை. நம் ஒவ்வொருவரின் முன்னும் பல பணிகள் காத்திருக்கின்றன. தமிழர் தாயகம் எங்கும் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட சொந்தங்களை இழந்து நம்முடைய சமுதாயக்கட்டமைப்புக்கள் சிதைந்துள்ளன. சுனாமி கொன்றுபோட்டது போதாதென்று நாம் வேறு நம்முடைய சிந்திக்காத வார்த்தைப்பிரயோகங்களாலும், மனிதாபிமானமற்ற கற்பிதங்களாலும் வாழ்வு மீதான பலரின் பிடிப்பையும் கேள்விக்குள்ளாக்குவதை அனுமதிக்கப்போகிறோமா ? . . என்பது பற்றிதெளிவாக இருக்க வேண்டும். வாழ்க்கை அழகியது, வலியது. அதை மலினப்படுத்தலாமா ! மனம் வருந்திக்கிடக்கும் உறவுகளுக்கு ஆதரவாக இருக்கப்போகிறோமா அல்லது இதுதான் சந்தர்ப்பமென்று எங்களைப் பெரிய புண்ணிய கோடிகளாகச் சித்தரித்து, அவர்கள் தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொண்டார்கள் என்பவர்களுக்கு, பாதிக்கப்பட்ட நம் மக்களுக்கு முன்பிருந்ததை விட சிறப்பான வாழ்க்கைத் தரத்தினைப் பெற்றுக்கொடுத்து, சரியான பாடம் கற்பிக்கப் போகிறோமா?

III

இதேவேளை சர்வதேச ஊடகங்களின் செய்திகளைப் பார்க்கையில் தமிழர் தாயகம் உண்மையிலேயே இந்தப்பூமியில் தானா உள்ளது ? என்றதொரு சந்தேகம் வேதனையுடன் மனதில் உண்டாகின்றது. எல்லோருடைய வேதனைகளையும் சரிசமமாக பார்க்கும் எங்கள் பிரதேசங்களில், அதிலும் குறிப்பாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு, பத்தாயிரம் பேருக்கு மேலாக இழந்து தவிக்கும் அம்பாறை மாவட்டம் உட்பட தமிழீழப்பிரதேசங்கள் பற்றி அனைத்துலகம் மௌனம் கடைப்பிடிக்கின்றது. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் இணைப்பாளர் தெற்கின் காலி நகரத்திலிருந்து 'வைத்தியர்களின் தேவை இங்கில்லை. போதும் போதுமென்ற தொகையில் வந்திருக்கிறார்கள்' என்கிறார். இது மட்டுமன்றி மீட்புப்

பணிகளில் ஈடுபட்ட போராளிகளைக் காட்சிகளில் காட்டும்போது 'சிறிலங்கா ராணுவத்தினர்' என்ற தோரணையிலும், சிக்கலான விடுதலைப் புலிகளிடம் அவர்களின் அனுமதியினை முயன்றுபெறுவதில் அரசுக்கு ஏற்படும் தாமதத்தினால்தான், எல்லாம் கொஞ்சம் இழுபடுகிறது என்பது போலவும் ஒரு கருத்தை வலிந்து திணிப்பதற்காக முயலப்பட்டிருந்தது. மற்றவர்கள் எப்படியிருந்தாலும் எங்கள் இனத்தின் வலிமையும், வாழ்வும் எங்களிடமே தங்கியுள்ளது. கிளைத் தமிழர்களாய் உலகெங்கும் பரந்திருக்கும் நம் உறவுகளிடையே, அதிலும் குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் புதியதொரு விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் தமிழைக் கரைத்துக்குடித்துவிட்டு ராமனையும், சீதையையும் பற்றி சமா வைக்கும் வாரிதிகளாக இல்லாமல் இருக்கலாம். சிலருக்கு வாழ்விட சூழ்நிலைகள் உட்பட்ட பல காரணங்களினால் காரணமாக தமிழில் பேசுவதே சிக்கலாக இருக்கலாம். ஆனாலும், உறவுகளின் அவலம் கண்டு, உயிர் வலிக்கும் அவர்களின் மனிதாபிமானமும், துன்பங்களைக் களைவதற்கான அவர்களின் முன்னெடுப்புகளும் வேதனையில் வாடுபவர்களுக்கு மட்டுமன்றி முழு இனத்திற்குமே நிம்மதியளிப்பவை. வெறுமனே தமிழைப் பேசியே பிழைப்பவர்களுக்கு முன்னால் அவர்கள் உணர்வுள்ள தமிழர்களாக இருக்கிறார்கள்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசர மனிதாபிமான உதவிகள் மட்டுமல்ல இங்கு வேண்டப்படுவது. அதற்கும் மேலாக தமிழர் தாயகமெங்கும் அவர்களின் வாழ்விடங்கள், அத்தியாவசிய கட்டுமானங்கள் மற்றும் தொழிலாதாரங்கள் என்பவையும் கட்டியெழுப்பப்பட வேண்டியவையாக உள்ளன. 'எல்லாமே முடிந்துவிட்டது ! குடி மூழ்கி விட்டது ! இனியும் வேண்டுமா ஈழம் ?' என்று தருணம் தேடி தர்க்கிக்கும் தாடிகளுக்கு கிளைத் தமிழர்களின் வலிய உழைப்பில் தாயகத்தில் இடப்படும் அத்திவாரம் ஆரவாரமில்லாத ஆழமான பதிலாக இருக்கும். வேலியை வெள்ளம் அடித்துப் போனதற்காய், கூரையைப் பிடுங்கி விடலாமெனக் கூத்தடிப்பவர்களுக்கு முன்னால், இன்று உலகில் வளம் படைத்து வாழும் நாடுகளின் வரலாற்றுப்பின்னணியினை நமக்கேற்றவாறு உள்வாங்கி, உறுதியுடன் உழைக்கவேண்டிய இனமாக உலகம் பூராவுமுள்ள தமிழீழத் தமிழர்கள் உள்ளார்கள். 1ஆம் உலக யுத்தம் ஏற்படுத்திய சுமையிலிருந்து முழுமையாக விடுபட முன்னரேயே, ஆறாண்டு காலமாக 2ஆம் உலக யுத்தத்திற்கு முகம் கொடுத்த மேலைநாடுகள் மற்றும் யப்பான் ஆகியவை சிறிது காலத்திற்குள்ளேயே துரிதவளர்ச்சி அடைந்திருந்தன.

சிலர் கூறுவார்கள், 'என்ன இருந்தாலும், யப்பான்காரனின்ரை மூளை மாதிரி ஒருதருக்குமே வ்ராது. அங்கை பாலர் வகுப்புப்பிள்ளையளே பார்த்துக்கொண்டிருக்க கை மணிக்கூடுகள் சும்மா செய்து தள்ளுமாம் !'. சற்றே மிகைப்படுத்தப்பட்டதாக இருந்தாலும், முன்னேறிய

மற்றைய இனங்களின் மூளைகளுக்கு பாராட்டுப்பட்டயம் வழங்கும் நாம், எங்களை முழுமுட்டாள்களாக ஏற்றுக்கொண்டு விட்டோமா ? அப்படியும் இல்லை ! பிறப்பினால் அனைவரும் சமமே ! மற்றவர்களைப் பார்த்துப் பிரமிக்கத்தெரிந்த எம்மால், ஏன் அவர்களைப் போல் முன்னேற முடியாது ?????? எங்கள் தாயகத்தின் முன்னேற்றத்துக்கான வழியிலுள்ள தடைகளை இனங்கண்டு, உரிய வகையில் செயலாற்றும் போது பின்னடைவுகள் யாவும் தற்காலிகமானவையாகவே இருக்கும் ! 'ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு, வையத்தின் வானம் நணியது உடைத்து', என்றுரைத்த வள்ளுவன் நம்மினத்தவன் தானே ! இன்னும் 'புத்தம் புதிய கலைகள் - பஞ்ச பூதச்செயல்களின் நுட்பங்கள் கூறும் மெத்த வளருது மேற்கே ' அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை... சென்றிடுவீர் எட்டுத் திசைக்கும் - கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் !', என்று சுட்டிக்காட்டிய பாரதியைத் தொட்டுத்தூக்கிச் செல்வதற்கு இறுதியில் வந்தவர் ஆக பதின்மூன்று பேர் தானே ! கடந்தகாலத்தை நிறைத்திருக்கும் எங்கள் கண்மூடித் தனங்களை உள்ளுணர்ந்து ஒதுக்கி உயரவேண்டாமா ?

1945ஆம் ஆண்டில் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட யேர்மனி, ஒஸ்திரியா, இத்தாலி ஆகிய நாடுகள் மாத்திரமன்றி வெற்றிகொண்ட நாடுகளும் கூடத்தான் மிக மோசமான பொருளாதார நலிவுக்குள் சிக்கியிருந்தன. வீடு வாசல்கள், தொழிற்சாலைகள், பாடசாலைகள் என அத்தியாவசியங்கள் அனைத்துமே குண்டு வீச்சுகளினால் சின்னாபின்னமாகிக் கிடந்த காலகட்டம் அது. கணிப்பீடுகளின்படி மொத்தமாக 80 மில்லியன் (எட்டு கோடி) மக்களைப் பலிகொண்ட அந்த யுத்தத்தின் கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட விசாலத்தை உணர்வதற்காக, இதில் ஈடுபட்ட நாட்டுப் படைகள் 6 வருடங்களில் யுத்தத்திற்காக செலவளித்த பணவிபரம் (அமெரிக்க டொலரில்) பின்வருமாறு

| நாடு | செலவு (US $ இல்) |
|---|---|
| அமெரிக்கா | 341 பில்லியன் |
| யப்பான் | 562 பில்லியன் |
| யேர்மனி | 272 பில்லியன் |
| சோவியத் | 192 பில்லியன் |
| பிரிட்டன் | 120 பில்லியன் |

இதற்குப் பிறகும் சோகங்களுக்கு ராசிபலனைக் காரணம் காட்டிவிட்டு அவர்கள் சோர்ந்து விடவில்லை. அன்புக்குரியவர்களே துன்பப் படுபவர்களின் கண்ணீருக்கு நாம் கொடுக்கும் அர்த்தம் அதைப் போக்குவதிலேதான் இருக்கமுடியுமே தவிர, அதற்குக் காரணம் கற்பிப்பதிலே அல்ல !

இந்த நிலையிலே 1947ஆம் ஆண்டின் யூன் மாதத்திலே ஜோர்ஜ் கற்லெற் மார்சல் என்பவர் 'ஐரோப்பாவிற்கான மீள்நிர்மாண செயற்திட்டம் - European Recovery Program ' ஒன்றினை அறிமுகப்படுத்தினார். இதுவே பின்னர் 'மார்சல் திட்டம்' என அழைக்கப்பட்டது. இதன்படி பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு-யேர்மனி, இத்தாலி உட்பட





பல மேற்கைரோப்பிய நாடுகள் மொத்தம் 13 பில்லியன் US $ இனைக் கடனாகப் பெற்று தத்தம் நாடுகளைக் கட்டியெழுப்பின. (ஒப்பீட்டுக்காக : ஒரு பில்லியன் 9 பூச்சியங்களைக் கொண்டது = 100 கோடி. இனப்பிரச்சினைத்தீர்வைக்காட்டி பெற்றுக்கொள்ள சந்திரிகா கனவு காணும் உதவித்தொகை 4.5 பில்லியன் டொலர்). மேற்குறித்த கடன்தொகையின் 70 வீதத்திற்கு நாட்டின் பொருளாதாரக் கட்டுமானத்திற்கு வேண்டிய ஆதார சாதன வளங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1952 ஆம் ஆண்டளவில் பெற்ற கடன் மீளளிக்கப்பட்டதுடன் குறித்த நாடுகள் போருக்கு முன்பிருந்த நிலையை விட மேன்மை அடைந்திருந்தன. இருந்தபோதும் மீளளிக்கப்பட்ட கடன்தொகை சிலநாடுகளிலே மீளவும் முதலிடப்பட்டது. அதன் வழியில் அந்தந்த நாட்டு மக்களின் தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பினில் அவை மேலும் அபிவிருத்தி அடைந்தன. உழைப்பையும் அதன் ஒவ்வொரு துளியையும் மதிக்கும் நம் 5 லட்சம் மக்கள் தாயகத்திற்கு வெளியே வாழ்கிறார்கள். உள்நாட்டிலும் உறுதியான கட்டுமானங்கள் பல உண்டு. அலை காவுகொண்ட பெறுமதி மிக்க நம் உறவுகளின் உயிர்களைத் தவிர மற்றைய எதனையும் எம்மால் மீளவும் உருவாக்க முடியும் என்றெழுவதற்கு ஏன் தயங்க வேண்டும் ! அது மட்டுமல்ல ! சுனாமி விட்டாலும் ஆமி மறுபடியும் அவற்றை குண்டு போட்டழித்து விட்டால் . . .என்றும் தயங்கத் தேவையில்லை ! ஏனென்றால் அதற்கு ஆமியை அடிக்க விடாமல் பண்ணலாம். அதையும் மீறி அடிவிழுந்தால், அடித்துவிட்டுப் போகட்டும் . . மீண்டும் கட்டுவோமென. எம்மைக் கட்டியெழுப்புவோம் ! ஒரு அழகிய சீனப் பழமொழி . . . 'ஒருவனுக்கு மீனைச் சாப்பிடக் கொடுத்தால் ஒருவேளை பசி ஆறுவான். அதே மீனைப் பிடிப்பதெப்படி என்றவனுக்குக் கற்றுக் கொடுத்தால், வாழ்நாள் பூராவும் அவன் பசியாறுவான்'. நாமும் வலைகளையும், வள்ளங்களையும் தயார் செய்வோம் ! வாழ்வதற்காய் உழைப்போம் ! ! ! வெல்வோம் ! ! !






# மீண்டும் துளிர்க்கும் மரங்கள்

ச.முருகானந்தன்



சுற்று முற்றும் பார்க்கின்றேன்.

இடிந்த கட்டடங்கள் குன்றும் குழியுமாகிவிட்ட தெருக்கள். செடிபடர்ந்து காடு பத்திப்போன காணிகள். மாட மாளிகைகளாய் வீடு வாசல்கள் இருந்த இடமெல்லாம் கற்குவியல்களும், இடையிடையே குடிசை வீடுகளுமாய்....

விதவைக் கோலமாய் என்னை வரவேற்றமணற்பாதிக் கிராமத்தின் சிதிலங்கள் மனதை நெருடிய அதேவேளையில் வீட்டிலும் விதவையாய் என் தங்கை சாந்தாவைத் தரிசிக்கப்போகின்ற, வரப்போகும் சோகமான கணங்கள் முள்ளாய் நெஞ்சில் வலிக்க. மெல்ல அடி பதித்து வீட்டை நோக்கி நடந்தேன்.

எங்கும் ஒரு சோகமான அமைதி! அந்தச் சோகத்தின் மத்தியிலும் நம்பிக்கையோடும் உறுதியோடும் எதிர்ப்படுகின்ற தெரிந்த, தெரியாத, மறந்த முகங்கள்!

இப்போது வந்துள்ள சமாதானச் சூழலினால் ஏற்பட்ட மலர்ச்சியா? இருக்காது இத்தனை வருடங்களாய் சுதேசிய, விதேசிய அராஜகங்களுக்கெல்லாம் முகம் கொடுத்து நின்று நிலைத்ததனால் ஏற்பட்ட உறுதியாகத்தான் இருக்க வேண்டும்.

பாதையால் பிரிந்து பனங்கூடல் ஊடாக ஒற்றையடிப்பாதையில் நடந்தால் வீடு விரைவில் வந்துவிடும். இறங்கிநடக்கின்றேன். வானுயர்ந்த சோலை யென உறுதியாய் நிற்கும் பனை மரங்கள்- எங்கள் மக்களின் மனவுறுதியைப்போல!

விழுந்து, பிரிந்து போய் மணம் வீசும் பனம் பழங்கள்.

ஆச்சி பினைந்த பனாட்டு, அப்பு கிழித்துப் போட்ட புழுக்கொடியல், அம்மா சுட்டுத்தந்த பனங்காய்ப் பணியாரம்....

எமது மக்களைப் போல், இந்த மரங்களைக்கூட சென்றி போடுவதற்காக அழித்திருக்கிறார்கள். பூட்டன் வைத்த விதையில் முளைத்த மரங்கள் வெட்டிச்சாய்க்கப்பட்டாலும், பாட்டன் போட்டு வைத்த மரங்களுடன் போட்டி போட்டுக்கொண்டு அப்பு வைத்த விதைகளிலிருந்து முளைத்த வடலிகளும் வானை நோக்கிக்கொண்டு நின்றன.

எங்கட மண்ணிலிருந்து பனைமரங்களை முற்றாக அழித்தொழிக்க முடியாது.... அதைப்போல் தான் எங்களையும்.....

யோகேந்திரநாதன்ணை நேற்று கிளிநொச்சியில் கூறியது இப்பொழுதும் காதோடு ஒலித்துக் கொண்டிருந்தது. உண்மைதான்.....

எத்தனை இழப்புக்கள்!

ஒரு மானைக் கொன்றாலும் சிறைத் தண்டனை வழங்கும் நாட்டில் எத்தனை மானுட உயிர்கள் மனிதாபிமானமற்ற முறையில் கொன்று புதைக்கப்பட்டுவிட்டன.

மீண்டும் யோகேந்திரநாதன்ணையின் நினைவுகள்!

"தம்பி நீர் வெளிநாட்டில் இருந்திட்டுவாரீர். இங்க என்ன நடந்தது என்று தொடர்பு சாதனங்கள் மூலம் கேட்டிருப்பியள். இங்கே நிருபர்களுக்கு அனுமதி இருக்கவில்லை. கசிஞ்சு வந்தவை தான் நீங்கள் அறிந்தவை. உங்களுக்குச் சிறுதுளிதான் தெரியும். இங்கேயோ நடந்தது பெருவெள்ளம்! செம்மணிப் புதைகுழிதான் உங்களுக்குத் தெரியும்! ஆனால், வீட்டுக்குவீடு மலக்குழி எல்லாம் புதைகுழிதான். வாழ வேண்டிய எத்தனை இளம் உயிர்களை- அப்பாவிகளை தமிழன் என்ற ஒரே காரணத்திற்காகக் கொன்று குவிச்சாங்க, இண்டைக்கு எங்கட பொடியள் ஆயுத மேந்தாட்டில் எல்லாமே முடிஞ்சிருக்கும்..."

பதினைந்து வருடங்களுக்கு முன் நான் நாட்டை விட்டு வெளியேறிய காலத்தை நினைத்துப் பார்க்கிறேன். வடமராட்சியிலை "லிபரேசன் ஒப்பரேசன்" என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கை!ஓ.... எத்தனை அப்பாவி இளைஞர்களை இழுத்துப்போட்டுச்சுட்டார்கள். "செல்" அடி, விமானக்குண்டுவீச்சு, பங்கருக்குள்ள பாதுகாப்புத்தேடி இருந்தவையைக் கூட சுட்டுத் தள்ளிய கொடூரம்!

கப்பூதுப்பக்கமாக ஓடி, இரவிரவாக உயிரைக்கையிலை பிடிச்சுக் கொண்டு வரணியை அடைந்து....

"தம்பி நாங்க சமாளிப்போம்....நீ இளந் தாரி.... உன்னைக் கண்டால் சுட்டுப் போடுவாங்கள்....நீ ஓடித்தப்பு...எங்கேயாவது வெளிநாடு போய்ச்சேர்....கையிலும் கழுத்திலும் காதிலிருந்த நகையைக் கழட்டித் தந்த மங்களக்கா, "மேனை இவ்வளவு காசுதான் இருக்கு.... கொழும்பிலை மாமாவட்டைப் போய்ச் சேர்...அவர் எப்படியும் வெளி நாட்டுக்கு அனுப்பி வைப்பார்...."

"கதறி அழுது அனுப்பி வைத்த அம்மா.... ம் இவர்கள் யாருமே இப்ப இல்லை. குருதி தோய்ந்த இந்த மண்ணுக்கு உர மாயிட்டினம். அம்மா செல் விழுந்து செத்துப்போனா. அடுத்து அக்காவும் தூக்குப் போட்டு செத்திட்டா...."

நினைத்துப் பார்க்கிறேன். நெஞ்சை அடைக்கிறது. கண்களில் ஈரம். ஓ...அம்மா. அக்கா...உங்கட இறுதிச் சடங்குக்குக்கூட வரமுடியேல்லை. நீங்கள் செத்துப்போன தகவல்கூட எத்தனை மாதம் கழித்து எனக்குக் கிடைத்தது.

அன்று அவர்கள் தந்த பணத்துடனும், நகையுடனும் கொழும்புக்கு நானும் சிறியும் வந்தம். சின்ன மாமா உதவி செய்யாட்டிலும் பரவாயில்லை. தங்கட வீட்டில தங்கிறது தங்களுக்கு ஆபத்து என்று கை விரிச்சதுதான் பெருங்கவலை. அம்மாவுக்கு கடிதம் எழுதியும் பதில் வரவில்லை. கடிதங்கள் எல்லாம் அப்ப ஆமிக்காரர் கிழிச்சுச் சோதிக்கிறவை. ம்...என்ன நடந்ததோ!

நினைத்துப் பார்க்கி றேன்.

நட்பு என்பது எவ்வளவு உயர்ந்தது? வீணாகச்செலவு செய்து கொண்டு லொட்ஜில் நின்ற அந்தக் கால கட்டம் மிகவும் ஆபத்தானது. அடிக்கடி செக்கிங். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நானும் சிறியும் ஒரு முடிவுக்கு வந்தோம். இருவரிடமிருந்த பணத்தைச் சேர்த்தால் ஒருவர் வெளிநாடு போவதற்குப் போதுமானது. "நீ போ மச்சான் முதல்ல. போய் உழைத்து என்னைக் கூப்பிடு" என்று வற்புறுத்தி தன்னிடமிருந்த பணத்தை என்னிடம் கொடுத்தான். கண் கலங்கி சம்மதித்தேன்.

அதிர்ஷ்டவசமாக எமக்குக் கிடைத்த முகவர் நேர்மையானவராக இருந்தார் அடுத்த மாதமே நான் சுவிஸ் சென்றேன். சிறி விமான நிலையம்வரை வந்து வழியனுப்பினான். கண்கள் கலங்க விடை பெற்றபோது, அதுதான் எமது கடைசிச் சந்திப்பு என்று நான் நினைக்கவில்லை.

சுவிஸ் சென்ற சீக்கிரமே பணம் சம்பாதிக்கும் மெசின் ஆனேன். இதற்கிடையில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக தொடர்புகள் விட்டுப் போயின. சிறி கொழும்பிலிருந்து. ஓரிரு கடிதங்கள் பரிமாறின. அப்புறம் தொடர்பு அற்றுப்போனது.

பின்னர் வந்த செய்திகள் மன வேதனையைத்தந்தன. சிறி கைதுசெய்யப்பட்டு பூசா சிறைச்சாலையில் இருப்பதாக அறிந்தேன். எவ்வளவு செலவானாலும் அவனை வெளியே எடுக்க வேண்டுமென முயன்றேன். பணம் பத்தும் செய்யும் என்பார்கள். ஓரிருவர் ஏமாற்றினாலும் கூட இறுதியில் சிறியை வெளியே எடுத்திட முடிந்தது. வெளியே வந்த சிறி சிறைச்சாலைக் கொடுமைகள் பற்றி எல்லாம் கண்ணீர மல்கக் கூறினான். அவனுக்கு போனில் ஆறுதல் கூறி உடனடியாக சுவிசுக்கு வரும்படி கூறினேன்.

இல்லை மச்சான்...நான் வரேல்லை...ஊருக்குப் போகப் போறன்.... "என்ன சிறி உனக்கு விசரே?... அங்கை போய் மறுபடியும் இந்த யுத்த பூமியில கஷ்டப்படப் போறியே?....."

"இல்லை ஆனந்தன்.... கஷ்டமும் சுகமும் நிகழ்வுகளிலை தங்கியிருக்கேல்லை.... நினைப்புகளிலைதான் தங்கியிருக்கு. எனக்கென்னவோ இந்த மண்ணில இருக்கிறதுதான் மேல் என்று தோன்றுது"

நான் எவ்வளவோ வற்புறுத்தியும் சிறி கேட்கவில்லை.

"நான் கொஞ்சம் காசு அனுப்புறன் மச்சான்...."

"என்னை வெளியிலை எடுக்க நீ எவ்வளவோ செலவளிச்சுப் போட்டாய்....எனக்கு இப்ப காசு அதிகம் வேண்டாம். வீட்டுக்கு அனுப்பு... எங்கட வீட்டுக்கும் அனுப்ப முடியுமெண்டா...." அதற்குப் பின் சிறியின் தொடர்பு.... இல்லை.

சிறியின் தங்கை ரஞ்சிதான் இடைக்கிடை எனக்கு எழுதுவாள். காசு கிடைத்ததாக நன்றி தெரிவிப்பதுடன், நாட்டு நிலைமைகளைப் பற்றியும் எழுதுவாள். அவளது கடித மூலம் சிறி போர்ாளியாகிவிட்டதை அறிய முடிந்தது.

தொண்ணூற்றியாறில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் ரஞ்சியின் கடிதமும் வருவதில்லை. அவர்களுக்கு எங்கே பணம் அனுப்புவது என்று தெரியாமல் தவித்தேன்.

சுவிசில் பாஸ்போட் கிடைக்கவும், இலங்கையில் போர்த் தவிர்ப்பு உடன்படிக்கை ஏற்படவும் சரியாக இருந்தது. என் மனதில் ஊர்த் தவனம் பிறந்தது. சின்னஞ்சிறு பாதம் பதித்து விளையாடி பதினெட்டு வயதுவரை வாழ்ந்த பூமியல்லவா?

உச்சில் அம்மன் கோவிலும், ஆலமரமும், மாணிக்கவளைக் குளமும் மனதில் இளமை நினைவுகளை மீட்டின. சிறியும், குகனும், பிரபாவும், ஜெகனும், நாதனும் நீச்சலடித்துக் கும்மாளமடிக்கும் மாரி காலக்குளத்து நினைவுகளில் ஊரின் நினைவலைகள் முட்டிமோதின.

கண்ணகி அம்மன், பொங்கல், மாதா கோவில் கூடு சுத்தல், நாச்சிமார் கோவில் மானம் பூ வாழை வெட்டு, மூத்தநாகோவில் தவில் கச்சேரி, இசைக்குழு முதலைக்குழி முருகன் கோவில் சூரன்போர், கீரிமலைக்கேணி- கடல்குளிப்பு குவில்கள்ளு!

குளிப்பை நினைக்கும் போது உச்சில் குள மாரிக்குளிப்பும் நண்பர்களின் கும்மாளமும் நினைவுக்கு வரும். ஒரு கரையிலிருந்து மறுகரைக்கு நீச்சலடித்து, மீண்டும் திரும்பி வந்து போட்டி போட்டு... எனக்கு நீந்தத்தெரியும்.... ஆனால், பயம். ஒல்லித் தேங்காய் கட்டி மார்பில் அணைத்தே நீந்துவேன்.... சிவம் வம்பன்..... நடுக்குளத்தில் ஒல்லித் தேங்காய் மிதப்பைப் பறித்து விடுவான். நான் முக்குளித்து திணறிக் கரைக்கு வருவேன்..... எல்லோரும் கெக்கலித்துச் சிரிப்பார்கள். நடேசு மாமாவும் சில வேளைகளில் எங்களோடு வந்து மணிக்கணக்கில் நீச்சலடிப்பார், சுழியோடி வந்து எங்களது உடுப்புகளைக் கழற்றி விடுவார். நாங்கள் உடுப்பில்லாமல குளத்தை விட்டு வெளியேற முடியாமல் தவிப்போம்.

ஒரு பலத்த மாரியில் சுழியோடிய நடேசு மாமா சுழியில் சிக்கி மூன்று மணித்தியாலங்களின் பின்னர் பிணமாக மீட்கப்பட்டார். அதன் பின்னர் பல நாட்கள் யாரும் குளப்பக்கம் எட்டிப்பார்ப்பதில்லை. வீடுகளில் பலத்த கட்டுப்பாடு!

சில நாட்களின் பின் பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறியது. நீச்சலும், குளிப்பும் கும்மாளமும் மீண்டும் தொடர்ந்தன. ஒரு நாள் சத்தியமூர்த்தி சுழியோடி வந்து எனது உடுப்பைக் கழற்றிவிட்டான். நான் நடுக்குளத்திலிருக்கும்போது திட்டமிட்டு எல்லோருமாக வெளியேறி எனது மாற்று உடுப்பையும் துக்கிக் கொண்டுபோய் விட்டார்கள்.

நண்பர்கள் போனபின்னரும் குளத்தில் ஆணும் பெண்ணுமாகப் பலர் குளித்துக்கொண்டிருந்ததால், என்னால் வெளியேற முடிய வில்லை. குளிரடிக்கும் வரை குளத்தி லேயே இருந்தேன். சனநடமாட்டம் குறைந்தது. பரிமளம் அக்கா கரையில் உடுப்புத்தோய்த்துக் கொண்டிருந்தார்.

நீண்ட நேர தயக்கத்தின் பின் அக்காவிடம் விசயத்தைக் கூறினேன். அக்கா சிரித்துக்கொண்டே தனது பாவாடையை எடுத்து குளத்துள் என்னிடம் வீசினார். அன்று பாவாடையோடு வீடு வந்து சேர்ந்ததை நினைக்கையில் இப்பவும் சிரிப்பு வருகிறது.

அந்தப் பரிமளாக்காவும் இன்றில்லை. இந்தியன் ஆமி அமைதி காத்த காலத்தில் ஓரிரவில் வீட்டில் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருப்பதாகப் பின்நாளில் அறிந்தேன்.

எங்கள் மணற்பாதிக் கிராமத்தில் இன்று முன்பிருந்தவர்களில் கால்வாசிப்பேர் கூட இப்போது இல்லை என்று சாந்தா எழுதியிருந்தாள். உண்மைதான். இப்போது தெருவில் அதிக சன சந்தடியைக் காணோம், சனசக்தி சனசமூக நிலையத்தில் ஒரே ஒரு பத்திரிகையை, ஒரேயொரு முதியவர் படித்துக் கொண்டிருக்கிறார். யாரென்று தெரியவில்லை. புதுமுகம்.

சாந்தா வரும்படி எழுதியிருந்தால். தான் இப்போது தாய் மண்ணுக்கு வருகிறேன். நண்பன் சிறியின் தங்கை ரஞ்சியைத் திருமணம் செய்யும் எண்ணம் என் மனதில் இருந்தது. சாந்தா என் திருமணம் பற்றி முன்னர் எழுதியபோது இதையே அவளுக்கு எழுதினேன். ரஞ்சியைச் சுவிசுக்கு அனுப்பும்படி நான் எழுதிய கடிதம் இங்கு வரமுன்னரே என்னவெல்லாமோ நடந்து முடிந்துவிட்டது.

ஆனையிறவு வெற்றிச் சமரில், ஓயாத அலை மூன்றின் வெற்றிக்காக கரும்புலியாகித் தன்

(22 ஆம் பக்கம் பார்க்க....)

# கடலுக்குணவான கரையோரங்கள்

போருழுத நிலத்தில்
உழைப் பெனும் ஏருழுது
நிமிர்ந்த வாழ்வை
நொடித்துப் போனது "சுனாமி"

அமைதி நாட்களில்
ஆசுவாசப் பெருமூச்சுவிட்ட
உறவுகளின் அடிமடியில்
விழுந்தது இடி.

காலனின் கரங்கள்
உயரலை வடிவில்
ஊர் புகுந்தலம்ப
உயிர்கரைத்தும்
விடுதலைக்கு விலை கொடுத்தும்
தலை நிமிர்ந்த தேசத்தின்
கரைகளில் ஓலம்.
காற்றின் மீதேறி வருகின்றன
துயரப்பாடல்கள்.

காரை பெயர்ந்து தூர்ந்த
கட்டடத்துகளாகி
கிடக்கிறது வாழ்வு.

உப்புநீர் குடித்து
ஊதிப்பருத்த வெற்றுடல்களைக்
கட்டியழுத விம்மல்களோடு
கரைந்து போகுமா எம் வலிகள்?

பொங்கிய கடலுக்கிரையாகி
புதைகுழிக்கும்,
வைத்தியசாலைக்கும்,
நலன்புரிநிலையத்துக்குமாய்
சிதறிப்போயிற்று
உறவுக்குருவிகள்.

பனைகளிற் தொங்கியும்
இடிபாடுகளிற் சிக்குண்டும்
வெறுங்கையராய் வந்த
உள்ளங்களின் ரணங்கள்
எப்போது ஆறும்?

கடலுணவிற் செழித்த ஊர்களெல்லாம்.
கடலுக்குணவான போது
யாரிடம் போய் மனுக் கொடுப்போம்?

பாலன் பிறந்த மகிழ்வும்
புதுவருடம் விரியும் பொலிவும்
இணைந்த
கடைசி ஞாயிறின்
தொழுத மனங்களை
ஏன் குலைத்தாய் இறைவா?

மூன்று நிமிடப் பேரலை
கொண்டு போய் விட்டது
எல்லாவற்றையுமே.

மனிதரென்றும் மாக்களென்றும்
மரங்களென்றும்
கறுப்பனோ வெள்ளையனோ
இந்தியனோ ஈழத்தவனோ
இந்துவோ பௌத்தனோ
இஸ்லாமியனோ
எந்தப் பேதமும் பார்க்காது
எந்தப் பிரிப்புகளும் நோக்காது.
கடல் அள்ளிப்போன சமத்துவம் உணர்வோம்
பிரிந்திருந்த
அளவு கோல்களைத் தூரவீசுவோம்.
துயருற்ற மனிதர் யாவரும்
ஒன்றென்றுணர்ந்து
கரம் கொடுப்போம்.

— அம்புலி

# சாத்தானேறிய கடல்

என்றைக்கும்
சாத்தானிடம் தோற்றுப்போவதே
கடவுளுக்கு வழக்கமாகிவிட்டது.

ஆதிநாளில்
மானுடப் படைப்பின் பொழுது
ஆதாம் ஏவாள் விடயத்தில்
சாத்தானிடம்
தோற்றுப்போனான் கடவுள்
அன்றிலிருந்து சாத்தானிடம்
சரணாகதியாகிப் போனது உலகம்.
இதோ இப்பொழுது மீண்டும் சாத்தான்
கடலேறி வந்திருக்கிறான்.

இத்தருணத்தில் எங்கிருக்கிறாய் கடவுளே.....
வானம் கிழித்து வெளியே வா...
தோல்விகளால் துவண்டு துவண்டு
முகம் மோதுண்டு வீழ்ந்தவுன்
குரூபியான வதனமதை
நான் நன்றாகப் பார்க்கவேண்டும்.

இங்கே பார்....
என்னென்ன படையல்களை
நாமுனக்குப் படைத்திருக்கிறோமென்பதை
மனித வர்க்கத்தின் மண்டையோடுகள்
எலும்புக் குவியல்கள் தசைத் துண்டாங்கள்
குழந்தைகள் உடலில் குழம்புக் கறி
இடையிடையே ருசிக்கும் என்பதற்காய்
மிருகங்களின் நிணத்தில் வறுவல்
எல்லாமுனக்கு மட்டுமே
நன்றாய்ப் புசித்துப் பசியாறு.

படையலுக்கிடமுடியாது போனவற்றை
பூமியிலிட்டுப் புதைத்திருக்கிறோம்
வேண்டும்போதெல்லாம் உண்டு மகிழ்
விக்கலெடுத்தால் அதோ பார்....
உதிரம் கலந்ததால் உப்புக் கூடியிருக்கிறது
சாத்தானேறிவந்த கடல் நீர்
அள்ளி தாகம்தீர அருந்து.

உனக்குரிய அர்ச்சனைக்காய்
கள்ளி மலர்களினாலும் எருக்கலம் பூக்களினாலும்
மாலை தொடுத்து வைத்திருக்கிறோம்
சூடிக்கொள்.

பிள்ளையிழந்தவரின் கூக்குரலும்
கணவனை இளந்தவள் ஒப்பாரியும்
உறவுகளைப் பறிகொடுத்தோன் புலம்பலும்தான்
உனக்கு நாம் பாடும் மூகாரிப் பாசுரங்கள்
ஏற்றுக்கொள்.

இதுகாறும் இவையனைத்தையும்
சாத்தானுக்கே நாம் படையலாக்கினோம்
இன்றுமுதல் சர்வமும்
உனக்கே சமர்ப்பணமாகட்டும்.

பஞ்ச பூதங்களுக்கெல்லாம் பதியாய்
விளங்குபவன் நீதானாமே
என்ன மாயம் செய்தான் சாத்தான்
கடலினை உன்னிடமிருந்து கவர்ந்துகொள்
சாத்தான் கடலேறி வரும்பொழுது.

அலை நாக்குகளின் அளவில்லா நீளம்
யார் கொடுத்த கொடும்வரமோ
யார்தான் அறிதல் கூடும்.

கடவுளே....
முடிந்தால் சாத்தானை வெற்றிகொள்
புராணங்களில் மட்டும் புதையுண்டு கிடக்கும்
புதுமைகளுக்கு இந்நவயுகத்தில்
புனர்ஜென்மம் கொடு
வேண்டுமானால் என் கவிதையை
அன்றைக்கு மாற்றியெழுதுகிறேன்.

— வேல்.லவன்.

# வீடு

இன்றைய திருமண இல்லறத்தில் ஊடுருவிச் சென்று பார்க்கும் போது அங்கு பொறுமைதான் காட்சியளிக்கின்றது.

சந்தோசமான இல்லறத்தில் சங்கடங்கள் நிறைந்து காணப்படுகிறது. ஒரு பெண் திருமணம் எனும் பந்தத்தில் இணைந்து போகும் போது அவள் முழுமையாக நம்புவது அவள் கணவனைத்தான். அவள் உடல், உள்ளம், உயிர் எல்லாமே கணவனுக்கே அர்ப்பணித்து அவன் காலடியே தஞ்சம் என நினைக்கின்றாள். ஆனால், சில கணவன்மார் தன் மனைவியை வெறும் பொம்மையாகத்தான் நினைக்கின்றனர். எத்தனையோ குடும்பங்களில் இன்று பெண்களின் நிலைமை கண்ணீராலையே கரைந்து போகிறது.

தாய்க்குப் பின் தாரம் என்று ஏன் சொல்லுகிறார்கள். தாய்க்குப் பிறகு தன்னுடைய நிலையில் நின்று தாரம் என்பவள் மனதில் மனைவியாகவும் சேவையில் தாயாகவும் திகழ்வதால்தான் அப்பழமொழியை சொல்லுவார்கள். ஆனால், தாயை ஏறெடுத்துப் பார்த்து அன்பு செலுத்துகிற கணவன் ஏன் மனைவியை மட்டும் வித்தியாசமான நிலையில் நோட்டமிடுகிறான்.

கணவன் மனைவி உறவு புனிதமானது. அதை புரிந்துகொண்டு வாழ்வதே இனிமையானது என்பதை புரிந்துகொள்ள தவறிவிடாதீர்கள். எவன தன் மனைவி மக்களிடம் நற்குணம், நன்மொழிகளைக் கொண்டு கலத்துரையாடி வாழ்வானோ அவனுடைய இறை நம்பிக்கை முழுமையானதாகும்.

ஒரு சில இடங்களில் புதிதாக திருமணமானபெண் கணவனுக்கு சமைத்துக்கொடுப்பாள். ஆனால், கணவன் முதல் நாளிலேயே மனைவியின் சமையலை குறைகூறி என்னுடைய வீட்டில் உள்ளவர்கள் நல்ல முறையில் சமைப்பார்கள் என்று எடுத்த எடுப்பிலையே தன் மனைவியின் மனதை ஊனப்படுத்துவதை நமது சமுதாயத்தில் காணக்கூடியதாகவுள்ளது. எந்தப் பெண்ணும் தன் கணவனின் அன்பையும் பாராட்டையும் பெறவிரும்புபவளாகத்தான் இருப்பாள். வயிற்றில் பசியும் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமும் மனைவி மேல் பாசமாய் உள்ள எந்தக்கணவனும் மனைவி சமைக்கும் சமையல் கசப்பாக இருந்தாலும் மனநிறைவுடன் சாப்பிட்டு திருப்திப்படுவான். அதற்கு மாறாகத்தன் குடுப்பத்தார்களை உயர்த்திக்காட்டி மனைவியை மட்டம் தட்டவேண்டும் என நினைக்கும் ஆண்கள்தான் இவ்வாறு திமிராக நடந்துகொள்கின்றார்கள்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் கணவனின் குடும்பத்தார்கள் மத்தியிலே மனைவியை வார்த்தைகளால் காயப்படுத்துவது அவமானப்படுத்துவது இவைகளால் மேலும் மேலும் அப் பெண்ணின் மனதில் கணவனின் மீது வெறுப்புத்தான் வளருமே தவிர அன்புவளராது.

ஒரு கணவனின் கடமை மனைவியிடம் மதிப்புக்காட்டுவது, ஆவலோடு இணங்கியிருப்பது, பிறபெண்டிரை நாடாதிருப்பது, மனைவியிடம் பொறுப்புக் கொடுப்பது. அவளுக்கு ஆடையணிகள் தருவது இந்த ஐந்து வழிகளின்மூலம் கணவன் மனைவியை போற்றுதல்வேண்டும்.



## அன்பின் ஊற்றில் குடும்பம் திளைக்கும்

எந்தப் பிரச்சினையானாலும் அதை கணவனிடம் எடுத்துக்கூறும் போது பொறுமையாகக் கேட்டு தீர்த்து வைக்கவேண்டிய மனப்பக்குவம் கணவனிடம் இருக்கவேண்டும். ஆனால், இன்றைய சில கண்வன் மார்களிடம் அக்குணம், பொறுமை இல்லவே இல்லை. மனைவி கதைக்கும் கதைகளைக்கொண்டு உடன் பிறந்தவர்களிடம் சொல்லி பகையை வளர்த்து பிரிவை உண்டு பண்ணி தனிமையை நிலைநிறுத்தி வாழ்வு வெறுமையாக வரக்கூடிய நிலை காணப்படுகிறது.

ஆடை உடலுக்கு அழகூட்டுகின்றது. அதேபோல் இல்லற வாழ்வின் எழிலுக்கு கணவனும் மனைவியும் காரணமாக அமைதல் வேண்டும். உடலுடன் ஆடை ஒட்டியிருப்பதைப் போல் இருவரின உள்ளமும் இணைந்திருக்கவேண்டும். குளிரையும் வெப்பத்தையும் ஆடை தடுப்பதைப் போல் இன்ப துன்பங்களையும் கணவனும். மனைவியும் பகிர்ந்துகொள்ளவேண்டும். மரு மகள் என்பது மற்றொரு மகள் என்று சொல்லலாம் ஆக அப்படியான மருமகள் மீது வெறுப்புக் காட்டலாமா? இன்று ஆண்கள் தங்கள் தாய்வீட்டுக்குச் சென்று மனைவியைப் பற்றி குறை கூறுவதும் குற்றம் சுமத்துவதும் சிலரின் கேவலமான குணங்களாகவுள்ளன. தன்னுடைய ஆண் மகன் சொன்னால் ஆண்டவனே வந்து சொன்ன மாதிரி நினைத்துக் கொண்டு அந்த மருமகளை பாடாய்ப்படுத்தி விடுவார்கள்.

மனைவி கணவனின் குடும்பத்தவர்களை நேசிக்கும் போது மதிப்புக் கொடுக்கும்போது மனைவிக்கு கணவனின் குடும்பத்தவர்கள் அன்பு காட்டக்கூடாதா?

இன்று நடைமுறையில் மனைவியின் குடும்பத்தை விட்டு பிரிந்து அவர்களின் குடும்பத்தைப் பற்றி குறை கூறிக்கொண்டு மனைவியை காயப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் சொந்தங்களைவிட்டு நண்பர்கள் வட்டங்களை சேர்த்துக்கொண்டு சொந்தங்கொண்டாடுகிறார்கள். இந்த ஆண்கள் அமைந்த உறவுகளை விட்டுவிட்டு அமையாத உறவுகளோடு சொந்தங்கொண்டாடுவதனால் மனம் தாங்குமா? நண்பர்கள் அதிகம் சேர்ந்த குடும்பங்களில் இன்று எத்தனை குடும்பங்கள் பிரிந்துள்ளன தெரியுமா? பொறுமையோடு இருந்தால் பொறுமையோடு வாழலாம் என்றெண்ணி இன்று எத்தனையோ பெண்கள் கண்ணீர்க்கடலில் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் அந்தப் பெண் நிச்சயம் உங்கள் மனைவிதான்.

**இ.றஜித்**

## இப்படிச் செய்யலாம்...

*வீட்டில் வர்ணம் பூசப்பட்ட இடங்களில் ஏதாவது கறைகள் படிந்திருந்தால், அவைகளைப் போக்க வழி, கொஞ்சம் தண்ணீரில் ஒரு வெங்காயத்தைப் போட்டுக் கொதிக்கவைக்க வேண்டும். பிறகு அந்தத் தண்ணீரால் வர்ணம்பூசப்பட்ட இடங்களைச் சுத்தம்செய்ய வேண்டும். செய்தால் கறைகள் மறையும். வர்ணம்தெரியும்.*

✣ ✣ ✣

*பெண்களுக்கு ஓர் இரகசியம். தேனீர் பருகும் குடும்பங்களில் தேயிலை மிக அதிகமாகச் செலவானால். தேயிலையின் செலவைக் குறைக்க இதோவழி. தேயிலையைக் கொஞ்சமாகப் போட்டுவிட்டு, கொதிக்கும் தண்ணீரில் சிறிதளவு பலகார சோடாத் தூளைபோட்டுவிட்டால், தேநீர் சுவையாக இருக்கும். தேயிலையின் செலவு குறையும்.*

✣ ✣ ✣

*குழம்பில் உப்பு அதிகமாகிவிட்டால், அதற்காகக் கவலைப்படவேண்டாம். உருளைக்கிழங்கை வேகவைத்து குழம்பில் போட்டுவிட்டால் உப்பு தன்னால் குறைந்துவிடும்.*

*உப்பையும் தேயிலைத் தூளையும் வென்னீரில் போட வேண்டும். இந்த உப்பும் தேயிலைத்தூளும் கலந்த வென்னீரில் கண்ணாடி டம்ளர்களையும் சாடிகளையும் கழுவினால் அவை பளபளப்பாக இருக்கும்!*

✣ ✣ ✣

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## கட்டுப்பாடும் வாழ்வும்

கட்டுப்பாடென்னும் கருதுகோளை, மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்காவிட்டால் அவன் வாழ்விலோ அல்லது வரலாற்றிலோ முட்டுப்பாட்டையும், மோதலையும் தவிர்க்க முடியாது என்பது தெளிவு. கட்டுப்பாடு என்றும் இந்த மாபெரும் சக்தியால் தான் பாரிய சாதனைகள் சாதிக்க முடிகிறது. கட்டுப்பாடென்னும் இந்த மாபெரும் சக்தியை ஒவ்வொரு கணமும் கண்விழிப்போடு காக்க வேண்டும். இதனால் கட்டுப்பாடு என்ற தத்துவம், வாழ்வோடு பின்னிப் பிணைக்கப்பட்டு கட்டிக் காக்கப்பட வேண்டும்.

பூரண இலட்சியத்தின் இலக்கணமாக இயங்குகின்ற கட்டுப்பாடு எந்த வழிகளில் அமையவேண்டும் என்று கேட்கக்கூடும். மனத்தையும் அதில் எழுகின்ற கறைபடிந்த எண்ணங் களையும் கட்டுப்படுத்துதல் எளிமை யான தூய்மையான வலிமை வாய்ந்த வாழ்க்கை முறையில் நன்மைப் பயிற்றுதல் அவசியம். வீண் ஆடம்பர வாழ்வில் சுகபோகங்களையும் ஊதாரித்தனமான செலவுகளையும் கட்டுப்படுத்துதல அவசியம் மூலை முடுக்குகளில் நின்று காலத்தை வீணாக்குதல் போதைப் பொருட்களில் செல்வங்களை அழித்தல் விழாக்களில் பணத்தையும் காலத்தையும் சன்மானத்தையும் களங்கப்படுத்துதல் போன்றவற்றிலிருந்து நம்மை கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும்.

எண்ணங்களில் எழுத்திலும் கூட கட்டுப்பாடுவேண்டும். "கண் போன போக்கிலே மனப்போக்கில்".... வாழ்வு அறிவிற்கு வழிகோலும். கட்டுப்பாட்டுடனும், பொறுமையுடனும் இருந்து செயலாற்றுபவர்கள் பூமியை ஆள்வார்கள் என்பது திண்ணம். காலம், இடம், தரம், பலம் அறிந்து செயலாற்றுவதில் கட்டுப்பாட்டின், நிறைவு தங்கியுள்ளது. அகமும்புறமும் கட்டுப்பட்ட ஒரு நிலை உருவாக்கப்பட வேண்டும். ஒரு மின் அழுத்தியை அழுத்தியதும், மின் குமிழிகள் எரிகின்றன. மீண்டும் அழுத்தியதும் அணைகின்றன. இது ஒரு கணப்பொழுதில் நடைபெறுகின்றது. கட்டலையை நிறைவேற்ற நாம் பயில வேண்டும். அவ்வப்போது எழுகின்ற சிறிய, சிறிய தாக்கங்களைக் கண்டு அறிவை அடகுவைத்துவிட்டு ஆத்திரத்திற்கு ஆளாகக்கூடாது.

பொறுமைக்குப் பெயர் கோழைத்தனமல்ல "ஒரு மீன் ஓடி உறுமின் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு" கொக்கின் பொறுமையும் ஆடாமல் அசையாமல் ஒற்றைக் காலில் நிற்கும்" கட்டுப்பாடும் வேண்டும். ஒருத்திக்கு குழந்தை வேண்டுமென்றால் அவள் முதலில் கருத் தாங்க வேண்டும் பத்துமாதம் பொறுமையோடு கட்டுப்பாடோடு காத்திருக்க வேண்டும். வேதனையை அனுபவிக்க வேண்டும்.எனவேதான் கட்டுப்பாடு என்பது ஓரிருதினங்களில் நம்மிடம் ஏற்பட்டுவிடாது அது "நீண்ட நாள் பயிற்சியின் பலனே விளைவு" ஆகவே கடந்தவைகள் கடந்தவையாகும். இனி நடக்கப்போவைகள் நல்லவையாக இருக்கட்டும்.

**பு.பத்மசுகிர்தா**

## சவ்வரிசிப்பொரி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| சர்வரிசி | -1/4 kg |
| சீனி | -1/4 kg |
| தே.எண்ணை | -1/4 லீற்றர் |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

முதலில் சவ்வரிசையை சிறிது நேரம் (2நிமிடம்) ஊறவிட்டு நீரை வடித்துவிட்டு வாழையிலையை சிறிது சிறிதாக வெட்டி அதில் சவ்வரிசியை சிறிது சிறிதாகத் தூவி இடியப்பம்போல் அவித்து எடுக்கவும். பின் வாழை இலையுடன் சேர்த்து இரண்டுநாள் வெயிலில் நன்றாகக் காயவிட்டு பின் சிறிது சிறிதாக எண்ணையிலிட்டு பொரித்தெடுத்து சீனிப் பாகு காய்ச்சி அதனை பொரியலின் மேல் ஊறறிப்பரிமாறவும். மல்லிகைப்பூ மாதிரி இருக்கும். விரும்பினால் கலர் பாவிக்கலாம்.

**P.மகிழ்மணி**




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்–30


பெயர்:......................................................

முகவரி:....................................................

...........................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.





ச.வசந்தகலா
பாரதி சிறுவர் இல்லம்

# எங்கள் மண்புழு

மண்புழுவிற்கு நாங்கூழ் என்றும் பெயர் உண்டு. இவற்றுள் சில மூன்று சென்ரிமீற்றர் நீளம் இருக்கும்; மற்றும் சில மூன்று மீற்றர்வரை நீளமிருக்கும்.

மண்புழுவின் உடல், பல வளையங்கள் ஒன்றுடன் ஒன்று வரிசையாக இணைக்கப்பட்டதுபோல இருக்கும். ஒவ்வொரு வளையமும் ஒரு கண்டம் (Segment) எனப்படும். உடல் முழுவதையும் ஒளிபுகக்கூடிய மெல்லியதோல் மூடியிருக்கும். இத்தோல் வழியாகவே மண்புழு மூச்சுவிடும். இவ்வாறு மூச்சுவிட இதன்தோல் எப்போதும் ஈரமாக இருக்கவேண்டும். தோல் உலர்ந்துபோனால் மூச்சுவிட முடியாமல் மண்புழு இறந்துவிடும். ஆனால், நீருக்குள்ளேயும் இது வாழமுடியாது. எனவேதான் மழை காலத்தில் இது தரைக்கு மேலே வந்துவிடுகிறது.

மண்புழு மண்ணைக் குடையும்போது அதன்வாய் திறந்திருக்கும். அதன் வழியாக மண் உள்ளே செல்லும். அந்த மண்ணிலுள்ள சிறு உயிர்களும் மட்கிய தாவரச்சத்துகளும் இதற்கு உணவாகின்றன. எஞ்சிய மண் வால் புறமாக வெளியே வந்துவிடும்.

மண்புழுவுக்குக் கண், காது இல்லை. எனினும் ஒளியையும் அதிர்ச்சியையும் உணரும் ஆற்றல் இதற்கு உண்டு. இதற்குக்கால்களும் இல்லை. உடலின் அடிப்புறத்திலுள்ள சிறு சுனைகளின் உதவியால் இது ஊர்ந்துசெல்கிறது.

மண்புழு நிலத்தைக் குடைவதால் மண்ணுக்குள்ளே காற்றோட்டம் இருப்பதற்கும், தண்ணீ செல்வதற்கும் வழியேற்படுகிறது. இதன்மூலம் தாவரங்களின் வேர்கள் எளிதாக நிலத்தினுள் இறங்கும். மண்புழு விழுங்கி வெளியேற்றிய மண்சத்து நிறைந்ததாக இருக்கும். இவ்வாறு பயிர்களுக்கு உதவிசெய்வதால் மண் புழுவை 'உழவனின்' நண்பன் என்று சொல்வர்.

நாம் தூண்டில் இட்டு மீன் பிடிப்பதை பார்த்திருக்கிறோம். அந்த தூண்டில் ஊசியில் மீன் ஏன் மாட்டிக்கொள்கின்றது என்று தெரியுமா? தூண்டில் இடுபவரால் ஊசியில் கொழுவிப்போடும் மண்புழுவை மீன் ஆசையாய் கொத்தி விழுங்குகின்றபோது ஊசியில் மாட்டிவிடுவார். இவ்வாறு மனித னுக்கு மீன்பிடிப்பதற்கு பயன்படும் மண்புழுவை நீங்கள் மழை காலங்களில் பார்க்கலாம். மாரி மழை தொடங்கிவிட்டால் இப் புழுக்கள் வீதிகளிலும் எமது வீட்டின் முற் றங்களிலும் நீரில் மிதந்தும், ஊர்ந்தும் செல்வதைப் பார்க்கலாம்.

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒல்லித் தடியனுக்கு ஒரு கண்ணாம் அவன் யார்?
2. நில்லாத குளத்திலே நீண்ட கொடிகள் வாடாது வதங்காது பூக்காது காய்காது அது என்ன?
3. எல்லையில்லாத வலையிலே எண்ணமுடியாத மீன்கள்?
4. நான் கண்ட காட்சி பிறர் காணமுடியாது?
5. வருடத்தில் ஒரு முறை பூக்கும் பூ அது என்ன?
6. நன்னுவார் தின்னமாட்டார் அது என்ன?
7. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம் அது என்ன?
8. வெள்ளை றோட்டில கறுப்புக்கார் ஓடுது அது என்ன?
9. சிவப்பு பை நிறைய பவுண் காசு அது என்ன?
10. ஆழக்கிடங்கு வெட்டி அதில் ஒரு முட்டை இட்டு அண்ணாந்து பார்த்தால் தொண்ணூறு முட்டை அது என்ன?

### விடைகள்

1. தையல் ஊசி
2. கைரேகை
3. நட்சத்திரங்கள்
4. கனவு
5. நோன்பு
6. பாக்குவெட்டி
7. உள்ளங்கை
8. கண்
9. செத்தல் மிளகாய்
10. தென்னை

ந.வமுதா

## சொற்சிலம்பம் - 69

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | வு | ம | தி | ல் | ட் | தீ |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| நெ | பா | ல் | கோ | ன் | ணி | சு |
| லை | அ | க் | ய | சு | ங் | வெ |
| நா | ட் | த | ஷ் | ரா | வா | த் |
| சு | வ | கா | சா | ய் | யெ | ளி |
| சி | மு | ய் | ஓ | கி | வி | ரி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் -67 இன் விடைகள்

01. நெய்தல்

02. சுயஸ்

### சொற்சிலம்பம் - 67 இன் பரிசுக்குரியவர்

ஆ.நிரோசா,
கிளி/இந்தக்கல்லூரி,
கிளிநொச்சி.

### சொற்சிலம்பம் - 67 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. வை. சுரேகா, சிவநகர் உருத்திரபுரம், கிளிநொச்சி.
02. ந. அகிலநேசன், அம்மன் கோவிலடி, வற்றாப்பளை/முள்ளியவளை.
03. அ்.றோஜிதா, தரம்-6 அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல்.
04. சூ.மோகன்ராஜ், தரம்-9 விபுலானந்தா கல்லூரி, வவுனியா.
05. அ.பிரியங்கா, தரம்-4 அ.த.க.பாடசாலை, நட்டாங்கண்டல்.
06. தே.தர்ஷிகா, 2ஆம் கட்டை, முரசுமோட்டை.
07. அ.நிரஞ்சனாதேவி, 538.வளநகர், மல்லாவி.
08. கு.நிருபன், கிளி/கனகாம்பிகைக்குளம், அ.த.க.பாடசாலை.

01. பூமிக்கு முக்கிய சக்தி வழங்குவது?
01) ....................................

02. அண்மையில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்று?
01) ....................................

பெயர் :- ....................................


முகவரி :- ....................................

....................................

சொற்சிலம்பம்-69
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## காட்டுக் காவல் துறை

பகுதி-03



# இளைஞர்களும் விவசாயத்தில் ஈடுபட முன்வரவேண்டும்

## மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர்

விவசாய சமூகப் பொதுப் பணிகளில் நீண்டகாலமாக ஈடுபட்டு வருபவரும் கடந்த ஐம்பது வருடங்களிற்கு மேலாக விவசாயத் துறையுடன் தொடர்ந்தியங்கிக் கொண்டிருப்பவருமான சின்னத்துரை பொன்னம்பலவன்னிய மாப்பான கதிர்காமமுதலியார் மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவராகவும் செயற்பட்டுவருகிறார். தான் ஒரு விவசாயி என்ற வகையில் விவசாயச் செய்கை விவசாயிகள் தொடர்பாக பகிர்ந்துகொண்ட கருத்துக்களை நேர்காணல் வடிவில் வாசகர்களிற்காகத் தருகிறோம்.

நான் இப்பொழுது விவசாயச் சம்மேளன தலைவராகச் செயற்பட்டு வருகிறேன்.



யாழ் குடாநாட்டில் 90000 ஆயிரம் விவசாயிகள் வாழ்கின்றனர். அண்மைக் கால வன்செயல்களினால் இளைய தலைமுறை விவசாயிகள் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர். மீதியாகவுள்ள 60000 ஆயிரம் கமக்காரர் பெரும்போக நெற்செய்கையுடன் காய்கறிச் செய்கையினை வருடம் பூராகவும் மேற்கொண்டு வருகின்றனர்.

முதிய விவசாயிகள் தற்பொழுதுள்ள இளைய தலைமுறை விவசாயிகளிற்கு நெற்செய்கை காய்கறிச் செய்கைகளையும் பயிற்றுவிக்கின்றனர். விவசாய உரவகை, மருந்துவகை விலை உயர்வினால் இயற்கை கூட்டெருமுறை உள்ளூரில் உற்பத்திச் செய்யப்பட வேண்டும். இதற்கு விவசாய அமைச்சு அதிகாரிகளோ அவை சார்பான திணைக் களங்களோ தரமான கால்நடைகளை தெற்கிலிருந்தோ அயல் நாடுகளில் இருந்தோ பெற்றுத்தரவேண்டும்.

யாழ் மாவட்டத்தில் வழுக்கை ஆறு விவசாயச் செய்கையில் முக்கியமான இடத்தை வகித்து வருகின்றது. 10 கிலோ மீற்றர் நீளமுடைய இந்த ஆறு மாரிகாலத்தில் தெல்லிப்பழை, அம்பனைக்குளம், அளவெட்டி பிணாக்கைக்குளம் ஆகியவற்றில் ஆரம்பித்து அராலிக்கடலுடன் கலக்கின்றது. இவ்வாறு வீண் விரையமாகும் நீரை சேமித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் 2000 ஆம் ஆண்டு புதிய குளம் நிர்மாணிக்கப்பட்டது.

நீர்ப்பாசனத்திணைக் களத்தின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட குளத்திற்கு கந்தரோடைக்குளம் சண்டிலிப்பாய்க்குளம், உடுவில்குளம், கேலங்காமம்குளம்,




மருதடிக்குளம், [illegible]யக்குளம் ஆகிய குளங்களினது மிதமிஞ்சிய நீரை சேகரிக்கக்கூடியவகையில் இக்குளம் நிர்மாணிக்கப்பட்டது. இங்குள்ள குளங்களில் நீர் தேங்கி நின்றால் வயல் ஈரம் கசியும், கிணறுகளில் நீர் ஊற்றுவரும். கோடைகாலங்களில் கால் நடைகளின் வசதி கருதியுமே இக்குளம் தோற்றுவிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் 7660 விவசாயிகள் இணைந்துள்ளனர்.இதில் 561 விவசாயிகள் மாதாந்தம் ஓய்வூதியமாக 1000 ரூபாயினை பெற்று வருகின்றனர்.. விவசாயிகளிற்கான ஓய்வூதியத்தை முதல் முதலில் நான்தான் பெற்றேன். விவசாயிகளிற்கான் ஓய்வூதியத்தை இனிவரும் காலங்களில் 3000 ரூபாயாக உயர்த்தவேண்டுமென சம்பந்தப்பட்டவர்களிற்கு அழுத்தம்கொடுத்து வருகின்றோம்.

நெற்செய்கை மரக்கறிச்செய்கையை கூடுதலான அளவுகளில் மேற்கொள்வதற்கு

**இரா-வின்**

உரவகைகளின் விலை உயர்வும் கிருமிநாசினிகளின் விலை உயர்வும் விவசாய கூலி உயர்வும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப்பிரச்சினைகளிற்கு தீர்வு காண இயந்திரப்பாவனையை அறிமுகம் செய்தல்வேண்டும். யாழ்ப்பாண விவசாயிகள் போதிய பயிற்சி அனுபவம் உடையவர்கள்.

விவசாய அமைச்சு உழவு இயந்திரங்கள் நீர்ப்பம்பிகள், ஏனைய விவசாய உபகரணங்களை கமநல சேவை நிலையங்கள் ஊடாக சுழற்சி முறைக்கடன் அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். யாழ் குடாவில் ஒன்பது கமநல சேவைப் பிரிவுகளிலும் பெரும்பாக உத்தியோகத்தவர்கள் இல்லை என்பதை நான் இங்கு நினைவு கூரவேண்டும். அண்மைக் காலமாக விலைவாசிகள் பல மடங்காக அதிகரித்து வருகின்றன. குறிப்பாக எரி பொருட்களின் விலை உயர்வை ஈடுசெய்ய வேண்டுமாயின் நெல்லின் விலையை அதிகரிக்க வேண்டும்.

நெல் சந்தைப்படுத்தல் சபையோ வேறு தொடர்புடைய நிறுவனங்களோ நெல்லின் விலையை அதிகரிப்பது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கையில் அனைவரும் ஒருநேர உணவாக சோறையே உட்கொள் கிறார்கள். இனிவரும் காலங்களில் நெல் உற்பத்தியை அதிகரிப் பதற்கான நடவடிக்கை களையும் மேற்கொள்ள வேண்டும். இளைஞர்கள் விவசாய செய்கையில் இறங்கவேண்டும். அதிலும் நெற்செய்கையை அதிகளவானோர் மேற்கொள்ள முன்வரவேண்டும்.

மேல்நாட்டவர்களிற்கு கூலி வேலை செய்வதற்கு நமது இளைஞர்கள் வெளிநாடுகளிற்கு ஓடு கிறார்கள். அதிகளவு வருமானம் பெறமுடியும் என்பதே இவர்களது நோக்கமாகும். அரசாங்கமோ சம்பந்தப்பட்ட திணைக்களங் களோ இளைஞர்களிற்கு ஊக்கிவிப்பாக கடன் தொகை களை வழங்கவேண்டும். இதன் ஊடாக நெல் உற்பத்தியை மேற்கொண்டு இறக்குமதி செய்கின்ற அரிசிகளின் அளவைக் குறைக்கலாம் அல்லது நிறுத்தமுடியும்.

விவசாயக்கல்வியைக் கட்டாயமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். சும்மா சந்திகளில் நிற்பதும் உத்தியோகக் கல்வியும்தான் இன்றைய இளைஞர்களது பொழுது போக்காகவுள்ளது. கடந்த வருடம் பாகிஸ்தான் நெல்லான 'வாசுமதி' என்ற நல் இன நெல்லை அறிமுகம் செய்துள்ளேன். இவ் அரிசியின் விலை 90 ஆக உள்ளது.

விவசாயிகளின் கஷ்டங்களைத் தேவைகளை நாடாளுமன்றில் எடுத்துரைக்கவேண்டும். விவசாயிகளிற்கு ஏற்படும் பாதிப்புக்களிற்கு சுமூகமான தீர்வினை மேற்கொள்வதற்கு விவசாயம் தொடர்பான சட்ட விதிகளைக் கொண்டுவரவேண்டும்.

பொன்னாங்காணியும் வல்லாரையும் இன்று எமது வயல்களில் பயிரிட்டு சுத்தமாகக் கொடுக்கிறோம். விவசாய நிலங்களில் இராணுவமுள்ளது. இவற்றை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும். ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பேச்சு வார்த்தைகளிற்கென போர் நிறுத்தம் மேற்கொண்டால் ஏன் எமது பகுதிகளில் இராணுவம் ஆயுதங்களுடன் நடமாடுகிறது. எமது விவசாய நிலங்களில் இராணுவம் இருக்கவேண்டிய தேவையில்லை. வலிகாமத்தின் பெரும் பகுதி விவசாய நிலங்களில் இராணுவமுள்ளது. எமது இடங்களைவிட்டு வெளியேறி விவசாய நடவடிக்கைகளிற்கு ஒத்துழைப்புத் தரக்கோரி பலமுறை கோரியுள்ளோம். இனிவரும் காலங்களில் வெகுசனப் போராட்டங்களைத் தான் மேற்கொள்ளவேண்டும்.

எமது பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் இழக்கக்கூடாது. வீட்டிற்கொரு விவசாயியும் பசுமாடும் கட்டாயம் இருக்கவேண்டும். வீட்டுத்தோட்டத்தை அமைத்து எமது தேவைகளை நாமே நிறைவுசெய்யவேண்டும். வீடுகளில் பயன்தரு மரங்களை வைத்து பராமரிக்கவேண்டும் என தனது கருத்துக்களை நிறைவுசெய்தார் சி.பொ.மா.க. முதலியார்.

நீண்டகாலமாக வடபகுதியின் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக பல வழிகளில் தன்னாலான சேவைகளை மேற்கொண்டு வரும் முதலியார் ஒரு முழுநேர விவசாயி என்பதுடன் இன்றும் விவசாய செய் கையை மேற்கொண்டுவரு கிறார். பல விருதுகளைப் பெற்றுள்ள முதலியார் கடந்த வருடம் முதிய சிறந்த விவசாயிக்கான தங்க விருதினைப் பெற்றுள்ளார். ஒரு முதிர்ந்த விவசாயியை சந்தித்த நிறைவில் எமது செவ்வியை நிறைவு செய்தோம்.

# மறுவாழ்வுக்கான உதவிகள் எப்போது கிட்டும்



தமிழர் தாயகத்தின் கரையோரப்பகுதி சுனாமி பேரலைகளின் தாக்கத்தால் பெரும்பகுதி சிதைவடைந்து போயுள்ளது. போர்க் காலங்களின் போது சிறிலங்கா கடற்படையின் மிலேச்சத்தனத்தால் எமது கரையோர மீனவர்களின் உயிர்கள் அவ்வப்போது பறிக்கப்பட்டே வந்துள்ளன. இடப்பெயர்வினாலும் இவர்களின் வாழிடங்கள் சிதைக்கப்பட்டு 'அகதி' எனும் அடைமொழியுடன் பல்வேறு பிரதேசங்களில் வாழ்ந்துவந்தவர்கள். இக்காலப் பகுதியில் கூட சிறிலங்கா அரசின் விமானப்படையின் கண்மூடித்தனமான குண்டுவீச்சின் காரணமாகத் தங்கள் உறவுகளை, உடமைகளை இழந்தும் தவித்தவர்களும் தமிழர் தாயகப்பகுதி மக்கள்தான் இவ்வாறு கடந்த பல வருடங்களாக யுத்தத்தின் கோரப்பிடிக்குள் அகப்பட்டு உறவுகளை, உடமைகளை இழந்து வாழ்ந்த மக்கள் இன்று இயற்கையின் பேரழிவையும் எதிர்நோக்கி மீளவும் 'அகதி' என்ற அடை மொழியுடன் பாடசாலைகள், பொதுநோக்கு மண்டபங்கள், தேவாலயங்கள் எனப் பல்வேறு பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

ஏற்கனவே யுத்தத்தால் இடம்பெயர்ந்து சமாதானகாலத்திலும், அதற்கு முன்னரும் மீள்குடியேறிய மக்களுக்கு அரசினால் உரிய உதவிகள் வழங்கப்படாத நிலையில், அவர்களுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தாத நிலையில், அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் தங்கள் உடலை வருத்தி உழைத்து சிறுகச்சிறுகச் சேமித்து நிமிர எத்தனித்தவேளை இவ்இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. "வேட்டிவாங்க கனவு கண்ட போது கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்ட நிலை தான் எமது தமிழர் தாயக" கரை யோரப்பகுதி மக்களின் நிலை.

இடப்பெயர்வு என்பதும் இழப்புக்கள் என்பதும் தமிழர் வாழ்வில் ஒன்றிணைந்து விட்ட, பின்னிப் பிணைந்துவிட்ட ஒன்றாகவே இருந்துவந்துள்ளது. ஆனால், 'சுனாமி' எனும் கடற்கோள் அனர்த்தம் சற்று அதிகமான இழப்பையும், உள தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் யூலைப்படுகொலை, நவாலிப்படுகொலை, நாகர்கோவில் பாடசாலைப் படுகொலை என பல அரச சுனாமி யின் இன அழிப்பு அலையில் தங்கள் உறவுகளை, பிள்ளைகளை இழந்து தவித்த எம் தமிழர் தாயக மக்கள் இயற்கை சுனாமியின் கோரமுகம் கண்டு வாடி நிற்கின் றனர். அரச சுனாமிகளில் இருந்து மீண்டவர்கள், இயற்கை சுனாமி ஏற்படுத்திப் போன ஆறாத்துயரில் இருந்து மீள முயற்சிக்கிறார்கள்.

இவ்வாறானதொரு நிலையில் பொது இடங்களில் தங்கியிருக்கும் மக்களை சந்தித்து " நீங்கள் உங்கள் சொந்த இடங்களில் மீள்குடியமர விரும்பு கின்றீர்களா? எனவும் மீள்குடியமர என்ன உதவிகளை எதிர்பார்க்கிறீர்கள் எனவும் உங்களுக்கான நிவாரணப் பொருட்கள் எவ்வாறு வழங்கப்படுகின்றது. அதில உங்களுக்கு திருப்திதானா?" என்ற பல்வேறு கேள்விகளுடன் அவர்களை சந்திக்கச் சென்றோம்.

தங்கள் பிள்ளைகளை, பெற்றோர்களை, சகோதரர்களையென உறவுகளை இழந்து துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் எம் உறவுகள் எம்மைக்கண்டு சோபை இழந்த தங்கள் முகத்தில் செயற்கைப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் பின்வருமாறு;





உளநல ஆலோசனை வழங்கும் அருட்சசோதரி ஒருவர்

சி.பரிமளாதேவி- தியோகு நகர், சிலாவத்தை-(26 வயது)

"கடல் அலையால் எனது அம்மா எனது மூன்று பிள்ளைகள் இறந்து விட்டனர். எனது அப்பா கடல் அலையால் காயப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாக அறிந்தேன். ஆனால், இதுவரை அவர் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. எனது மாமியும் கடல் அலையினால் இறந்துவிட்டார். இதனால் நானும் எனது 20 வயதான தங்கையும், 18 வயதான தம்பியும் அநாதைகளாக ஆகிவிட்டோம். எனது கணவரும் என்னை விட்டு விட்டுச் சென்று விட்டார். நான் இதற்கு முன்னர் கடை வைத்திருந்தேன். அந்தக் கடையும் அலையினால் அழிந்து விட்டது. நானும் எனது தம்பி தங்கையும் எமது ஊரில் மீளவும் குடியேற மாட்டோம். எமது குடும்பத்தை இழந்த அந்த மண்ணில் வாழவிரும்பவில்லை. எமக்கு கடலை அண்மிக்காத பகுதியில் கடை வைக்கக் கூடியளவு நிதி யுதவிகள் செய்தால் எமது ஜீவனோபாயத்திற்கு உதவியாய் இருக்கும்" என்கிறார் அவர்.

முல்லைத்தீவு சிலாவத்தையில் இருந்து இடம் யெர்ந்து வற்றாப்பளை மகாவித்தியாலயத்தில் வசிக்கும் இவர் தனது தந்தையார் பற்றிய தகவலை அறியத்துடிக்கின்றார். இவர் தனது ஒருமாதக் குழந்தை உட்பட மூன்று பிள்ளைகளை இழந்துள்ளார். தனது மூத்த சகோதரி மரணமானதால் அவரின் ஐந்து வயது மகளையும் இவரே வளர்த்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தோனிப்பிள்ளை மரியதாஸ் செல்வபுரம், முல்லைத்தீவு.

நான் முல்லைத்தீவு செல்புரத்தில் கடை வைத்திருந்தேன் கடைப பொருட்கள் எல்லாம் கடலலையில் அழிக்கப்பட்டுள்ளன. எனது ஊரைச் சேர்ந்த பலர் இந்த அனர்த்தத்தில் இறந்து போயுள்ளதால் எமது இடத்தில் நான் மீளவும் சென்று தொழில் செய்ய முடியாது. அதைவிட கடற்கரையை அண்மித்த பகுதியில் வாழ விருப்பமில்லை. எனக்கு வேறு ஒரு உயரமான பகுதியில் குடியமர வும், கடை நடாத்த உதவியும் எதிர் பார்க்கிறேன் என்கிறார் அவர். இவர் உடையார்கட்டுப் பாடசாலை நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளார்.





(ஆ.குமாரவேல் கள்ளப்பாடு, முல்லைத்தீவு. கைவேலி பாடசாலையில் தற்போது உள்ளார்.)

இந்தக் கடல் அனர்த்தத்தால் எனது இரண்டு பெண்பிள்ளைகளை இழந்துள்ளேன். நான் கடல் தொழில்தான் செய்து வந்தேன். என்னுடைய ஐந்து லட்சம் பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளேன்.



நான் எனது ஏனைய இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்ற வேண்டுமானால் மீளவும் அந்தக் கடல்தொழிலைத் தான் செய்யவேண்டும். எனவே எனக்கு தொழில் செய்ய வசதியும் குடியிருக்க வீடும் ஏற்படுத்தித்தந்தால் உதவியாய் இருக்கும். இதை இந்த அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கிறேன் என்கிறார் அவர்.

தொடர்ந்து யாழ் குடத்தனைப் பகுதிக்குச் சென்று மணற்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து அங்கே மாதா கோவிலில் தங்கியுள்ள மக்களை சந்தித்தோம். அங்கே வடமராட்சி குடத்தனை மீனவர் சங்கத்தின் செயலாளரும், வடமராட்சி கிழக்கு மீனவர்சங்க உப தலைவருமான செபஸ்ரியன் செல்வ நாயகம் அவர்கள் கருத்துக் கூறுகையில்;

**அருள்**

"நாம் கடந்த வாரம் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட வேளை -குடத்தனை பாடசாலையில் தங்கியிருந்தோம். அந்த முகாம் எரியூட்டப்பட்டதால் நாம் மாதா கோவிலில்தஞ்சமடைந்தோம். இங்கே எங்களுக்கான உதவிகள் கிராம சேவையாளர் ஊடாக வழங்கப்படுகின்றன. உணவுகளை விடுதலைப் புலிகள், மற்றும் தமிழர்புனர்வாழ்வுக் கழகம் வழங்குகின்றது. எமக்கு இங்கே அனைத்து உதவிகளும் கிடைக்கின்ற போதும் சுகாதாரம் தொடர்பான எவ்வித நடவடிக்கைகளும் எமக்குக் கிட்டவில்லை என்றும் நாம் மீளவும் எமது கிராமத்தில் குடியமர வேண்டுமானால் எமக்கு வீடு உட்பட தொழில் உபகரணங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் எமக்கான உதவிகள் விடுதலைப்புலிகள் ஊடாக கிடைக்குமானால் நாம் குறுகிய காலத்துக்குள் முன்பிருந்த நிலையை எட்டி விடுவோம் என்றும் அவர் கூறினார்.

நாம் இம்மக்கள் இருந்த பல்வேறு நலன்புரிநிலையங்களை பார்வையிட்ட வகையில் அனைத்திலும் மக்களின் மனநிலையில் மாற்றம் ஏற்படுவதற்கான ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்வதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. சுகாதார விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தன. உளவள நிலையம், அரங்கச் செயற்பாட்டுக்குழு, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள், தலைவிகள் அருட்சகோதரிகள் எனப் பலரும் மக்களின் துன்பங்களை கேட்டறிந்து அவர்களின் உள நலம் மேம்பட கருத்துக்களையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்வதை அவதானிக்கக்கூடியதாய் இருந்தது.




மக்களின் துன்பங்களைக்கேட்டறியும் கேணல்:சூசை அவர்கள் ( )

இடம்பெயர்ந்து பல நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களில் யாழ் குடத்தனை மாதா கோவிலில் தங்கியுள்ள மக்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை. மலசலகூடம் இன்மையால் திறந்த வெளிகளில் தங்கள் இயற்கை கடன்களை கழிக்கும் இம்மக்கள் காலில் பாதணிகள் அற்றநிலையும் காணப்படுவதுடன் இவர்களுக்கான சுகாதார விழிப்புணர்வு, கருத்துக்கள் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியுள்ளது. இம்மக்கள் ஏற்கனவே தங்கியிருந்த குடத்தனை பாடசாலை இராணுவத்தால் தீயிடப்பட்டது அனைவரும் அறிந்தவிடயம்.

இந்த மாதா கோவிலில் 119 குடும்பங்களைச்சேர்ந்த 542 அங்கத்தவர்கள் தங்கியுள்ளார்கள் 260 பெண்களும் 18 குழந்தைகளும் இதில் அடங்கும்.

இம்மக்களுக்கான சுகாதார வசதிகளை யாழ்மாவட்ட செயலணிக் குழுஏற்படுத்திக் கொடுத்து தவவேண்டியுள்ளது. இல்லையெனில் தொற்று நோய் ஆபத்தை இம்மக்கள் எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

நெடுந்தீவில் அரச நிவாரணங்களை தாம் கொடுத்து விட்டு அது தம் சொந்தப்பணத்தில் கொடுத்தது போன்ற தோற்றப்பாட்டை அவர்கள் ஏற்படுத்தினர். அது முதல் நெடுந்தீவில் அரச நிவாரணங்களை தாம் வழங்கி பெயர் பெற்று மக்கள் ஆதரவைப் பெறத்தொடங்கினர். ஆரம்பத்தில் இவர்கள் பற்றி அறியாத நெடுந்தீவின் மக்கள் ஆதரவினை வழங்கினர். ஆனால், கட்டம் கட்டமாக அங்கு அவர்கள் அரங்கேற்றிய கொடுங்கோண்மை அவர்கள் முகத்தை வெளிப்படுத்தியது. அரச நிதியை தரமறுத்ததால் நேடுந்தீவு உதவி அரசஅதிபர் நிக்லஸ் EPDP தேசவிரோதிகளால் பிடித்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டு தூக்கிலிட்டு படுகொலை செய்யப்பட்டார். பின் அவரது உடலை தற்கொலை செய்தார் என குடும்பத்தினரிடம் அவர்கள் கொடுத்தனர். 1995இல் இது நடந்தது.




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

1997இல் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் காவலாளி EPDP யினர் இரவில் பணப்பெட்டியை களவாட முற்பட்ட வேளை அதனை தடுத்த போது குத்திப் படுகொலை செய்யப்பட்டார். அவரை கொலை செய்த EPDP யினரின் ஒருபகுதியினர் சங்கத்தின் உதய தாரகை போக்குவரவுப்படகை இரவிலேயே எடுத்துக்கொண்டு தமிழகம் சென்றனர். அப்படகு மீளவே இல்லை. அதேவேளை கந்தையா என்பவரின் 'அக்குவாட்டிக்' என்ற போக்குவரவுப்படகும் EPDP யினரால் கடத்திச் செல்லப்பட்டது. அத்துடன் வணிகரான சுரேஸ் என்பவர் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

சிவகுமாரி என்ற மாணவி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். குணரட்ணம் என்பவர் EPDP யினரால் வீதி வீதியாக அடித்து இழுத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். EPDPயினரின் ஒருவன் பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதை கண்ட ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் தூக்கிலிட்டு படுகொலை செய்யப்பட்டான். செல்வராசா என்ற அடகு பிடிப்பவர் படு கொலை செய்யப்பட்டார். தவிர மீனவர்களின் 05 படகுகள் கடத்தப்பட்டன இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளை நெடுந்தீவுக்கடலில் மறித்து அவற்றை பறி முதல் செய்து மீனவர்களினை EPDP யினர் வெட்டிப் படுகொலை செய்தனர். தவிர நெடுந்தீவின் அப்பாவி இளைஞர்களை பிடித்துத் தாக்கி EPDP யினரின் கொலை முயற்சியிலிருந்து தப்பியுள்ளனர். பல பெண்கள் திருமணம் செய்யப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர். இன்றும் அவர்கள் பிள்ளைகளுடன் நெடுந்தீவில் அநாதரவாகி அவல வாழ்வு வாழ்கின்றனர்.

அரச நிதியினூடாக கட்டப்பட்ட நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க களஞ்சியத்துக்கு EPDP தேசவிரோத தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் பெயர் வைக்கப்படவில்லை என்பதற்காக பல நோக்குக்கூட்டுறவுச்சங்க பணிப்பாளர் சபை அவர்களினால் பதவி நீக்கப்பட்டது. தம்மவர்களைக் கொண்டு புதிய பணிப்பாளர் சபையை அவர்கள் அமைத்து மோசடிகளைப் புரிந்தனர். அரச நிதியில் நெடுந்தீவு மக்கள் உருவாக்கிய போக்குவரவு படகுக்கு டக்ளஸ் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கிய போக்கு வரவு படகுக்கு டக்ளஸ் தேவானந்தாவின் பேரில் சமுத்திரதேவா என தமது பணிப்பாளர் சபையின் மூலம் பெயர் வைத்தனர். இப்படகுகட்டுமானத்தின் பேரில் கணிசமான நிதிமோசடி செய்யப்பட்டது EPDP தேசவிரோதிகளின் முகாமை தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்கியழித்த போது அம்மக்கள் மகிழ்ந்திருந்தனர்.

ஆனால், மீளவும் அவர்கள் நெடுந்தீவிலிருந்து அராஜகம் புரிந்தனர். நெடுந்தீவின் பிரதான போக்குவரவுத் துறையான மாவலித்துறையை ஆக்கிரமித்து அவர்கள் நிலைகொண்டதால் மக்கள் அதிகதூரம் கற்களில் நடந்தே படகை சென்றடையும் அவலத்தை அனுபவித்தனர். இந்தக் கொடுமைகளால் கொதிப்புற்ற மக்கள் போர்நிறுத்த உடன்பாடு மூலம் தமக்கும் காலம் வர 'நெடுந்தீவு வாசி ஒருவரை EPDP தேசவிரோதி ஒருவர் தாக்க அவர்களின் முகாமை எரியூட்டி அவர்களை தாக்கி நொருக்கி அத்தீவை விட்டே விரட்டியடித்தனர்.

அதன் பின் சிறிலங்காக் கடற்படை பொலிசார் துணையோடு ஒரு படைநடவடிக்கையாக EPDP தேசவிரோதிகள் மீளவும் நெடுந்தீவுள் நுழைய முயல்கையில் மக்கள் பெரும்போராட்டத்தை நடத்தினர். EPDP வெளியேற வேண்டும் எனவும் 80 நாட்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

துருவன்




# ஆரியம்-திராவிடம்

இந்த நிகழ்ச்சித் தொடரில் இடம்பெறும் பிரதான சொற்கள் இவை- இந்தச் சொற்கள் தொடர்பான வரலாற்று விளக்கம்.- மேலும் ஆழமான புரிந்துகைக்கு வழிவகுக்கும்.

மனிதனின் வரலாற்றுக்காலம் ஆரம்பமாகுமுன் கற்கால மனிதர்கள் இனரீதியாக வகுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் பகுப்பு 'ரேஸ்' என்ற சொல்லால் கூறப்படுகின்றது. ரேஸ் **(Race)** என்ற சொல்லுக்கான சரியான தமிழ்ப்பதம் இன்னமும் கிடைக்கவில்லை. இந்த ரேஸின் அடிப்படைப் பிரிப்பில் திராவிடர்களின் மூதாதைகளான மனிதர்கள் அவுஸ்திரலொயிட் என்ற பகுப்புக்குட்படுத்தப்பட்டனர்.

மனிதனின் வரலாற்றுக்காலத்தில் மனிதன் மொழி, பண்பாட்டடிப்படையில் இனங்களாகப் பிரிக்கப்பட்டான். ஆரியம் என்பது ஒரு மொழிக்குடும்பத்துக்கான பெயராக உள்ளது. 'இந்தோ-ஐரோப்பியன்' என இன்று வகுக்கப்பட்டுள்ள மொழிக்குடும்பத்திற்கே முன்பு ஆரியம் என்றபெயர் இருந்தது. மத்திய ஆசியா முதல் கிழக்கு ஐரோப்பாவரை இருந்த வரலாற்று ஆரம்பகால மக்கள் மொழிகளின் அடிப்படையில் ஆரியர்கள் எனப்படுகின்றனர். இவர்களே பேரிசியா, இந்தியா பகுதிகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள். ஜேர்மனியின் தலைவரான அடோப் ஹிட்லர் தனது தேசத்தில் கருத்தினைக் கட்டியெழுப்ப ஆரிய இன அடிப்படைவாதத்தை பயன்படுத்தினார். வெள்ளைத் தோல், நீலக்கண், செம்பட்டை நிறம் ஆரிய இனத்தினருடையது. ஆரிய இனமே உளப்பிறந்த இனமென ஆரிய அடிப்படை வாதத்தை ஹிட்லர் கையாள மொழிக்குடும்பத்துக்கான பெயராக இருந்த 'ஆரியம்' என்றசொல் பயன்பாட்டை ஏனைய ஐரோப்பிய நாடுகள் கைவிட்டு -இந்த மொழிக்குடும்பத்துக்கு இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம் எனப்பெயரிடப்பட்டது. சமஸ்கிருதம், பாளி, கிந்தி, உருது ஆகிய தற்போதைய வட இந்திய மொழிகளும் சென்ட் அவெஸ்டன் என்ற ஈரானிய மொழியும் மற்றும் ஐரோப்பிய மொழிகளும் இந்த ஆரிய மொழிக்குடும்பத்தில் உள்ளன. 19ஆம் நூற்றாண்டில் இந்தோ ஜேர்மனிய மொழிக்குடும்பம் என இந்த ஆரிய மொழிக்குடும்பம் பெயரைப் பெற்றது. இந்த ஆரிய மொழிக்குடும்பத்துடன் தொடர்ந்து பொருது வருவது திராவிட மொழிக்குடும்பம். இந்திய உபகண்டத்தின் சுதேச மொழிகளைக் கொண்டது திராவிட மொழிக்குடும்பம் சுதேசமாக இது ஆப்கான் வரை பரவியுள்ளது. திராவிட மொழிக்குடும்பத்தில் உபமொழிகள் உள்ளன. இன்றைய உலகில் உள்ள 10



மொழிக்குடும்பங்களில் திராவிட மொழிக்குடும்பம் ஒன்றாகும். இவற்றில் முதன்மையானது தமிழ் மொழிவரலாறில் தமிழுக்கான இலக்கியப் பதிவு இன்று கிடைக்கப்பெற்றவை கொண்டு பார்த்தால் - 3000 ஆண்டுகளுக்கு மேலாகும்- தற்போது முதன்மையாக உள்ள திராவிட மொழிகளான கன்னடம் 1100 ஆண்டுகள் தொன்மையான, தெலுங்கு 900 ஆண்டுகள் தொன்மையான, மலையாளம் 600 ஆண்டுகள் தொன்மையான இலக்கிய வரலாறேயே கொண்டுள்ளன.

திராவிடம் என்பது- தமிழ் என்னும் சொல்லின் திரிவுபட்ட வடிவம் என மொழியியலாளர்கள் கூறுகின்றனர். கி.மு 3300 ஆண்டுகளாக கடந்த ஆண்டின் வரலாற்றுக் காலக்கணிப்புகள் மூலம் வரையறைசெய்யப்பட்ட சிந்துவெளிக்கால மட்கலங்களின் எழுத்து வடிவங்கள். முதல் தமிழ்மொழி என வரையறுக்கப்பட்டுள்ளது. சிந்துவெளி ஆரியரால் உடைக்கப்பட்டபின் கி.மு 10 ஆம் நூற்றாண்டு வரை இந்தியா முழுமையிலும் ஒரே மொழி பேசப்பட்டதாக ஆய்வாள்ர் சுனித்குமார் சட்டர்ஜி கூறுகிறார். அந்தத் தொல் மொழியை பெருங்கற் பண்பாட்டுக் காலம் வரை தாமிழி என்றபெயர்கொண்டு பயன்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் 1980 இல் எடுக்கப்பட்ட இரு பெருங்கற்கால செம்புக் கூட்டுடன் எடுக்கப்பட்ட முத்திரை மோதிரம் ஒன்றில் காணப்பட்ட கோவேந்த என்று ஒலிக்குறிப்பைத் தரும் எழுத்துகள் தாமிழி எழுத்துகள் எனக் கூறப்படுகின்றது. ஆரியர் வருகையின்பின் வட இந்தியாவில் திராவிட மொழியை ஆரியமொழி தாக்க. அங்கு மாறிய மொழி வட திராவிட மொழி எனவும் தென் இந்தியாவிலிருந்து தென் திராவிட தொழியெனவும் பகுக்கப்பட்டது. வடமொழியாக பாகதம் என மாறியது. தமிழும்- பாகதமும் ஒரே குடும்பமொழிகளாகும். பாகதமொழியின் வரிவடிவம் பிராமி என ஆனது, தமிழின் வரிவடிவம் தாமிழி ஆனது. தென்திராவிட மொழி சிதைந்து புதிய திராவிட மொழிகள் உருவாகின. இவை தமிழிலிருந்து பிரிந்து பிறந்தவையாகும்.

தமிழ் வரிவடிவம் கி.பி 3ஆம் நூற்றாண்டில் வேறுவரிவடிவத்துக்குச் செல்ல- ஒத்தவரிவடிவங்களாக இருந்த தாமிழி பிராமி வடிவங்களை கருத்திலெடுத்து ஆரியசார்பாளர்கள் தாமிழி வரிவடிவை தென் பிராமி வரிவடிவம் என கூறினார்.

இதனிடையே வாய் மொழியான ஆரியரின் சமஸ்கிருதம் திராவிடத்தின் பாகத மொழியின் வரிவடிவமான பிராமியை அடியாகக் கொண்டு சமஸ்கிருதத்துக்கு தேவநாகரி



என்ற வரிவடிவத்தை உண்டாக்கினர் வட இந்தியர்.

சமஸ்கிருத எழுத்து வடிவம் கி.மு முதலாம் நூற்றாண்டில் கல்வெட்டுகளில் ஆரம்பமாகின.

குரலோன்




தமிழ்ச்சினிமாவில் 'பாலாஜி சக்திவேல்' என்ற இயக்குநரும் 'காதல்' என்ற படமும் தனி அடையாளமாகியுள்ளன.

ஒரு சினிமா என்பதற்கப்பால் 'காதல்' படம் நமது சமகால வாழ்வின் ஒரு பகுதி என்பதாக இருக்கிறது.

படத்தின் பெயரைக்கேட்டவுடன் படத்தை மிகவும் எளிமைப்படுத்தி இளக்காரமாக யாரும் கருதக்கூடும். தமிழ்ச்சினிமா அந்தளவுக்குக் காதலை அசிங்கப்படுத்தியிருக்கிறது. விதி விலக்காக சில படங்களில் காதல் அதன் இயல்போடு கையாளப்பட்டிருக்கலாம். சிலவற்றில் மிகைப்படுத்தப்பட்டு அழகூட்டப்பட்டு காவியமாக்கப்பட்டிருக்கும். சிலவற்றில் கட்டற்ற கற்பனைப்பூச்சுகளின் மேல் மிதக்கவிடப்பட்டிருக்கும்.

இங்கே படத்தின் பெயர் மட்டும் 'காதல்' என்றிருக்கிறது. படம் சொல்கிற சேதிகளோ 'காதல்' என்பதனூடாக நகர்ந்து பலவாகிறது. அது எழுப்புகிற கேள்விகளும் அதிகம். அவற்றின் கூரும் வீச்சும் கூட அதிகமானதே. சாதாரணமான ஒரு மெக்கானிக்கும் ஒரு வசதியான குடும்பத்தின் ஒரே பெண்ணான பள்ளி மாணவிக்குமிடையில் நிகழ்கிற காதல்தான் படத்தின் கதையாக மேலோட்டமாகத் தெரிகிறது. இந்த மாதிரிக்கதைகள் ஏற்கனவே பல படங்களில் அரைக்கப்பட்டுள்ளன. தமிழ்ச்சினிமாவுக்கு இதென்ன புதிதா என்று யாரும் கேட்கலாம். ஆனால், இந்தக்கதையை வைத்துக்கொண்டு ஒரு கவனிக்கத்தக்க சினிமாவைத் தந்திருப்பதுதான் இங்கே பாலாஜி சக்திவேலின் அடையாளமாகிறது.

செருக்கி எறியவேண்டிய சில கூறுகள் இந்தப்படத்தில் இருந்தாலும் தமிழ்ச்சினிமாச் சூழலில் இவ்வாறான ஒரு படத்தை வெகுசனச் சுவாரஷ்யத்துக்கு ஏற்றமாதிரியும் சமூக அக்கறையோடும் எடுத்திருப்பது சிறப்பு. யதார்த்தத்தளத்தில் நின்று பல உண்மைகளை உணர்த்துகிறது காதல்.

நகரத்தில் வசதியோடு வாழும் போதும் சாதியமனதையும் வாழ்க்கையையும் விட்டுவிடமுடியவில்லை பலருக்கு, என்பதற்கான ஒரு குறியீடே பெண்ணின் குடும்பம். நவீன உலகின் எல்லாவகையான அம்சங்களோடும் பிணைந்துள்ளவர்களின் உட்பகுதி எப்போதும் அசல் நரகம் தான். அங்கே அறம், மனிதப்பண்பாடு, புரிந்துணர்வு, நீதி,நியாயம், நேர்மை என்பதெல்லாம் இருப்பதில்லை. அறிவே கிடையாத மாதிரியே அவர்களின் மனவுலகம் இயங்குகிறது.




தங்களுடைய சாதிக்கௌரவம் இழந்துபோய்விடக்கூடாது என்பதற்காக கணவன் மனைவியாகிவிட்ட குடும்பத்தையே பிரிக்கின்றார்கள்.

**ஆரதி**

இந்தப் பிரிப்புக்கு அவர்கள் என்ன மாதிரியான தந்திரங்களையெல்லாம் செய்து வெற்றியடைகிறார்கள் என்பதுதான் கூரிய சேதி.

எப்போதும் ஒடுக்குதலுக்குள்ளாகும் தரப்பு மிகவும் எளிதாக மேலாதிக்கத்தினரால் வெற்றி கொள்ளப்பட்டு விடுகிறது. மிக இலகுவாகவே ஒடுக்கப்படும் தரப்பு பலியாகிவிடுகிறது. இங்கே இதை மிகத்துல்லியமாக யதார்த்தத்தளத்தில் நின்று காண்பிக்கிறார் பாலாஜி சக்திவேல். எப்படியான தந்திரோபாயங்களால் மேலாதிக்கம் பலம்பெறுகிறது என்ற அறிவுக்கு இது காண்பியச்சாட்சி.

காதலுக்கு எங்கள் மனங்களில் இருக்கிற இடமென்ன என்ற கேள்வியை எழுப்புகிறது படம். இலக்கியத்தில், இதிகாசங்களில், கலைகளில் எல்லாம் காதலைமையமாக வைத்துக்கொண்டாடுகிற நாங்கள் யதார்த்தத்தில் அதனை எப்படி வைத்திருக்கிறோம். எவ்வாறு அணுகுகிறோம்?

வீட்டில் உடன்பாடில்லை, அனுமதியில்லை அதைப்பற்றிய புரிந்துணர்வில்லை என்பதால் தங்களின் காதலை பாலத்தின் கீழே வைத்துக் கொள்கிறார்கள். ஒழுங்கைகளிலும், கோயில்களிலும், ஒதுக்குப் புறங்களிலும தங்கள் அன்பை வளர்த்துக் கொள்கிற, உறவைக்கட்டியெழுப்புகிற சூழ்நிலையிலிருக்கும் யதார்த்தம் புலப்படுகிறது. நமது நடைமுறை இறுக்கம் இப்படித்தான் இளையோரை ஓரங்களுக்குத் தள்ளிவிடுகிறது. சாதியம் எப்படித் தொழிற்பட்டு புதிய தலைமுறையின் வாழ்க்கைத் தெரிவில் வாளை வீசுகிறதென்பதையும் மிகைப்படாமல் சொல்கிறார் பாலாஜி சக்திவேல். ஒரேயொரு இடத்தில் ஒரு வசனம் மட்டுமே சாதியம் குறித்து வருகிறது. ஆனால், சாதியத்தில் அந்தக் குடும்பத்தினர் எவ்வளவு இறுக்கமானவர்களாக காடைத்தனமானவர்களாக இருக்கிறார்கள் என்பதை பாத்திரங்களின் இயங்குமுறைக்கூடாக வெளிப்படுதது கிறது காதல்.

எப்போதும் காதலுக்கு இந்த மாதிரியான விடயங்கள்தானே பிரச்சினையாக இருப்பது. இதிலென்ன புதினமுண்டு? என்றகேள்வி யாருக்கும் எழலாம். அந்தக்கேள்வி சாதாரணமானது. இந்தக் கேள்விக்கு 'காதல்' சொல்லிச் செல்கிற அல்லது முன்னெழுப்பிச் செல்கிற கேள்விகளும் விவரங்களுமே முக்கியமானவை.

தன் வீட்டில் போராடி வெற்றிபெற முடியாத பெண், தான் விரும்புகிறவனை அன்பின் நிமிர்த்தமாக வற்புறுத்தித்தன்னைக் கூட்டிக்கொண்டு எங்காவது போகும்படி முயல்வது. எந்த ஆதாரமோ, ஏற்பாடோ இல்லாத நிலையில் அவளைக்கூட்டிக் கொண்டுபோகும் சாதாரண மெக்கானிக் வயதோ சமூக அனுபவங்களோ இல்லாத பருவத்தில் இத்தகைய நெருக்கடிக்குள் சிக்குகிற நிலைமை. அதற்குள்ளும் சுய கௌரவம் காரணமாக பெண்வீட்டிலிருந்து எதையும் எடுத்துவரக்கூடாது. அவள் மட்டும் வந்தாற்போதும் என்றுவிட்டு பின்பு எல்லாவற்றுக்காகவும் உதவியின்றித் திண்டாடும் அவலம். தன்னிடமும் பணமில்லை, வேறு உதவிக்கும் வழியில்லை என்ற யதார்த்தம்.

நகரத்தில் உழைப்புத்தேடி, எதிர்காலத்தைத்தேடி 'லொடஜ்'சுகளில்'தங்கியிருக்கும் இளைஞர்களின் வாழ்க்கைமுறை. அதன் குரூரமான அவலமும்-அதற்குள்ளும் அவர்களுடைய இதயம் நிறைந்த அன்பும் புரிந்துணர்வும், சினேகமும் (கமெரா பதினைந்து நிமிடத்திற்குமேல் இங்கே மையங்கொண்டிருக்கிறது)

உதவிசெய்ய முனையும் நண்பன் தன்னுடைய வல்லமைகள், சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் இதயபூர்வமாக முன்வைத்துப்பாடுபடுவது.

வீட்டில் புலம்புகிற வயதான பார்வையற்ற மூதாட்டி, இந்தக்கிழவியை பொருட்படுத்தாமல் 'சின்னத்திரை' பார்க்கிற வீட்டுப்பெண்ணின் அதிகாரம் இவர்களை அடித்து அதிகாரம்செய்கிற குடும்பத்தலைவர்கள்.

இப்படி எல்லாத் தளங்களிலும் பன்முகங்கொண்டுவிரியும் 'காதல்' தமிழ்ச்சினிமாவில் ஒரு புதிய பிரகாசமான கோடாகத் துலக்கமடைகிறது.

தமிழ்ச்சினிமாவுக்குக் கட்டாயம் இருக்கவேண்டும் என்று நம்பப்படுகிற சண்டைக்காட்சிகள், நடனம், முத்தம் போன்ற உடற்காட்சிகள், கீழ்த்தரமான பகிடிகள், மினுமினுக்கும லைற்றுகள், உடைகள், புல்வெளி, நதிக்கரை, அலங்கார மண்டபங்கள், துரத்தும் வாகனங்கள் எதுவுமில்லாமல் 'காதல்' எடுக்கப்பட்டுள்ளது. 'காதல்' பலம் பெறுவது அது நமது வாழ்வின் இருண்ட பகுதிகளின மீது ஒளிபாய்ச்சிக் காண்பிப்பதன் மூலமே (இந்தப்படத்தைப்பற்றி இன்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுத வேணும். இப்போது இந்தப்பகுதியின் அளவுகருதி இக்குறிப்பு எடுக்கப்பட்டுள்ளது)

யதார்த்தத்தளத்தில் நின்று உண்மைகளைப் பேசுவதால் இது கூடுதல் ஈர்ப்பைத் தருகிறது. இந்த உண்மைகள் சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடுகள். எல்லா உண்மைகளையும் முகம்சுழிக்காமல் பார்க்க வேண்டிய அவசியம் சகல தரப்பினருக்கும் உள்ளது.

ஒரு பக்கம் ஒடுக்குவோரின், சாதியவான்களின் மேலாதிக்கவாதிகளின் தந்திரங்களும் நீதியின்மையும் அவர்களுடைய மனவுலகும் அம்பலப்படுத்தப்படுகிறது. மறுபக்கம் பாதிக்கப்படும் தரப்பு விழிப்புடனிருக்க வேண்டிய அவசியம் காட்டப்படுகிறது.

ஒரு ஏழைத்தாய் எவ்வளவு மோசமாகப் பாதிக்கப்படுகிறாள். எவ்வளவுக்கு அந்தரித்துப் போகிறாள். என்பதனூடாகவே இதனை விளங்கிக் கொள்ளமுடியும்.

மெக்கானிக்காக வரும் 'பரத்' பள்ளிமாணவியாகவரும் சந்தியா,



கராஜ்ஜில் உதவிப்பையனாகவரும் அருண்குமார், பரத்தின் நண்பனாக வரும் சுகுமார், ஒற்றைக்கை சித்தப்பாவாக வருகிற கிருஷ்ணமூர்த்தி, பெண்ணின் அப்பா தண்டபாணி எனச் சகலருமே யதார்த்தமாக நடித்திருக்கிறார்கள். இதில் பலர் புதியவர்கள்.

நட்சத்திர நடிகர்கள் பலர் பார்த்து வெட்கப்படவேண்டிய அளவுக்கு இந்தப்படத்தின் இயக்கம் நிகழ்கிறது. இசை, படத்தொகுப்பு, ஒலியமைப்பு, கமெரா எல்லாருமே வித்தியாசமான அணுகுமுறையில் கையாளப்பட்டிருக்கின்றன.

விஜய் மில்டனின் கமரா தனி முத்திரை. அதேபோல ஜோஷ் வாசிறிதரின் இசையும், சந்தியா ரவி கிருஷ்ணா, பரத் போன்ற இளம் நடிகர்களும் செல்வராகவன்,பாலாஜி சக்திவேல்,சேரன் போன்ற இயக்குநர்களும் புதிய கோட்டைவரைய முயல்கிறார்கள். ●

---

# தோல்வியை ஏற்கமுடியாத அவுஸ்திரேலிய அணியினர்

உலக கிரிக்கெட் அரங்கில் தொடர்ச்சியான வெற்றிகளை குவித்து தன்னை ஓர் அசைக்க முடியாத அணி என்பதை நிரூபித்து வரும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி பலமான அணி என்பதில் எவருக்கும் எந்தவித சந்தேகமுமில்லை.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் அவர்களது அபாரமானதும் மயிர்க் கூச்செரியும் திருப்பு முனையான செயற்பாடுகளின் மூலம் பெறப்படும் வெற்றிகள் காரணமாகின்றன.

குறிப்பாக உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளர்களான மெக்ராத். கிலெஸ்பி. கஸ்பரோவிஜ். பிரெட்லீ. ஷேன் வோர்ன் போன்றவர்கள் பக்கபலமாக அமைய துடுப்பாட்டத்தில் அதிரடி மன்னன் கில்கிறிஸ்ட் மற்றும் ஹெய்டன். லாங்கர். மாட்டின். பொண்டிங் என்று அனைவருமே சராசரியான ஓட்டங்களை பெறுவதுவெற்றி என்பது அவர்களுக்கு கடுமையான இலக்கை அமைவதில்லை. இது ஒட்டு மொத்தத்தில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றி நடைக்கு பக்கபலமாகவுள்ளது.

இது ஒரு புறமிருக்க அவுஸ்திரேலிய அணி தோல்வி ஒன்றை சந்திக்கும் போது ஜீரணிக்க முடியாது போவதுதான் வேதனைக்குரியதாக உள்ளது.

இது ஏனைய கிரிக்கெட் அணிகளை தாழ்மைப்படுத்துவதாக அமைவதுடன் தோல்வியை தமக்கு சாதகமற்ற முறையில் நிரூபிக்கவைத்ததுவும் அவ் அணியின் போக்கிலித்தன செயற்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டி விடுகின்றது.

இதன் மூலம் தானே பலமான அணி என்ற ஸ்தானத்தை தக்க வைக்க விரும்பும்அவுஸ்திரேலியா. எதிரணிகள் தனக்கு எதிராக பெறும் வெற்றிகளை பெறுமதியற்றதாக நிரூபிக்க கங்கணங் கட்டி நிற்பதையே காட்டுகின்றது.

இது தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் நிதர்சனமான உண்மை என்பதை கிரிக்கெட்டை உன்னிப்பாக அவதானிப்பவர்கள் மறுத்துவிடமுடியாது.

குறிப்பாகக் கடந்த வருடம் இந்தியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.



இதில் இந்தியாவுக்கு எதிராக 34 வருடங்களாக ஈட்டமுடியாதுபோன டெஸ்ட் தொடரைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்தது.

இதே தொடரில் மும்பையில் நடைபெற்ற நான்காவதும். இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி படுதோல்வி அடைந்தது. இத்தோல்வி அவ் அணிக்கு கிடைத்த அவமானகரமான தோல்வியாக அமைய அத் தோல்வியை ஜீரணிக்கமுடியாது அதனை மூடி மறைக்க மேற்கொண்ட முயற்சி படுகேவலமானது என்பதை கிரிக்கெட் உலகம் உணராமல் இருக்க முடியாது. அதாவது எதிரணியின் திறமையை கொச்சைப்படுத்தும் வகையில் இப்படியும் ஒரு ஆடுகளம் அமைப்பதா? முழுக்க முழுக்க சுழற்பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாகவுள்ளது. இதற்கு தீர்வுகாண வேண்டும் என முழங்கியதுடன் சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி)வரை சென்றது. இது தாமே கிரிக்கெட்டில் அனைத்தும் தெரிந்தவர்கள் தாங்களே என்று நிரூபிக்க விளைந்துள்ளது.

ஆசிய நாட்டவர்கள் வளைந்து கொடுக்கும் மனப்பான்மையை கொண்டவர்கள் என்பதால் மிரட்டி பணிய வைக்கும் மேற்கத்தையர்களின் அதிகாரப் போக்கின் ஓர் அங்கமே இது.


தமக்குத் தோல்விகள் ஏற்படும் போது மட்டும் காரணங்களை அடுக்கிக் கொண்டு போகும் அவுஸ்திரேலியா ஏனைய அணிகள் தமக்கு எதிரான போட்டியில் மோசமான தோல்விகளை சந்திக்கும்போது தமது வெற்றியை பெரிதுபடுத்தியும் எதிரணியை பலவீனமாகவுள்ளது என கூறுவதும் வேடிக்கையாகவும் வேதனையாகவுமுள்ளது.

குறிப்பாக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் முதலாவது டெஸ்ட் போட்டியில் வெறும் 72 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வி அடைந்தது. இதில் மெக்ராத் 24 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 8 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இது இந்தியாவிலோ. இலங்கையிலோ அன்றி இங்கிலாந்திலோ நடைபெற்ற போட்டியல்ல. அவர்களது சொந்த மண்ணில் நடை பெற்ற போட்டி.

இதில் மெக்ராத் தனது திறமையை வெளிப்படுத்தினார் என்பது ஒருபுறம்இருக்க ஆடுகளம் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது என்றவாதத்தை பாகிஸ்தான் முன்வைக்கலாம் தானே. ஆனால். அப்படி எதுவும் நடைபெறவில்லை. அவர்கள் தோல்வியை மனதார ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

இது கனவான்களின் விளையாட்டு அல்லவா? ●



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 05

### பகுதி -30

"திடீரென்று எழுந்து நின்ற டிப்ஸ் கத்தினான். "இல்லை டிப்ஸ். இங்கிருந்து வெளியே போகமாட்டான். டிப்ஸ் வீட்ட போக மாட்டான்.ஒருபோதும் போகமாட்டான்."

"உங்களுக்கு போக விருப்பமில்லை யெண்டு எனக்குத் தெரியும் டிப்ஸ் உங்களுக்கும் எனக்கும் இந்த விளையாட்டறையில் செலவழிக்கத் தரப்பட்டது ஒரு மணித்தியாலம் தான். அந்த ஒரு மணித்தியாலம் முடிந்ததும் அது பற்றி நீங்கள் என்ன நினைத்தாலும் நான் என்ன நினைத்தாலும், யார் என்ன நினைத்தாலும் இன்றைக்கான நேரம் முடிஞ்சு போச்சுது. நாங்கள் இப்ப வெளியில் போகவேணும். இப்ப நாங்கள் போகவேண்டிய நேரம் வந்திட்டுது. உண்மையில் பார்த்தால் அந்த நேரம் கடந்து போய்விட்டது"

"இன்னொரு படம் கீறேலாதா?" கன்னத்தில் கண்ணீர் துளிகள் உருண்டு கொண்டிருக்க டிப்ஸ் என்னைக் கேட்டான்.

"இண்டைக்கு ஏலாது" என்று அவனிடம் சொன்னேன்.

"உங்களுக்கு தர ஒரு படம் கீறே லாதா? இன்னும் ஒரே ஒரு படம். உங்களுக்கு தாறதுக்கு...." கெஞ்சினான் அவன்.

"முடியாது. எங்களுடைய நேரம் இண் டைக்கு முடிந்துவிட்டது." நான் சொன்னேன்.

அவன் எனக்கு முன்னால் வந்து நின்றான். அவனுடைய கோட்டை அவனுக்கு அணிவிக்க ஆயத்தமாக தூக்கிப் பிடித்தேன்.

"வாங்கோ டிப்ஸ். கோட் கையில் உங்கட கைகளை ஓட்டுங்கோ" அவன் அதைச் செய்தான்.

"இப்ப நீங்க கதிரையில இருந்தீங்க ளெண்டா நான் பூட்சுகளை போட்டு விடுவேன்." "வீட்ட போகேல்ல...வீட்டபோகவிருப்பமில் ல....வீட்ட போகோணும் போல இல்ல" என்று முணுமுணுத்துக் கொண்டே கதிரையில் அமர்ந்துகொண்டான்.

"உங்களுக்கு எப்பிடியிருக்கும் எண்டு எனக்கு விளங்குது" என்று அவனுக்குச் சொன்னேன்.

ஒரு பிள்ளை, எதிர்வு கூறக்கூடிய, நிலைபேறான, யதார்த்தமான வரையறை களிலிருந்தே அதன் பாது காப்புணர்வைப் பெற் றுக்கொள்கிறது. அவனுடைய உணர்வுகளுக்கும் அவனுடைய



செயல்களுக்குமிடையே வேறுபடுத்திக்காண டிப்ஸ்சுக்கு உதவுவதையே விரும்பினேன். இதில் ஒரு பகுதியை அவன் எட்டியிருந்தான். இந்த ஒரு மணித்தியாலம் அவனது இருப்பின் ஒரு பகுதிதான் என்பதையும் ஏனைய உறவுகள் மற்றும் பட்டறிவுகளை விட அதற்கு முக்கியத் துவம் கொடுக்கக்கூடாது. என்பதையும் எமது வாராந்த சந்திப்புகளுக்கு இடையே உள்ள அனைத்து நேரங்களும் முக்கியமானவைதான் என்பதையும் அவனுக்கு உணர்த்துவிக்க விரும்பினேன். என்னைப் பொறுத்தவரை, எந்த ஒரு வெற்றிகரமான நோய்நீக்




கக்கலை சார்ந்த பட்டறிவினுடைய பெறுமதியும் அந்த சந்திப்புக்கு வரும்போது குறித்த நபர் கொண்டுவருபவற்றுக்கும் சந்திப்பிலிருந்து செல்லும்போது அவர் கொண்டு செல்பவற்றுக்கு மிடையே பேணப்படும் சமநிலையிலேயே தங்கியுள்ளது. சிகிச்சையானது குறித்த நபரின் அன்றாட வாழ்க்கையிலுள்ள மேலாதிக்கமான, கட்டுப்படுத்தும் வகை பட்டறிவாக மாறினால், அதனுடைய பயன் விளைவுத்தன்மை குறித்த பாரதூரமான சந்தேகங்களை நான் கொண் டிருக்கிறேன். தனக்கான பொறுப்பை தானே ஏற்றுக்கொள்ளும் விதத்தில், தன்னில் அதி கரிக்கும் இயலுமைகளை தன்னுடன் எடுத்துச் செல்லும் பொறுப்பு அவனுக்கு இருக்கிறது என்றும் அந்த வகையில், தனது உளவியல் ரீதியான விடுதலையை பெற்றுக்கொள்ளலாம் என்றும் டிப்சுக்கு உணர்த்தவே நான் விரும் பினேன்.

அவனது பூட்சுகளை மாட்டிக்கொண் டிருந்தபோது நிமிர்ந்து அவனைப் பார்த்தேன். அவன் மேசைக்குக் குறுக்காக கைகளை நீட்டி நீரோடிருந்த சூப்பிப் போத்தலை எடுத்தான். எடுத்த அவன் சிறு குழந்தைபோல் அதைச் சூப்பிக் கொண்டிருந்தான். இறுதியாக, பூட்சுகள் போடுவது முடிவுக்கு வந்தது.

" சரி. இப்ப நீங்கள் ஆயத்தமாகி விட்டீங்கள்" என்று நான் கூறினேன்.

"தீந்தை போத்தலுக்கு மூடி போடு வோம்" அவன் இன்னொரு முயற்சி செய்தான்.

"இப்போ அதைச் செய்ய வேண்டாம்" என்றேன்.

"அவை காஞ்சு போகாதா?' என்றான் அவன். மூடியை மூடாவிட்டால் காயும்தான். நான் பிறகு மூடிகளை மூடிவிடுறன்" என்றேன். "விரல் தீந்தை குப்பிகளுக்கு மூடிபோடுவீங்களா?" அவன் கேட்டான்.

"ஓம். அதையும் செய்யிறன்."

"தூரிகைகளையும் கழுவுவீங்களா?"

"ஓம்"

டிப்ஸ் ஒரு பெருமூச்சை வெளி விட்டான். அவனுடைய உத்திகள் எல்லாம் முடிந்து விட்டது. வெளிப்படையாகத் தெரிந்தது.

அவன் எழுந்து கதவுக்கு வெளியே நடந்தான். கதவுக்கு வெளியே சென்றதும் திடுதிடுப்பென நின்றுவிட்டான். கையை நீட்டி கதவில் இருந்த அட்டையை "குழப்ப வேண்டாம்" என்று இருந்ததை "விளையாட்டு சிகிச்சை அறை" என்பதாகத் திருப்பிவிட்டான். பின்னர் கதவில் தட்டிய அவன் "எங்கட விளையாட்டு அறை" என்றான். மண்டபம் நெடுக நடந்து, வரவேற்பு அறைக்கு வந்தவன், திகைத்துப்போய்விட்ட தாயாரோடு, எந்தக் குழப்படியுமின்றிச் சென்றுவிட்டான்.

(தொடரும்....)





IIS
COMPUTER COURSES

Diploma in MS Office
Diploma in Information Technology
Diploma in Internet Technology
Diploma in Computer Programming
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Desk Top Publishing
Diploma in Hardware Technology
Certificate in Java Programming
Certificate in Visual C Programming
Certificate in Visual Basic Programming

New Batches Start on :
Batch 1 [ Week Day ] : 5. 01. 2005
Batch 2 [ Weekend ] : 8. 01. 2005
Batch 3 [ Weekend ] : 23. 01. 2005
at 10.00 A.M.

IIS ன் மேற்படி Diploma கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்யும் நீங்கள் சர்வதேச TATA நிறுவனத்தின் சான்றிதழ் ஒன்றையும் பெற தகுதியுடையவர்களாகிறீர்கள்



கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
"An *Edexcel* approved training Centre"
#100, [illegible] Road, Jaffna. TP No. : 021-222 2831/ 021-222 6933


(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிரைச் சிறி ஈகம் செய்த செய்தி முதலில்வந்த போது மனது வெடித்துச் சிதறியது. சிறியின் மரணத்தைத் தொடர்ந்து ரஞ்சியும் போராளியாகப் போய்விட்ட சேதி பின்னர் வந்தபோது நான் முற்று முழுதாக உடைந்துபோனேன்.

அதன் பின் திருமணத் தைப்பற்றி நான் யோசிக்கவில்லை. சுவிசில் இயந்திரமயமான வாழ்வில் பணம் மட்டும் குவிந்த வண்ண மிருந்தது. சொந்தங்களின் உயர்வுக் காய் என் உழைப்பைப் பகிர்ந்தேன். கணவனை இராணுவ வேட்டுக்குப் பலிகொடுத்துவிட்டு தனுசன், கீச் என்ற இரண்டு குழந்தைகளோடு வாழ்ந்துவரும் சாந்தாதான் இந்த மண்ணில் இப்போது எனக்குப்பற்றுக் கோடு.

சாந்தா போனமாதம் உருக்கமாக வேண்டி எழுதியிருந்தாள் "தம்பி... இன்னும் எவ்வளவு காலம்தான் தனிமரமாக இருக்கப் போறாய்? வயதும் முப்பத்தி மூன்று தாண்டியிட்டுது... கலியாணம்தான் ஒரு மனிதனின் வாழ்வை முழுமை யாக்குகிறது. பல இடங்களிலிருந்து கேட்டு வருகினம்... மாணிக்க வாத்தி யாரின்ர மகள் சந்திரா இப்ப ரீச்சராக இருக்கிறாள்... வலு கெட்டிக்காரி ஆளும் நல்ல வடிவு.... தாயைப் போல வடிவான கண்....நல்ல குடும் பம்...ஒரே பிள்ளை....சொத்து சுகம் போதியளவு இருக்கு... இரத்த உருத்தான இடம்...."

தங்கையின் கடிதம் என் மனதை அதிகம் குழப்பாவிட்டாலும், ஊர்போகும் ஆசை மனதில் எழுந்து விட்டது. பலவித நினைவுகளுடனே முயற்சியில் இறங்கினேன்.

"இன்று எங்கள் மண் எப்படி இருக்கும்? அந்நியன் காலடி பட்டு கற்பழித்த பூமி" என்று கவிஞன் பாடியதுபோல் எல்லாம் தலை கீழாகப் போயிருக்குமோ?

திட்டமிட்டபடி சுவிசிலி ருந்து தாயகம் வந்தாகிவிட்டது. இதோ கூப்பிடு தூரத்தில் வீடு. எதிர்த்திசையில் ஒரு இளம் பெண் சயிக்கிளில் வருகிறாள். என்னருகே வந்ததும் சயிக்கிளை சிலோவாக்கி, என்னைப் பார்த்துப் பின் நாணிச் செல்கிறாள். யாராக இருக்கும்?

அந்தக்கண்கள்... அந்தக் கண்கள் புத்தகப்பையுடன் புதுக்குளத் தடியில் சிறுமியாகப் பார்த்த- குருக் கள் பள்ளிக்கூடத்தில் அதிக புள்ளியுடன் புலமைப்பரிசில் பாஸ் பண்ணியதாகக் கேள்விப்பட்டபோது சிறுமியாகப்பார்த்த சந்திரா.... ஓ.... என்னமாய் வளர்ந்து பூத்திருக்கிறாள்.

வீடு வந்துவிட்டது.

சிதைந்துபோன வீட்டின் பாதிப்புற்றிராத ஒரு பகுதியை கிடுகால் வேய்ந்து.. சோபை இழந்த மூதாட்டி போல காட்சியளிக்கிறது.

வாசல் கதவைத் தட்டுகிறேன் தங்கை சாந்தா கதவைத் திறக்கிறாள். கண்கள் பனித்திட "அண்ணா என்று ஆவலோடு அழைக் கின்றாள். தயாளசிங்க அத்தானின் படம் சுவரில் மாலையுடன் தொங்கு கிறது. தனுசனும், கிச்சும் நான் யாரென்று தெரியாமல் விழிக் கிறார்கள். "மாமா.... உங்கட சுவிஸ் மாமா..." சாந்தா சொல்ல, நான் பெட் டியைத் திறந்து விளையாட்டுச் சாமான்களையும் சொக்கிலேட்டுக் களையும் எடுத்து நீட்டுகிறேன்.

ரோபோ பொம்மையை வாங் கிக்கொண்டு "துவக்கு இல்லை யோ மாமா?"என்கிறான் தனுசன்.

"ஏன்....?" வியப்போட கேட்கிறேன்.

"அப்பாவைச் சுட்டவங்களைச் சுடுறதுக்கு...." நான் அவனை ஆழமாக நிமிர்ந்து பார்க்கிறேன். பனைகள் தறிக்கப் பட்டாலும், வடலிகள் வளர்ந்து வைரம் பெற்று வானுயர்ந்த மரங்களாய்.... ஓ.....இந்த மண்! ●

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

*பாவலா?*

*மீட்புப் பணிக்கு உதவ அமெரிக்க இராணுவம் பாரிய கப்பல்களையும், விமானங்களையும் இலங்கைக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் மீண்டும் கொண்டு செல்வார்களா?*

*சி.ஜீரோதரன்,*
*நீர்வேலி.*

வெளியேறச் சொன்னால் கொண்டு செல்வார்கள். நிரந்தரமாகத் தங்கச் சொன்னால் இங்கேயே வைத்துக்கொண்டு இருப்பார்கள்.

*அண்மையில் யாழ் நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, விமல்வீரவன்ச உளள்ட்ட குழுவிற்கு நல்ல வரவேற்பு வழஙகபபட்டதாம் கவனித்தீரா பாவலா?*

*கெ.திவ்வியன்,*
*புதுக்குடியிருப்பு.*

கவனித்தேன்...கொடுத்த வரவேற்பில அவர்கள் வேர்க்க விறு விறுக்க ஓடித்தப்பியதையும் கவனித்தேன்.. சிலரைப் பல காலமும்

*கு.சுதன்,*
*முல்லைத்தீவு.*

இந்தப்பேரனர்த்தம் மட்டுமல்ல, எந்தப் போரனர்த்தமும் கூட எவர்க்கும் ஏற்படக்கூடாது என்பதே மனிதநேயம் கொண்ட அனைவரதும் விருப்பாகும்.

*பாவலரே!*

*திருவள்ளுவர் தற்போது உயிருடன் இருந்தால் எப்படி திருக்குறள எழுதுவார்?*

*அ.சங்கர்,*
*வவுனியா.*

எழுதிய திருக்குறளை எழுதியபின் நான் கற்றேன் எழுதினும் ஒழுதாமை நன்று.

என எழுதியிருப்பார்.

*பாவலா!*

*மற்றவர்களின் முன்னேற்றத்தில் வயிரேரிபவர்கள் பற்றி தங்களின் கருத்து.*

*தர்ஷா,*
*வவுனியா.*

தன்னை முன்னேற்ற வழி தெரியாத பரிதாபத்திற்குரியவர்கள்.

*அன்பின் பாவலா!*

*தங்களை கவர்ந்த ஒரு 'ஹைக்கூ' கவிதை கூறுங்களேன்.*

*சிவானி,*
*திருவையாறு.*

நாற்று நடும் பெண்களின்
பாடல்களில் மட்டும்
சேறுபட்டிருக்கவில்லை.
(ஜப்பானியஹைகூ)

*பாவலா?*

*அரசியல் சுனாமி அடங்கிப் போயுள்ளதா?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பாணம்.*

கொந்தளிக்கத் தருணம் பாத்திருக்கிறது.

*பாவலா!*

*கம்பராமாயணத்திற்கும் வான்மீகி இராமாயணத்திற்கும் என்ன வித்தியாசம்?*

*கு.ஜெயகாந்தன்,*
*கிளிநொச்சி.*

அது கம்பர் எழுதியது இது வான்மீகி எழுதியது.



# பாவலன் பதில்கள்

லரைச சில காலமும் ஏமாற்றலாம் எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது என்பதை இனியாவது அவர்கள் புரிந்து கொள்ளட்டும்!

*பாவலா!*

*மணற்காட்டில் உள்ள நலன்புரி நிலையத்தை படையினர் தீயிட்டு கொளுத்தி உள்ளார்களே கவனித்தீரா ?*

*வி.கெங்காதரன்,*
*புதுக்குடியிருப்பு.*

தீயிட்டு கொளுத்துதல் தீயவர் செயலே....!

*பாவலா!*

*அண்மையில் ஏற்பட்ட பேரனர்த்தம்போல் மீண்டும் ஏற்படுமா?*

*அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் பாரபட்சம் காட்டி வருகின்றதே பாவலா?*

*கெ.நகுலாம்பிக்கை,*
*கிளிநொச்சி.*

நீதியாளர்கள் பாதிக்கப்பட்டோருக்கு பாரபட்சம் காட்டமாட்டார்கள்!

*பாவலரே!*

*எமது மக்களின் துயர் கண்டு உதவும் வெளிநாட்டு உறவுகள்பற்றி நீர்கூற விரும்பவது.*

*ப.பிரியா,*
*யாழ்ப்பாணம்.*

மனிதம் நிறைந்த உறவுகள் மதிக்கப்பட வேண்டிய உறவுகள.

*பாவலா!*

*அமெரிக்க இராணுவ வீரர்களின் உதவி வருகையின் பின்னணியில் ஏதாவது சூட்சுமங்கள் இருக்குமா?*

*ராஜா,*
*முழங்காவில்.*

சோனியன் குடும்பி சும்மா ஆடுமா?

*பாவலா!*

*சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வெளிநாட்டு உதவிகளை இந்தியா மறுத்துள்ளதே*

*அருளினி,*
*கிளிநொச்சி.*

கடன் வாங்கிக் கடன் கொடுக்க முடியாதே.




உங்களுக்கென்ன தெரியும். முல்லைத்தீவு ரவுணுக்க நிண்டுபாக்கிறன். சும்மா கிபீர் வந்தமாதிரி சத்தங் கேட்டுதாம். நான் ஓடியே சேர்ந்திட்டன்.

வட்டுவாகலயே அள்ளிக் கொண்டுபோவிட்டுதாம். கடக்கரையில கிடந்த ஆமிமாரெல்லாம் அழிஞ்சிருப்பாங்கள்.

விசரா கன முகாங்களைக் காணேல்லயாம். திருகோணமலையில ஒரு ஆசுப்பத்திரி அப்பிடியே போட்டுதாமே. துறை முகத்தக் காணேல்லயெண்டு சொன்னாங்கள். ஆனா அம்பாறை சேதம் கூடவாம் எண்ணுறாங்கள்.

கொழும்பென்ன மாதிரி. மருதானை கம்பகா எல்லாம் சேதமாம். ஆனா ஒரு கதையெல்லே. சட்டவிரோதமா கரையில இருந்த சனங்கள் ஆறாயிரம் பேருக்கு மேல வீடிழந்து போச்சினமாம் எண்டு அரசாங்கம் அறிவிச்சிருக்கு.

அவயள் அப்பிடி இருந்ததுக்கும் அரசுதானே காரணம். நிவாரணக்குழுவெல்லாம் வருதாம் வருதாம் எண்டினம், எங்கயாம்.

காலி மாத்தறை கம்பகா மருதானை எண்டு உள்ள சிங்கள ஊருகளுக்கு விட்ட பிறகு தானே மற்றவைக்கு. அதுசரி உதில பக்கத்தில முல்லைத்தீவில சனத்தைக் கடல் கொண்டு போனது கிளிநொச்சிச் சனத்துக்கு தாளையடிச்சனம் வந்தபிறகு ஒலிபெருக்கியில சொல்லித்தான் தெரியும்.

அம்பாறை திருகோணமலையெல்லாம். கடல் பூந்தது அரைமணித்தியாலத்திலயே தெரிஞ்சிட்டுதே.

எங்களுக்குத்தான் தொலைத்தொடர்புமில்லை ஒழுங்கா மின்சாரமுமில்லையே. இருந்தரேடியோவும் எல்லாம் முடிஞ்சபிறகுதானே வாய் திறந்தது.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–102



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.


## படத்திற்கு மெருகூட்டுங்கள்–101

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................................
முகவரி : ..............................................................
..............................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –100



**ச.புஸ்பானந்தன்,**
**கறுக்காக்குளம்,**
**மன்னார்.**

## பரிசுக்குரிய வரிகள்

*இருபத்தியாறில் இரைந்து வந்த பேரலையே-நீ*
*எதற்காக எம்மவரைக் காவுகொண்டாய்-சொல்*
*வன்செயலால் வதையுண்ட நம்மவரை*
*எதற்காக துயர்க்கடலில் மூழ்க வைத்தாய்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*சுனாமி என்னும் கொடிய அரக்கனால்*
*சொல்ல முடியாத துயரங்கள்*
*யார் வந்து ஆறுதல் சொல்லியும்*
*மீண்டிடுமா போன உயிர்கள்.*

இ.நிஷா,
பரந்தன்.

*சுனாமியால் சுக்குநூறாகிய உறவுகளே*
*உங்கள் சரித்திரம் உதயமாகும்*
*பொறுத்திருங்கள் இப்பூமியிலே*
*கடற்தாயே வாழ்வழிப்பாள்.*

செ.குமுதினி,
உதயநகர் மேற்கு.

*உறவிழந்த உறவுகள்*
*சிந்திய கண்ணீரில் கரைந்தது எம்தேசம்-ஆனாலும்*
*துவண்டுபோகவிடமாட்டோம்; துணையாயிருப்போம்-சிறு*
*தூரத்தே தெரியும் தேசவிடியல் நம் மீளெழுகையை சொல்லி-விடியும்.*

சி.ஜெயபாபு,
கிளிநொச்சி.

*எதிரிதந்த துயருடன் இச்சுனாமியும் தந்தது துயரம்*
*கட்டிய கணவன் கைபிடித்த மனையாள்-குடிமனை*
*குலாவிய குழந்தை கூடிய உறவுகள்-இத்தனையும்*
*இழந்து ஏங்கியழும் எம்மவரை எப்படித்தான் ஆற்றுவது?*

நா.துஸ்யந்தினி,
யாழ்ப்பாணம்.

*கண்கெட்ட சுனாமியின் கோரமான கொந்தளிப்பால்*
*தங்கள் உறவுகளை இழந்து கண்களில் கண்ணீர்*
*வடிய கதறி .அழும் எம் உறவுகள் மீண்டும் நிமிர்ந்து*
*நிற்க நாம் உதவிக்கரம் நீட்டுவோம்.*

க.ஜெயகுமார்
புளியங்குளம்

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# நலன்புரி நிலையங்களில் எத்தனை நாள் வாழமுடியும்...?


























இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.